# 5

# வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும்

## 5.1 பொதுநோக்கு

**இலங்கையின் வெளிநாட்டுத் துறை மிதமான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் மற்றும் உயர்ந்த வெளிப்பாய்ச்சல்கள் போன்ற பண்புகளால் 2016இல் தொடர்ந்தும் அழுத்தங்களின் கீழ் காணப்பட்டது.** வெளிநாட்டுத் துறையில் காணப்பட்ட அழுத்தங்கள் உலக அதேபோன்று உள்நாட்டு அபிவிருத்திகளிலும் பிரதிபலிப்பைக் காட்டியது. வெளிநாட்டுப் பக்கத்தில், ஐக்கிய அமெரிக்காவின் நாணயக் கொள்கையை இயல்பு நிலைப்படுத்தல், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜப்பான் போன்ற முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் பொருளாதார வளர்ச்சியின் மந்தமான வேகம் மற்றும் மத்திய கிழக்கின் பூகோள அரசியலின் நிச்சயமற்ற தன்மை என்பன இலங்கையின் சென்மதி நிலுவை மீது மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியது. உள்நாட்டுப் பக்கத்தில், வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல்களின் கணிசமான குறைவு, அதிகரித்த இறக்குமதிக் கேள்வி படுகடன் பணிக் கொடுப்பனவுகளின் பேரிலான வெளிப்பாய்ச்சல்கள் மற்றும் அரச பிணையங்களிலிருந்தான வெளிப்பாய்ச்சல்கள் என்பன ஆண்டு காலப்பகுதியில் வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டினை நோக்கி ஒரு சவாலை ஏற்படுத்தியது.

**நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையின் விரிவாக்கம் மற்றும் நிதியியல் கணக்கின் மிதமாக்கலுடன் 2016இன் சென்மதி நிலுவை வெளிநாட்டுத் துறையின் குறைவான செயலாற்றத்தைப் பிரதிபலித்தது.** நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை முன்னைய ஆண்டின் மொ.உ.உற்பத்தியின் 2.3 சதவீதத்திலிருந்து 2016இல் 2.4 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது. குறிப்பாக முதலீட்டுப் பொருட்களுக்கான உச்ச உள்நாட்டுக் கேள்வியினால் இறக்குமதிச் செலவினத்தின் அதிகரிப்புடன் ஆண்டு காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்த அதேவேளையில் பன்னாட்டுப் பண்டங்களின் விலைகள், மற்றும் ஏற்றுமதி அளவுகள் இரண்டிலும் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் வணிக ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் சுருக்கமடைந்தன. மீள்முதலீட்டு வருவாய்களின் பேரிலான வெளிப்பாய்ச்சல்கள் மற்றும் பங்கிலாப கொடுப்பனவுகளின் மத்தியிலும் ஒதுக்குச் சொத்துக்களிலிருந்தான வருவாய்களின் வீழ்ச்சி மற்றும் அதிகரித்த வட்டிக் கொடுப்பனவுகளின் விளைவால் ஆண்டு காலப்பகுதியில் முதன்மை வருமானக் கணக்கின் பற்றாக்குறையும் விரிவடைந்தது. எனினும் வர்தகப் பற்றாக்குறை மற்றும் முதன்மை வருமானக் கணக்குப் பற்றாக்குறையின் பாதகமான விளைவானது பணிகள் கணக்கு மற்றும் இரண்டாந்தர வருமானக் கணக்கின் மிகைகளால் ஓரளவிற்கு குறைவடைந்தது. குறிப்பாக சுற்றுலாவிலிருந்தான உயர் வருவாயுடன் பணிகள் கணக்கின் மிகை தொடர்ந்தும் அதிகரித்த அதே வேளையில் 2016இல் தொழிலாளர் பணவனுப்பல்களின் மிதமான விரிவாக்கலிருந்து இரண்டாந்தர வருமானக் கணக்கும் நன்மையடைந்தது. அதேவேளை, படுகடனை உருவாக்காத மூலங்களின் வழியாக மிதமடைந்த உட்பாய்ச்சல்களுக்கு மத்தியிலும் நிதியியல் கணக்கானது தொடர்ந்தும் அதிகரித்த வெளிப்பாய்ச்சல்களை அனுபவித்தது. குறிப்பாக படுகடன் பணிக் கொடுப்பனவுகளின் தொடர்ச்சியுடன் இணைந்து வதிவற்றோரினால் மேற்கொள்ளப்பட்ட அரச பிணையங்களின் முதலீடுகளைத் திரும்பப் பெற்றதனால் ஏற்பட்ட மூலதன வெளிப்பாய்ச்சல்கள் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் குறைந்த மட்டம் என்பன 2016இன் நிதியியல்

கணக்கில் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியது. நிதியியல் கணக்கின் படுகடனை உருவாக்காத உட்பாய்ச்சல்களின் குறைவு மற்றும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையின் விரிவாக்கம் என்பன வெளிநாட்டில் இருந்தான நிதியிடலினை அவசியமாக்கின. இதன்படி நாட்டிற்கான பன்னாட்டு முறி மற்றும் கடன்களின் ஊடாக சென்மதி நிலுவையின் நிதியிடல் தேவைப்பாடானது நிவர்த்தி செய்யப்பட்ட அதேவேளையில், பன்னாட்டு நாணய நிதியத்தின் மூன்று வருட விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஒழுங்குபடுத்தல்கள் வெளிநாட்டுத் துறையினை வலுப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டது. 2016இல் இத்தகைய அபிவிருத்திகள் சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவை ஐ.அ.டொலர் 500 மில்லியனான பற்றாக்குறையினை பதிவுசெய்ய விளைவானது. 2016இன் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளும் ஐ.அ.டொலர் 6.0 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்ததுடன் இது 3.7 இறக்குமதி மாதங்களுக்கு சமமாக காணப்பட்டது.

**செலாவணி வீதத்தின் உயர்ந்த அழுத்தங்களின் ஊடாக 2016இல் வெளிநாட்டுக் கணக்குகளின் அபிவிருத்திகள் பிரதிபலிக்கப்பட்டன.** வெளிநாட்டு செலாவணி திரவத்தன்மை வழங்கலின் ஆதரவால் 2016இன் முதலரைப் பகுதியில் சார்பு ரீதியில் உறுதியான மட்டங்களில் பேணப்பட்ட செலாவணி வீதமானது மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி வழங்கலின் படிப்படியான கட்டுப்படுத்தலினால் இரண்டாவது அரையாண்டில் உயர்ந்த வீதமொன்றில் தேய்வடைந்தது. வதிவற்ற முதலீட்டாளர்களால் சொத்துப் பட்டியல் மீள் சமப்படுத்தப்பட்டதனால் ஐ.அ.டொலர் வீதங்களில் ஏற்பட்ட உயர்வினைத் தொடர்ந்து இரண்டாவது அரையாண்டில் மத்திய வங்கியினால் போதுமானளவில் வழங்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியினால் அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான மூலதன வெளிப்பாய்ச்சல்களிலிருந்து எழுப்பப்பட்ட செலாவணி வீதங்களின் அழுத்தங்கள் பகுதியளவில் தளர்த்தப்பட்டது. ஆண்டு காலம் முழுவதிலும் ஐ.அ.டொலருக்கெதிராக ரூபா 2015இன் 9.03 சதவீதமான தேய்விற்கு மேலாக 3.83 சதவீதத் தேய்வினைப் பதிவு செய்திருந்தது. எனினும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டிகள் தொடர்ந்தும் 100இற்கு மேலாகக் காணப்பட்டமையானது, பன்னாட்டு சந்தையின் போட்டித் தன்மையை உடையதாக செலாவணி வீதத்தை மேலும் சீராக்குவதற்கான தேவையினைக் குறித்துக் காட்டுகின்றது.

**வெளிநாட்டுச் செலாவணியின் கேள்விக்கும் நிரம்பலுக்கும் இடையிலான பொருத்தமின்மையால் வெளிநாட்டுத் துறையின் சமமின்மைகளைக் கையாளுவதற்கு அவசர கொள்கை வழிமுறைகளின் தேவையினை வலியுறுத்துகின்றது.** சவால்மிக்க சூழலில் வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டினை மீட்டெடுப்பதற்கு, ஏனைய துறைகளின் எதிர்மறையான அபிவிருத்திகளிலிருந்தான கசிவுத் தாக்க விளைவுகளைக் குறைப்பதற்கான கொள்கைகளுடன் வெளிநாட்டுத் தடுப்புக்களைக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. சந்தை சக்திகளினூடாகத் தீர்மானிக்கப்படுகின்ற செலாவணி வீதத்தை அனுமதிப்பதற்கு மேலதிகமாக அதனை உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டிகளின் நகர்வுகளுடன் அதனை இணைப்படுத்துவதனால் பன்னாட்டு ஒதுக்குகளின் மட்டத்தை வலுப்படுத்துவதற்கு குறுங்காலத்திலிருந்து நடுத்தர காலம் வரையான வழிமுறைகள் அவசியமாகவுள்ளது. ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கான குறுங்கால வழிமுறைகளானது நாட்டிற்கான பன்னாட்டு முறி வழங்கல் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் ஒழுங்குபடுத்தல்கள் போன்ற படுகடனுடன் தொடர்பான மூலங்கள் மீதான நம்பகத்தன்மையை இன்றியமையாததாக்குகின்றது. எனினும் நிலைத்திருக்கும் அடிப்படையில் வெளிநாட்டு உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு வியாபாரங்கள் மற்றும் பணிகளின், ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் அதிகரிப்பு போன்ற படுகடனை உருவாக்காத வெளிநாட்டு உட்பாய்ச்சல்களினூடாக பதிலீடு செய்வதற்கு இத்தகைய வழிமுறைகள் தேவையாகவுள்ளது. முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளினூடாக உலக சந்தைக்குள் நுழைவதற்கான சாத்தியப்பாடுகள் ஏற்றுமதித் தளத்தின் பல்வகைப்படுத்தல், உலகளாவிய உற்பத்தி பரிமாற்றல் சங்கிலிக்குள் ஒருங்கிணைப்பு போன்றவற்றை நோக்காகக் கொண்ட அனைத்தையும் உள்ளடக்கிய ஏற்றுமதி உபாயத்தினை உருவாக்குவதற்கான தேவைப்பாடு காணப்படுகின்றது. அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலினுள் நாட்டின் போட்டித் தன்மையினை அதிகரித்தல், கொள்கை ஒருமைப்பாட்டை பேணுதல், நிறுவன கட்டமைப்பை மேம்படுத்தல் மற்றும்

வரைபடம் 5.1
சென்மதி நிலுவை




மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 5.1

**சென்மதி நிலுவை பகுப்பாய்வு வெளிப்படுத்துகை**

| வகை | ஐ.அ.டொ. மில்லியன் | | ரூபா மில்லியன் | |
|---|---|---|---|---|
| | 2015 (அ) | 2016 (ஆ) | 2015 (அ) | 2016 (ஆ) |
| **நடைமுறை கணக்கு (தேறிய)** | **-1,883** | **-1,942** | **-257,524** | **-279,712** |
| **வர்த்தக நிலுவை** | **-8,388** | **-9,090** | **-1,141,035** | **-1,325,495** |
| ஏற்றுமதி | 10,546 | 10,310 | 1,431,431 | 1,500,766 |
| இறக்குமதி | 18,935 | 19,400 | 2,572,467 | 2,826,260 |
| **பணிகள் (தேறிய)** | **2,325** | **2,879** | **316,170** | **423,053** |
| பெறுகைகள் | 6,397 | 7,138 | 869,634 | 1,039,283 |
| கொடுப்பனவுகள் | 4,072 | 4,259 | 553,464 | 616,230 |
| **முதன்மை வருமானம் (தேறிய)** | **-2,013** | **-2,184** | **-274,740** | **-317,053** |
| பெறுகைகள் | 127 | 120 | 17,253 | 17,530 |
| கொடுப்பனவுகள் | 2,140 | 2,304 | 291,994 | 334,583 |
| **இரண்டாந்தர வருமானம் (தேறிய)** | **6,193** | **6,453** | **842,082** | **939,782** |
| இரண்டாந்தர வருமானம்: வரவு | 7,007 | 7,260 | 952,568 | 1,057,281 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 6,980 | 7,242 | 948,957 | 1,054,489 |
| அரசாங்க மாற்றல்கள் | 27 | 19 | 3,610 | 2,792 |
| இரண்டாந்தர வருமானம்: செலவு | 814 | 807 | 110,486 | 117,498 |
| **மூலதன கணக்கு (தேறிய)** | **46** | **26** | **6,256** | **3,782** |
| மூலதன கணக்கு: வரவு | 71 | 46 | 9,562 | 6,795 |
| மூலதன கணக்கு: செலவு | 24 | 21 | 3,306 | 3,013 |
| **நடைமுறை மற்றும் மூலதன கணக்கு (தேறிய)** | **-1,836** | **-1,917** | **-251,268** | **-275,930** |
| **நிதியியல் கணக்கு (தேறிய)** | **-2,312** | **-2,117** | **-346,198** | **-307,793** |
| **நேரடி முதலீடு : சொத்துக்கள்** | 53 | 237 | 7,199 | 34,476 |
| **நேரடி முதலீடு : பொறுப்புக்கள்** | 680 | 898 | 93,528 | 131,992 |
| சொத்துப் பட்டியல் முதலீடு: சொத்துக்கள் | ... | ... | 3 | -1 |
| படுகடன் பிணையங்கள் | ... | ... | 3 | -1 |
| சொத்துப் பட்டியல் முதலீடு: பொறுப்புக்கள் | **686** | **993** | **101,935** | **144,688** |
| பங்கு மூலதனம் | -60 | 24 | -8,185 | 3,684 |
| படுகடன் பிணையங்கள் | 747 | 969 | 110,121 | 141,005 |
| **நிதியியல் பெறுதிகள்** | - | - | - | - |
| **ஏனைய முதலீடு: சொத்துக்கள்** | **503** | **317** | **70,962** | **45,682** |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் | 143 | 5 | 21,127 | 538 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | 116 | -67 | 15,807 | -9,678 |
| கிடைக்கவேண்டிய ஏனைய கணக்குகள் | 244 | 379 | 34,028 | 54,821 |
| **ஏனைய முதலீடு: பொறுப்புக்கள்** | **1,857** | **308** | **271,788** | **45,677** |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் | 1,457 | -609 | 209,324 | -87,671 |
| கடன்கள் | 759 | 753 | 105,244 | 108,636 |
| மத்திய வங்கி | -507 | -123 | -68,775 | -17,234 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 787 | -507 | 107,301 | -75,495 |
| அரசாங்கம் | 470 | 1,287 | 66,126 | 188,365 |
| ஏனைய துறைகள் | 9 | 96 | 592 | 13,000 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | -401 | 109 | -54,437 | 16,120 |
| செலுத்தவேண்டிய ஏனைய கணக்குகள் | 41 | 55 | 11,657 | 8,592 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | - | - | - | - |
| **ஒதுக்கு சொத்துக்கள்** | **354** | **-472** | **42,890** | **-65,593** |
| நாணய தங்கம் | -39 | - | -5,156 | - |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | -2 | -5 | -302 | -685 |
| ப.நா.நி.இல் ஒதுக்கு நிலைமை | - | - | - | - |
| ஏனைய ஒதுக்கு சொத்துக்கள் | 395 | -467 | 48,348 | -64,907 |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் | 116 | -1,267 | 12,566 | -183,495 |
| பிணையங்கள் | 279 | 800 | 35,755 | 118,582 |
| **தேறிய பிழைகளும் தவறுகளும்** | **-476** | **-201** | **-94,930** | **-31,862** |
| **திரண்ட நிலுவை (இ)** | **-1,489** | **-500** | **-129,654** | **-46,013** |
| **மொ.உ.உ.இன் சதவீதமாக** | | | | |
| வர்த்தக நிலுவை | **-10.4** | **-11.2** | | |
| பொருட்கள் மற்றும் பணிகள் | -7.5 | -7.6 | | |
| நடைமுறை கணக்கு | -2.3 | -2.4 | | |
| நடைமுறை மற்றும் மூலதன கணக்கு | -2.3 | -2.4 | | |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது

(ஆ) தற்காலிகமானது

(இ) திரண்ட நிலுவையைக் கணிப்பிடுவது தொடர்பில் அட்டவணை 5.11 பார்க்குக.

அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் ஏற்றுமதி மேம்படுத்தல்களை முன்னுரிமைப்படுத்தல் என்பன ஏற்றுமதியாளர்களுக்கு மிகவும் சாதகமான சூழலை உருவாக்குவதற்கு முக்கியமானதாகக் காணப்பட்டது. அதேவேளை, உலகச் சந்தையில் நாட்டின் ஏற்றுமதிகளின் பங்கினை முன்னேற்றுவதற்கு வெளியிலிருந்து வியாபாரத் தொழிற்பாட்டு பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல், வெளியிலிருந்து அறிவுத் தொழிற்பாட்டு பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல், சுற்றுலாத்துறை மற்றும் துறைமுகச் பணிகள் போன்ற விடயங்களில் ஓர் பணிகள் ஏற்றுமதியாளராக நாட்டின் உள்ளாற்றலை வளர்த்துவதற்கான கொள்கை முன்னெடுப்புக்கள் அவசியமானதாகும். பல தசாப்தங்களாக பொருளாதாரத்தில் காணப்பட்ட தீர்க்கப்படாத சென்மதி நிலுவை தொடர்பான பிரச்சனையை தீர்ப்பதற்கு படுகடனை ஏற்படுத்தாத உட்பாய்ச்சல்கள் அவசியமாகயிருப்பதனால், மிகவும் அவசியமான பன்னாட்டு நேரடி முதலீடுகளை கவர்வதனை ஊக்கப்படுத்துவதற்கு ஓர் பன்முக கொள்கை முன்னெடுப்பும் அவசியமானதாகும்.

## 5.2 வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகள் அபிவிருத்திகள் மற்றும் நிறுவன ரீதியான ஆதரவு

**இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையானது வியாபார முதலீட்டு தொகுதியினுள் இணைவதற்கு வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் பன்னாட்டு முதலீடுகள் போன்றவற்றை ஊக்குவிப்பதனூடாக உலகச் சந்தைகளுடன் ஒன்றிணைப்பினை அடைந்துகொள்வதற்கான செயற்படுவதினையே நோக்கத்தைக் கொண்டிருந்தது.** பொருத்தமான தேசிய வர்த்தகக் கொள்கையினை அறிமுகப்படுத்தல் மற்றும் தந்திரோபாய வியாபார மேம்பாடுகள் மற்றும் வேறுபட்ட வியாபாரம் பங்குதாரர்களுடன் சுதந்திர வியாபார உடன்படிக்கைகள் மற்றும் முன்னுரிமை வியாபார உடன்படிக்கைகள் (PTAs) போன்றவற்றில் ஈடுபடுதல் என்பன மூலம் இலங்கையின் ஏற்றுமதிக்கான அதிகரித்த சந்தை நுழைவினை அடையக் கூடியதாக இருக்கும். தேசிய வர்த்தகக் கொள்கையானது ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு தொடர்பில் இலங்கையின் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கு மற்றும் ஏற்றுமதி அடிப்படையினை விரிவுபடுத்துவதற்கு சந்தை விரிவாக்கம், வர்த்தக மற்றும் தீர்வைகளை ஒழுங்குபடுத்தல், வர்த்தக வசதிவாய்ப்பு மற்றும் ஏற்றுமதி சார்ந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளை கவருதல் போன்றவற்றை நோக்காகக் கொண்டிருத்தல் வேண்டும். இலங்கைப் பொருளாதாரத்தில் வளர்ச்சி போக்கை கொண்டுவரும் பொருட்டு உலக சந்தையில்

இலங்கையின் ஏற்றுமதி பங்கினை அதிகரிப்பதற்கு வர்த்தக வசதிப்படுத்தலில் எதிர்பார்க்கப்பட்ட சீர்திருத்தல்கள் மற்றும் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**அரசாங்கம் ஏற்றுமதியினை ஊக்குவிப்பதற்கு வெளிநாட்டு வர்த்தகத்தினை மேற்கொள்வதற்கு இருக்கும் தடைகளை நீக்குவதன் முக்கியத்துவத்தை அங்கீகரித்திருக்கின்றது.** இதன் பிரகாரம் 2010 ஓகத்தில் இடைநிறுத்தப்பட்ட பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை வசதி (ஜி.எஸ்.பீ) இனை மீளப்பெற்றுக் கொள்வதற்கும் ஐரோப்பிய ஒன்றியத்தினால் ஐரோப்பிய நாடுகளுக்கு மீள்ஏற்றுமதி செய்யும் ஏற்றுமதியாளர்களுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குவதற்கு மீன்பிடி தொடர்பான சர்வதேச கட்டுப்பாட்டு முறைமைகளைக் கடைப்பிடித்தல் போன்ற முன்னெடுப்புக்கள் செய்யப்பட்டன. வர்த்தகத் திணைக்களம் ஐரோப்பிய ஒன்றிய ஜிஎஸ்பி + ஒழுங்குவிதிகளின் கீழ் 27 சர்வதேச மரபுகள் தொடர்பான முன்னேற்றம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டு காணப்படும் அனைத்து பொருத்தமான தகவல்களை உள்ளடக்கியதாக போதிய விளக்கத்துடன் ஒரு அறிக்கையை மீள ஐரோப்பிய ஒன்றிய ஜிஎஸ்பி + வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக அமைச்சுக்களுக்கிடையிலான உபகுழுவுடனும் பல்வேறுபட்ட கலந்தாலோசனைகள் மற்றும் மீளாய்வுக் கூட்டங்களை ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் உள்நாட்டு பங்குதாரர்களுடனும் நடாத்தியதன் பின் தயாரித்திருந்தது. 2016 யூலையில் ஐரோப்பிய ஒன்றிய ஜிஎஸ்பி + வசதியினை மீளப்பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் மற்றும் அனைத்து உதவி இணைப்புக்களுடன் கூடிய விரிவான அறிக்கை என்பன ஐரோப்பிய ஒன்றியத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன. நான்கு மாதங்களுக்குள் ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றம் ஏதாவது சாத்தியமான எதிர்ப்புக்களைத் தெரிவிப்பதற்கு அனுமதியளிக்கும் அதேவேளை மனித உரிமைகள், தொழிலாளர் நிபந்தனைகள், சூழலைப் பாதுகாத்தல் மற்றும் சிறந்த கம்பனி ஆளுகை போன்றவை தொடர்பான 27 சர்வதேச மரபுகளை இலங்கையின் வினைத்திறனுடன் அமுல்படுத்தல் மற்றும் உறுதி செய்தல் போன்றவற்றில் அர்ப்பணிப்பிற்கான பரிமாற்றலாக முழுமையான மீளாய்வுச் செயற்பாட்டின் பின் 2017 சனவரியில் ஐரோப்பிய ஒன்றியம் ஐரோப்பிய ஜிஎஸ்பி + சலுகையை மீண்டும் அமுலாக்க வேண்டி முன்மொழிந்தது. மேலதிகமாக பலமான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டதன் பிரகாரம், 2015 சனவரியில் இருந்து அமுல்படுத்தப்படும் வகையில் 2014 ஒத்தோபரில் விதிக்கப்பட்ட சட்டரீதியற்ற, அறிக்கையிடப்படாத மற்றும் கட்டுப்பாடுகள் அற்ற மீன்பிடிக் கட்டுப்பாடுகளின் கீழ் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் மீன்கள் மீதான தடையை 2016 யூனில், நீக்கக் கூடியதாகவிருந்தது. ஐரோப்பிய ஒன்றிய சந்தை மிகப்பெரிய கடலுணவுகள் ஏற்றுமதி செய்யக் கூடிய இடமாக இருப்பதனால், இது இலங்கையின் கடலுணவுகள் ஏற்றுமதியை மேம்படுத்துவதனை நோக்கிய முக்கிய படியாக இருக்கும் என கருதப்படுகின்றது. தடை நீக்கப்பட்டதிலிருந்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்யப்படும் கடலுணவுகள் 2016இன் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் ஆண்டுக்கு ஆண்டு என்ற அடிப்படையில் 110 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது.

**ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்பட்ட பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை முறைமை வசதி (ஜிஎஸ்பி +) 2016 இலும் தொடர்ந்திருந்தது.** ஐக்கிய அமெரிக்காவினால் வழங்கப்படும் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை முறைமை வசதி ஜிஎஸ்பி + ஆனது 2015 யூனில் மீள அதிகாரமளிக்கப்பட்டு 2017 திசெம்பர் 31 வரை செல்லுபடியாகக் கூடியதாக இலங்கை உட்பட 122 பயனாளி நாடுகளிலிருந்து கிட்டத்தட்ட 5,000 பொருட்களுக்கான வரி அளவீடின்றி ஐக்கிய அமெரிக்காவிற்குள் அனுமதிக்கின்றது. இலங்கை உட்பட ஏனைய பயனாளிகள் போக்குவரத்துப் பொருட்களுக்கான வரித் தீர்வையற்ற உடன்படிக்கையை அனைத்து ஜிஎஸ்பி + பயனாளி நாடுகளுக்கு விரிவாக்குவதற்கு ஐக்கிய அமெரிக்காவிற்கு மனுவினை கையளித்துள்ளன. இது 2017இல் அனுமதியளிக்கப்படுமென எதிர்பாக்கப்படுகின்றது. மேலும், இலங்கை 7,200 பொருட்களுக்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கையினுடைய ஏற்றுமதியாளர்களினால் பெறப்படுகின்ற சலுகை அடிப்படையிலான தீர்வையினை ஐரோப்பிய ஒன்றியத்தின் நியமமான ஜிஎஸ்பி + நன்மையை தொடர்ச்சியாகப் பெற்றிருந்தது. அதேவேளை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தமான வர்த்தக முன்னுரிமைக்கான உலக முறைமையின்[1] கீழ் இலங்கையின் ஏற்றுமதிகள் 2015இல் 49 மில்லியன் ஐ.அ.டொலர்களுடன் ஒப்பிடும்போது 2016இல் 45 மில்லியன் ஐ.அ.டொலர்களாக சிறிதளவில் குறைவடைந்திருந்தன. ஜிஎஸ்ரிபியின் கீழ் இலங்கை முக்கிய ஏற்றுமதியாக கறுவாவினை மெக்ஸிகோ, பெரு போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருந்தது. ஜப்பான், நோர்வே போன்ற ஏனைய பல்வேறு நாடுகளினால் வழங்கப்படுகின்ற ஜிஎஸ்பி முறைமையினூடாகவும் இலங்கை பல நன்மைகளைப் பெற்றிருந்தது. 2016 இல் ஜிஎஸ்பி

1 வர்த்தக முன்னுரிமைக்கான உலக முறைமை என்பது அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளுக்கிடையிலான போர் உடன்படிக்கையாக காணப்படுவதுடன் 1989இல் நிறுவப்பட்டது இது தெற்கு - தெற்கு வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பினை அதிகரிக்கும் நோக்குடன் மற்றும் அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகள் மாநாட்டின் முகவரின் கீழ் கலந்துரையாடப்பட்ட தீர்வை முன்னுரிமைத் திட்டமொன்றாகும்.

5

முறைமையின் கீழ் ஏற்றுமதி வருமானம் 9.0 சதவீதத்தால் 3,394 மில்லியன் ஐ.அ.டொலருக்கு அதிகரித்திருந்தது. பல்வேறுபட்ட ஜிஎஸ்பி வசதிகளுடாக அதிக வருமானமுடைய நாடுகளுக்கு முன்னுரிமை நுழைவு இருப்பினும் குறிப்பிடத்தக்க குறுகிய ஏற்றுமதி தளம் இலங்கை முழு நன்மையை இவற்றின் மூலம் அறுவடை செய்வதனை தடுக்கிறது.

**உலக பெறுமதிச் சங்கிலிக்குள் உள்வாங்குவதற்கான தேவையை அடையாளங்காணுதல், பெறுமதி கூட்டலினை மேம்படுத்தல், சந்தை நுழைவு மற்றும் புத்தாக்கங்களை உயர்த்துதல் போன்ற முன்னெடுப்புக்களாக அரசாங்கமானது சிங்கப்பூர், சீனா, ஜப்பான், தென்கொரியா, பங்களாதேஷ் மற்றும் ஆபிரிக்காவின் வளர்ந்துவரும் சந்தைகள் போன்ற முக்கிய சாத்தியமான சந்தைகளுடன் வர்த்தக உடன்படிக்கைகளை ஊக்குவிப்பதில் முன்னேற்பாட்டுடன் தொழிற்பட்டது.** 2014 செத்தெம்பரில் சீனா இலங்கைக்கு இடையிலான சுதந்திரவர்த்தக உடன்படிக்கைக்கான (சி.எஸ்.எவ்.ரி.ஏ) பேச்சுவார்த்தை முன்னெடுப்புக்கள் மீதான புரிந்துணர்வு உடன்படிக்கை (MOU) கைச்சாத்திடப்பட்டது. சிஎஸ்எவ்ரிஏ பொருட்கள் மற்றும் பணிகள், வியாபாரம், முதலீடு மற்றும் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப கூட்டிணைவினை உள்ளடக்குகின்றது. மேலும், இலங்கை மற்றும் சிங்கப்பூர் ஏற்றுமதியினால் தூண்டப்பட்ட வளர்ச்சி, வேலைவாய்ப்பு உருவாக்கம், தொழில்நுட்ப அறிவு தொடர்பான தொழில்நுட்பத்துடனான முதலீடுகளை கவர்வதற்கு சந்தையினை விரிவுபடுத்தல் மற்றும் இரண்டு நாடுகளையும் இணைக்கும் வழங்கல் சங்கிலியின் இணைப்பு போன்றவற்றைப் பிரதிபலிக்கும் அனைத்தையும் உள்ளடக்கிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினை மேற்கொள்வதற்கு இரண்டு நாடுகளும் ஆர்வத்துடன் இருப்பதாக 2016 யூனில் அறிவித்திருந்தன. இருதரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட ஒரு சாத்தியமான ஆய்வு தொடர்புபட்ட நிறுவனங்களுடன் உத்தேசிக்கப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் நோக்கம் மற்றும் பரப்பெல்லை தொடர்பான ஆரம்பக் கலந்துரையாடல்களுக்கான சிங்கபூரின் நோக்கத்தை அறிவதற்கான 2016 யூலையில் பின்தொடரப்பட்டது. 2016இல் முதல் மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றிருந்தன. சீனா மற்றும் சிங்கப்பூர்வுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை 2017இல் முடிவுக்கு கொண்டுவரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளையில் ஐக்கிய அமெரிக்காவின் வோசிங்டனில் 2016 ஏப்பிறலில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் இலங்கைக்கு இடையிலான 12வது வர்த்தக மற்றும் முதலீட்டுக் கட்டமைப்பு உடன்படிக்கையின் (ரி.ஐ.எப்.ஏ) சபைக்கூட்டம் நடைபெற்றிருந்தது. இந்த ஒப்புதலின் போது உலக தரத்திற்கு ஏற்ற வகையில் இலங்கையின் வியாபாரம் மற்றும் முதலீட்டினை மீளமைத்தல், இலங்கையின் தற்போதைய ஏற்றுமதிப் போட்டிச் சந்தையினை மேம்படுத்தல் ஐந்து வருடங்களுக்கு மேலாக இலங்கை மற்றும் ஐக்கிய அமெரிக்காவிற்கு இடையில் வியாபாரம் மற்றும் முதலீட்டினைக் பெருக்குவதற்கு புதிய சந்தைகளை அபிவிருத்தி செய்தல் போன்றவற்றை கவனத்திற்கு கொண்டு ஐக்கிய அமெரிக்கா - இலங்கையினுடைய இணைந்த செயற்பாட்டுத்திட்டம் இரண்டு அரசாங்கங்களினாலும் பின்பற்றப்பட்டன. இலங்கையின் இலக்கான பிராந்திய பணிகள் மையத்திற்கு துணைபுரிவதை முக்கியமாகக் கொண்டு விரிவான அமுல்படுத்தல் திட்டத்தினை ஏற்றுக்கொள்கின்ற இடைப்பருவகால ரி.ஐ.எப்.ஏ சபைக்கூட்டம் 2016 செத்தெம்பரில் நடைபெற்றது.

**புதிய வியாபார உடன்படிக்கைகளுள் உட்புகுவதற்கான முன்னெடுப்புக்கள் செய்யப்பட்டிருந்த அதேவேளை ஏற்கனவே காணப்படுகின்ற இருபுடை வியாபார உடன்படிக்கைகளின் பயன்பாட்டினை மேலும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு பல்வேறுபட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.** அபிவிருத்தி தந்திரோபாயங்கள் மற்றும் பன்னாட்டு வர்த்தக அமைச்சு, வர்த்தகத் திணைக்களம், வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சு போன்றவற்றினால் இலங்கை வியாபாரத்தில் தாக்கத்தைத் தரக்கூடிய நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை, அனைத்தும் உள்ளடக்கிய பொருளாதார பங்குடைமை உடன்படிக்கைகளின் அபிவிருத்தி தொடர்பாக தொடர்ச்சியான மதிப்பீடுகள் கூட்டிணைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன் விளைவாக இருபுடை வியாபாரத் தொடர்புகளை மேம்படுத்துவதற்கு ருஷ்யா, ஈரான், பெலாறுஸ், துருக்கி மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளுடன் கூட்டு ஆணைக்குழுக்கள் தாபிக்கப்பட்டிருந்த அதேவேளை சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள், முன்னுரிமையளிக்கப்பட்ட வியாபார உடன்படிக்கைகள் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதார பங்குடைமை போன்றவற்றிலிருந்து எழும்பிரச்சனைகளை முன்னுரிமைப்படுத்தி பல்வேறுபட்ட மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இந்தியாவிற்கான இலங்கையின் ஏற்றுமதிகள் 2015இன் ஐ.அ.டொலர்கள் 407 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இல் ஐ.அ.டொலர்கள் 375 மில்லியனாக இருந்தன. பணிகள் துறையின் உள்ளடக்கம் மற்றும் முன்மொழியப்பட்ட பொருளாதார மற்றும் தொழில்நுட கூட்டிணைப்பு ஒப்பந்தம் மூலம் மேலும் பல முதலீடு வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை வலுப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. வர்த்தகத் திணைக்களம் மற்றும் அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் பன்னாட்டு வர்த்தக

5

அமைச்சினால் 2016 ஒகத்தில் தொடங்கப்பட்ட முன்னைய அலுவல்சார் மட்ட கலந்துரையாடல்களுக்கு முன்னர் நடைபெற்ற பங்காளர் கலந்தாலோசித்தலின்போது கட்டமைப்புக்குள் கருத்திற்கொள்ளப்படக்கூடிய விடயங்கள் மற்றும் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப கூட்டிணைப்பு ஒப்பந்தத்தினது பரந்த நோக்கம் ஆகியவையை மட்டுமே ஆலோசித்தது. பொருட்கள் சேவைகளின் வியாபாரம் தொடர்பான பரஸ்பர அங்கீகரிக்கபட்ட உடன்படிக்கைகளின் முக்கியத்துவம் இரண்டு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இரண்டாம் சுற்று கலந்தாலோசிப்பு 2016 செத்தெம்பரில் நடைபெற்றது. பொருட்கள், தொழில்நுட்ப கூட்டிணைப்பு, பொருளாதார கூட்டிணைப்பு, முதலீடு மற்றும் சேவைகளை தாராளமயமாக்குதல் போன்ற தற்போதைய நடவடிக்கைகள் தொடர்பான இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை பொருளாதார மற்றும் தொழில்நுட்ப கூட்டிணைப்பு ஒப்பந்தம் ஆழப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உடன்படிக்கை 2017இல் இறுதிவடிவம் பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. முழுமையான தாராளமயப்படுத்தப்பட்ட அணுகுமுறையினை தூண்டும் நோக்குடன் இரு தரப்பினராலும் பாகித்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான சலுகைப் பட்டியலின் மீளாய்வு தொடர்பாக 2016 சனவரியில் கொழும்பில் நடைபெற்ற பாகித்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை சம்பந்தமான 6வது தொழில்நுட்பமட்ட கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது. அதன் விளைவாக, பேதப்படுத்தப்பட்ட இறக்குமதி மதிப்பீடு மீதான சில வியாபாரத் தடைகள் நீக்கப்பட்டன. எனினும், பாகித்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கு கீழ் இலங்கையிலிருந்து பாகித்தானுக்கு செய்யப்படும் ஏற்றுமதிகள் 2015 இல் ஐ.அ.டொலர் 59 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2016இல் ஐ.அ.டொலர் 52 மில்லியனாக தொடர்ச்சியாக குறைவடைந்தே காணப்படுகின்றது. இந்நிலைமைக்கு பொருட்களின் பண்முகமற்றத் தன்மை மற்றும் சுங்கம் தொடர்பான பிரச்சனைகள் என்பன முக்கிய காரணங்களாகக் கூறலாம். கட்டமைப்பிற்குள் உள்ளடக்கப்படவேண்டிய விடயங்கள் மற்றும் இரிசிஎ யின் இயலளவை விஸ்தரித்தல் தொடர்பான இரு பங்குதாரர்களால் அங்கே கட்டமைப்பிற்குள் உள்ளடக்கப்படவேண்டிய விடயங்கள் மற்றும் இரிசிஏ யின் இயலளவை விஸ்தரித்தல் தொடர்பான இருபங்குதாரிகளின் விடயங்களும் தொடர்பான ஆரம்பகட்ட அலுவலக ரீதியான கலந்தாலோசிப்பு 2016 ஒகத்தில் நடைபெற முன்னர் டிஒசி மற்றும் எம்ஒடி எஸ்ஜரி இரண்டும் பங்குதாரர்கள் ஆலோசனையை நடாத்தியிருந்தது. பொருட்கள் பணிகளின் வியாபாரம் தொடர்பான பரஸ்பர அங்கீகரிக்கப்பட்ட உடன்படிக்கைகளின் (MRAs) முக்கியத்துவம் இரண்டு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இரண்டாம் சுற்று கலந்தாலோசிப்பு 2016 செப்தெம்பரில் நடைபெற்றது. இரிசிஎ யின் பேச்சுவார்த்தைகள் பொருட்கள், தொழிநுட்ப கூட்டிணைப்பு, பொருளாதாரம் கூட்டிணைப்பு முதலீடு மற்றும் பணிகளை தாராளமயமாக்குதல் போன்ற இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் தற்போதைய நடவடிக்கைகளை ஆழப்படுத்துவதாக எதிர்பார்க்கப்படுகின்றன. உடன்படிக்கை 2017இல் இறுதிவடிவம் பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. முழுமையான தாராளமயப்படுத்தப்பட்ட அணுகுமுறையினை தூண்டும் நோக்குடன் இரு தரப்பினராலும் பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் சலுகைப் பட்டியலினை மீளப்பார்த்தல் தொடர்பாக 2016 சனவரியில் கொழும்பில் நடைபெற்ற பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை சம்பந்தமான 6வது தொழில்நுட்ப கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது. அதன்பிரகாரம் பேதப்படுத்தப்பட்ட இறக்குமதி மதிப்பீட்டின் சில வியாபாரத் தடைகள் நீக்கப்பட்டன. எப்படியாயினும் வியாபாரமானது பிஎஸ்எவ்ரஏ யின் கீழ் இலங்கையிலிருந்து பாகிஸ்தானுக்கு செய்யப்படும் ஏற்றுமதி 2016இல் 52 மில்லியன் அமெரிக்க டொலர்களாகவும் அது 2015உடன் ஒப்பிடும்போது 59 மில்லியன் அமெரிக்க டொலர்களாகவும் தொடர்ச்சியாகக் குறைவடைந்தே காணப்படுகின்றது. இந்நிலைமைக்கு பொருட்களின் குறைந்த பன்முகத்தன்மை மற்றும் சுங்கம் தொடர்பான பிரச்சினைகளை முக்கிய காரணங்களாகக் கூறலாம்.

**பிராந்திய மற்றும் பல்புடை வர்த்தக உடன்பாடுகளின் பாரிய தேவையினை முன்னிலைப்படுத்துகின்ற உலக பெறுமதிச்சங்கிலி மற்றும் உற்பத்தியைப் பகிர்ந்தளிக்கும் வலையமைப்பின் கீழ் பன்னாட்டு வர்த்தகம் முக்கியமாகி வருவது அதிகரித்துக் கொண்டிருக்கிறது.** பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளின் உள்ளடக்கத்தில் 2015 நவெம்பரில் இலங்கையால் தென்னாசிய சுதந்திர வர்த்தகப்பிரிவின் வர்த்தக தாராளமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் (ரிஎல்பி) முதற்கட்டம் நிறைவேற்றப்பட்டதுடன் இதன் இரண்டாம் கட்டத்தின் போது 2020 அளவில் அனைத்து உறுப்பினங்களும் அவர்களின் ஆரம்ப உணர்திறன் பட்டியலை ஆகக்குறைந்தது 20 சதவீதத்தினால் குறைத்துக் கொள்ள எதிர்பார்க்கப்படுவதுடன் 2018 அளவில் இலங்கை நிறைவேற்றுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. கறுப்பு மிளகு மற்றும் அலுமினியம் உற்பத்திகள் ஏற்றுமதியில் முக்கிய பொருட்களாக காணப்பட்ட அதேவேளை 2016இல் இந்த உடன்படிக்கையின் கீழ் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் வருமானம் 67.4 சதவீதத்தால் 8 மில்லியன் ஐ.அ.டொலராகக் குறைவடைந்திருந்தது. இதில் இந்தியாவிற்கான ஏற்றுமதி 60 சதவீதமாகும். பிராந்திய வர்த்தகச் பணியின் விரிவாக்கத்தை

ஒருபடி மேல்நோக்கியதாக பணிகளின் வர்த்தகம் தொடர்பான சார்க் கட்டளையின் உடன்பாடு (எஸ்ஏரிஜஎஸ்) ஆனது, 2016 யூனில் இதன்கீழ் இலங்கையினுடைய விசேட பங்களிப்பு அட்டவணைகளுக்கு பாராளுமன்ற அமைச்சர்களின் அனுமதி பெறப்பட்டதுடன் தேசிய பங்களிப்பு அட்டவணையினை இறுதிக்கு கொண்டுவரும் செயற்பாட்டில் இருக்கின்றது. 2016 செத்தெம்பரில் தாய்லாந்தில் நடைபெற்ற ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் துணைநிலை குழுவின் 49ஆவது அமர்வில் வர்த்தகத்திற்கு வசதியளித்தல், முதலீடுகள் மற்றும் பணிகள் போன்றவற்றின் உடன்படிக்கைக் கட்டமைப்பு அமுலாக்கம் தொடர்பான வழிகாட்டல் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது. உறுப்பினர் நாடுகளான பங்களாதேஷ், சீனா, இந்தியா, லாவோஸ், தென்கொரியா, மொங்கொலியா மற்றும் இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் ஆசிய பசுபிக் பிராந்தியங்களுக்கிடையிலே மிகவும் பழமைவாய்ந்த முன்னுரிமை வர்த்தக உடன்பாடான பாங்கொக் உடன்பாடு என்று முன்னர் அழைக்கப்பட்ட 1975ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (ஏபிரிஏ) காணப்படுகின்றது. கறுப்புத் தேயிலை, தெங்கு உற்பத்திகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட ஆடைகள் இந்த உடன்படிக்கையின் கீழ் முக்கிய ஏற்றுமதி பொருட்கள் காணப்பட்ட 5.9 சதவீதத்தினால் 126 மில்லியன் ஐ.அ.டொலருக்கு 2016இல் ஏற்றுமதி அதிகரித்திருக்கின்றது. சீனா மற்றும் தென்கொரியா போன்றவை ஏபிரிஏ உறுப்பினர்களுக்கிடையில், முக்கிய சந்தையாக காணப்பட்டு முறையே 72 சதவீதம் மற்றும் 25 சதவீத ஏற்றுமதிகளுக்கு வகைகூறுகின்றன. இந்தோனிசியாவில் 2016 ஒத்தோபரில் 16வது அமைச்சர்கள் மற்றும் கூட்டிணைப்பாளர்கள் சபையின் கூட்டம் நடைபெற்ற அதேவேளை இந்திய சமுத்திர விளிப்பு நாடுகளுக்கிடையிலான பிராந்திய மன்றம் இந்திய சமுத்திர விளிப்பு சங்கத்தின் இரண்டாவது பொருளாதார மற்றும் வணிக அமைச்சர் மட்ட மாநாட்டினை 2016 ஏப்பிறலில் நடத்தியிருந்தது. பல்தரப்பட்ட துறைசார்ந்த தொழிநுட்ப மற்றும் பொருளாதார கூட்டிணைவிற்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு மீதான இலங்கையுடன் தொடர்புபட்ட வர்த்தக தாராளமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டம் 2016 பெப்புருவரியில் அமைச்சர் சபையினால் அனுமதியளிக்கப்பட்டது.

**உலக வர்த்தக நிறுவனத்தின் (டபிள்யுரிஓ) பலதரப்பு முன்னெடுப்புக்களில் ஈடுபடுவதை இலங்கை தொடர்ச்சியாகக் கொண்டிருந்தது.** கென்யாவில் 2015 திசெம்பரில் நடைபெற்ற 10ஆவது உலக வர்த்தக நிறுவனத்தின் அமைச்சர் மாநாட்டில் “டபிள்யுரிஓ நைரோபி தொகுப்பு” என்று அறியப்பட்ட தொகுப்பின் மாநாட்டின் முடிவில் எதிர்காலத்திட்டத்தினையும் பின்பற்றிக்கொண்டது தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டது. உலக சந்தையில் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்காக 2016 மேயில் செய்யப்பட்ட டபிள்யுரிஓவுடன் வர்த்தக வசதிவாய்ப்பு உடன்பாட்டுடன் இலங்கை 81ஆவது உறுப்பினராக சேர்ந்திருந்தது. இந்த உடன்பாடானது டபிள்யுரிஓ விலுள்ள மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்ட கருவியாக உடன்படுமிடத்தில் நடைமுறைக்குவரும். வர்த்தக வசதி வாய்ப்பு உடன்படிக்கை பிரத்தியேகமாக அபிவிருத்தி மற்றும் ஆகக்குறைந்த அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு (எல்சிடிஎஸ்) உதவிகளை வழங்கும் அதேவேளை உலக வர்த்தகத்தில் கணிசமான நன்மைகளையும் எதிர்பார்க்கின்றது. உலகப் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் அதேவேளை வர்த்தக வசதி வாய்ப்பு உடன்பாட்டின் முழுமையான நடைமுறைப்படுத்தல் வர்த்தகச் செலவுகைளைக் குறைப்பதனை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், வர்த்தகத் திணைக்களத்தினால் பல்வேறுபட்ட கலந்தாலோசனைகள் நடாத்தப்பட்ட பின்னர் ஜெனிவாவிலுள்ள டபிள்யு ரிஓவின் தலைமைக் காரியாலயத்தில் 2016 நவெம்பரில் இலங்கையின் 4வது வர்த்தகக் கொள்கை மீளாய்வு வெற்றிகரமாக நடைபெற்றது. வியாபாரக் கொள்கையில் வெளிப்படைத்தன்மையை உயர்த்துவதனால் பல்புடை வியாபார முறைமையின் சீரான தொழிற்பாட்டிற்கு வசதிசெய்வதன் பிரகாரம் இலங்கை அதனுடைய வர்த்தகக் கொள்கையை ஒவ்வொரு 6 வருடங்களுக்கொரு முறை மீளாய்வு செய்யவேண்டியிருக்கின்றது. அதேவேளையில், இலங்கையின் பதுக்கலிற்கு எதிரான, எதிரீடு செய்தல் மற்றும் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான சட்டவாக்கம் நீண்ட கால நிலுவையில் இருக்கின்றது. புதிய விஞ்ஞாபனத்திற்குரிய அமைச்சரவை அனுமதி 2016 ஒத்தோபரில் பெறப்பட்டது.

**ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கு நிறுவனம் சார்ந்த ஆதரவினை பலப்படுத்தும் நோக்கத்துடன் அரசாங்கத்தினால் பல்வேறுபட்ட வழிமுறைகள் அமுல்படுத்தப்பட்டிருப்பதுடன் பல்வேறு புதிய வழிமுறைகளும் முன்மொழியப்பட்டுள்ளன.** புதிதாக உருவாக்கப்பட்ட அபிவிருத்தி தந்திரோபாயங்கள் மற்றும் பன்னாட்டு வர்த்தகத்திற்கான அமைச்சின் கீழ் பன்னாட்டு வர்த்தகம் தொடர்பான முகவராண்மை மற்றும் அபிவிருத்தி தொடர்பான முகவராண்மை உருவாக்கப்பட்டன. பன்னாட்டு வர்த்தகம் தொடர்பான முகவராண்மை சர்வதேச வர்த்தகத்துடன் தொடர்புடைய கொள்கைத் தீர்மானங்களுக்கான உயரளவிலான பொறுப்பான மன்றமாக தொழிற்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சர்வதேச வர்த்தகத்தை மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் போன்றவற்றிற்கு பொறுப்பாக இருக்கும் அதேவேளை இது

சர்வதேச வர்த்தகக் கொள்கைகளை உருவாக்குதல், அமுல்படுத்தல் மற்றும் கூட்டிணைத்தல் போன்றவற்றிற்கு மைய இடமாக விளங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த முகவராண்மையானது இலங்கைக்கான தந்திரோபாய வர்த்தகக் கொள்கைக் கட்டமைப்பினை வழங்குவதன் பிரகாரம் தேசிய வர்த்தகக் கொள்கை வரைபு ஒன்றினைத் தயாரிக்கும் செயற்பாட்டிலிருக்கின்றது. அபிவிருத்தி தொடர்பான முகவராண்மை நவீன வர்த்தகக் கோட்பாட்டு வரைவின் போது இலங்கையினுடைய ஏற்றுமதிகள் மற்றும் போட்டித்தன்மையை பெருக்குவதற்கு புதிய தீர்வுகளைக் கொண்டு வருவதற்கும் வளர்ச்சி இயந்திரமாக வர்த்தகத்தினைப் பயன்படுத்தும் நாடுகளின் அனுபவங்கள் மற்றும் புதிய உலக வர்த்தக சுற்றுச்சூழல் போன்றவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக மில்லேனியம் சவால் கூட்டிணைப்பு பன்னாட்டு அபிவிருத்திக்கான கவார்ட் நிலையம், பன்னாட்டு வர்த்தக நிலையம் மற்றும் உலக பொருளாதார மன்றம் போன்றவற்றுடன் கூட்டிணைந்திருக்கின்றது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் (இடிபி) முன்னெடுக்கப்படும் தேசிய ஏற்றுமதிச் தந்திரோபாயம் (என்இஎஸ்) மற்றும் முதலீட்டுச் சபையில் 15 இற்கு மேற்பட்ட ஆர்வலர் நிறுவனங்களின் கூட்டிணைப்புடன் ஒரே கூரையின் கீழான - கடை நிறுவுதல் போன்ற இலங்கையில் முதலீட்டுச் சூழ்நிலையை மேம்படுத்துவதை நோக்கிய தீர்வுகள் அமுல்படுத்துகின்றன. மேலும், இலங்கைச் சுங்கமானது வழிப்படுத்தல்கள் தெரிவுசெய்யும் செயற்பாட்டில் கணனி அடிப்படையினை அறிமுகப்படுத்துவதனால் சரக்கு கொள்கலன் தீர்வுசெய்தல் நடவடிக்கைகள் முற்று முழுதாக தன்னியக்கமாக்கப்பட்டிருக்கின்றது. இதன்பிரகாரம், தேவைப்படுகின்ற பரிசோதனை மட்டத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப பச்சை, பொன்னிறம் மற்றும் சிவப்பு போன்ற மூன்று வழிப்படுத்தல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இத்தன்னியக்கமானது சரக்கினை தீர்வு செய்வதற்காக எடுக்கின்ற நேரத்தினை கணிசமான அளவில் குறைத்திருக்கின்றது. மேலும், சிறிய நடுத்தர நிறுவனங்களின் முதலீட்டுக் கலாச்சாரம் மற்றும் ஏற்றுமதி போட்டித் தன்மையை மேம்படுத்தும் அதேவேளை கொழும்பு மற்றும் புறநகர், நாட்டின் ஏனைய பகுதிகளுக்கிடையே நிலவும் பொருளாதார அபிவிருத்தி வேறுபாட்டினை குறைப்பதன் பிரகாரம் எம்ஒடிஎஸ்ஜரி யினால் கண்டி-கொழும்பு-அம்பாந்தோட்டை மற்றும் கொழும்பு - திருகோணமலை போன்ற பொருளாதார வாயில்கள் பண்டாரகம, எம்பிலிப்பிட்டிய, வவுனியா, குளியாப்பிட்டிய மற்றும் ஏறாவூரில் அபிவிருத்தி தந்திரோபாயம் மற்றும் பன்னாட்டு வர்த்தக அமைச்சினால் ஆரம்பிக்கப்படவுள்ள பொருளாதார வலயங்கள் போன்றவற்றினூடாக அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பரப்புவதற்கு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்படுகின்றன.

**2016 காலப்பகுதியில் வெளிநாட்டு வியாபாரத்தின் தந்திரோபாயங்களை மேலும் அமுல்படுத்துவதனை நோக்கிய நிறுவனம்சார்ந்த உதவி நீடிக்கப்பட்டன.** ஏற்றுமதி அபிவிருத்தி சபை 2016 - 2020 தந்திரோபாயத் திட்டத்திற்கேற்ப 2020 அளவில் 20 பில்லியன் ஐ.அ.டொலர்கள் ஏற்றுமதியை அடைவதற்கு ஏற்றுமதியை மேம்படுத்தலை இலக்காகக்கொண்டு குறிப்பிட்டளவான நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தியிருந்தது. மேலும் அவர்களுடைய ஆண்டு செயற்பாட்டுத் திட்டத்தில், பன்முகப்படுத்தல் மற்றும் பெறுமதி கூட்டினை ஊக்குவித்தல், இலக்குவைக்கப்பட்ட வியாபாரக் குறியீட்டை மேம்படுத்தல், புதிய தொழிநுட்பத்தை அறிமுகப்படுத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி உதவிகள் மற்றும் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகளை நடாத்துதல் போன்றன உள்ளடங்களலாக ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதன்பிரகாரம் அதனுடைய தந்திரோபாயத் திட்டத்தினால் பாரிய ஏற்றுமதிச் சந்தைகளில் அடையாளங் காணப்பட்ட பிரச்சனைகளை முன்னுரிமைப்படுத்துவதற்கு நடைமுறை அணுகுமுறைவடிவமான கருத்தரங்குகள் மற்றும் பட்டறைகளை நடாத்துதல், இலங்கை தொடர்பான அறிமுகத்தை வெளிநாட்டில் கட்டியெழுப்புவதற்கு வியாபாரச் சந்தைகளில் ஏற்றுமதியாளர்கள் பங்குபற்றுதல் மற்றும் சந்தை நுழைவினை மேம்படுத்தல் போன்றன ஏற்றுமதி இலக்கினை அடைவதற்காக பின்பற்றப்பட வேண்டிய தந்திரோபாயங்களாகத் தொகுக்கப்பட்டன. 2016 காலப்பகுதியில் வெளிநாட்டில் பன்னாட்டு வியாபாரச் சந்தைகளில் பங்குபற்றியிருக்கும் அதேவேளை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை பல்வேறு வியாபாரச் சந்தைகளை நடாத்தியிருந்தது. 16ஆவது உலக ஏற்றுமதி அபிவிருத்தி மன்றம் 600 உள்ளுர் மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் 2016 ஒத்தோபரில் இலங்கையில் பன்னாட்டு வர்த்தக நிலையத்தின் தலைமை நிகழ்வாக நடாத்தியிருந்தது. இதற்கு மேலதிகமாக, 2016 காலப்பகுதியில் ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது ஏற்றுமதி தொடர்பான தொடர்ந்து வரும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தேசிய ஏற்றுமதியாளர்கள் மன்றம், ஜனாதிபதி ஏற்றுமதி விருது வழங்கும் வைபவம் மற்றும் இலத்திரனியல் சந்தையிடங்களைப் பயன்படுத்தி பல்வேறுபட்ட இலத்திரனிய சந்தைப்படுத்தல் போன்றவற்றை நடாத்தியிருந்தது. மேலும், ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது பன்னாட்டு வர்த்தக நிலையத்தின் கூட்டிணைப்புடன் தேசிய ஏற்றுமதி தந்திரோபாயத்தினை தயாரிப்பதற்கான ஆயத்தம் செய்ததுடன் இது வியாபார அபிவிருத்தி மற்றும் போட்டித்தன்மைக்கான ஐந்துவருட செயற்பாடு சார்ந்த

விரிவான மற்றும் முன்னுரிமையளிக்கத்தக்க கட்டமைப்பினை வழங்குவதற்கு அரசாங்கம் மற்றும் தனியார் துறையுடன் இணைந்து செயற்படும் ஓர் முயற்சியாகும். தேசிய ஏற்றுமதி தந்திரோபாயமானது ஆனது இந்துசமுத்திரத்தில் இலங்கையை நிலைத்திருக்கக்கூடிய ஏற்றுமதி சார்ந்த வளர்ச்சியைத் தரக்கூடிய மையமாக உருவாக்குவதற்கு தெளிவான வழிகாட்டுதலை வழங்கும். மேலும் வியாபாரம் மற்றும் வர்த்தக உடன்படிக்கைகளின் சரியான சட்ட உருவாக்கத்தினை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட தேசிய வியாபார சட்டத்தரணியை நியமிப்பதற்கு முன்மொழியப்பட்ட 2017 வரவுசெலவுத் திட்டமானது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படும்.

**2016இன் வர்த்தகம் மற்றும் தீர்வைக் கொள்கையானது நியாயமான வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கு வரிமுறைமையினை இலகுபடுத்துவதிலும் ஒழுங்குபடுத்துவதிலும் கவனம் செலுத்துவதாக இருந்தன.** அதன்பிரகாரம் 2017 வரவு செலவுத்திட்டத்தில் தேயிலைத் கைத்தொழிலுக்கு உதவுவதற்கு தேயிலை, ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாட்டுக் கட்டணம் தேயிலை பொதியிடல் மற்றும் இலச்சனைக் கட்டுப்பாடுகள் என்பவற்றை நீக்குவதற்கு முன்மொழியப்பட்டது. அத்துடன் மீளஏற்றுமதி செய்வதற்காக முக்கியமான சில தேயிலை வகைகளின் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளை இலகுவாக்குவதற்கும் முன்மொழியப்பட்டது. அரசாங்கமானது வெளிநாட்டு முதலீடுகளை இலங்கையில் மேம்படுத்தும் நோக்குடன் வரி முறைமைக்குப் பிரயோகிக்கத்தக்க காப்புவரித்திட்டத்தினை படிப்படியாக நீக்குவதற்கு எதிர்பார்க்கின்றது. இதற்கு ஏற்ப 96 தீர்வைக் கட்டணங்களை டபிள்யுரிஓவிற்கு இலங்கையின் பிணைப்பு விகித அர்ப்பணிப்பின் பிரகாரம் திருத்தி அமைத்திருக்கின்றது. மேலும் கைத்தொழில்களை வசதிப்படுத்தும் நோக்கத்துடன், தொழிற்சாலை மூலப்பொருட்களுக்கான தீர்வைக் கட்டணங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றது. மேலும், வியாபாரத்தின் நோக்கினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் வர்த்தகம் மற்றும் வியாபார உடன்படிக்கைகள் சரியான முறையில் சட்டரீதியாக செய்யப்படுகின்றதென்பதையும் உறுதிப்படுத்துவதற்கு தேசிய வர்த்தக வழக்கறிஞர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

**மந்தமான உலகக் கேள்வியின் காரணமாக ஏற்றமதியாளர்களால் எதிர்பார்க்கப்படும் சவால்களை இலகுபடுத்துவதற்கு, அரசாங்கம் ஏற்றுமதியாளர்களை வசதிப்படுத்துவதற்கு பல்வேறு முன்னெடுப்புக்களை முன்மொழிந்திருக்கின்றது.** அதன்பிரகாரம், 2017 வரவுசெலவுத் திட்டத்தில் ஏற்றுமதியாளர்களுக்காக வரி நன்மைகள், வர்த்தக வசதிக்காக ஏற்றுமதி இறக்குமதி (எக்ஸிம்) வங்கியினை நிறுவுதல் போன்றன முன்மொழியப்பட்டிருந்தன. மேலும், இறப்பர் சார்ந்த உற்பத்திகள், மருந்தாக்கல், துணி, கனியுப்பு, இரசாயனம் மற்றும் வாகனக் கைத்தொழில்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம், இயந்திர மனிதன், நவநாகரிகம், உயர்ரக ஆடைகள் மற்றும் படகு உற்பத்தி உள்ளடங்கலாக சுதந்திர வர்த்தக வலயத்தில் நிறுவுதல் மற்றும் விசேடமாக ஆடைகள் மற்றும் புடவைத் கைத்தொழில்களில் பின்னோக்கிய ஒருங்கிணைப்பினை அரசாங்கம் உதவுதல் போன்றவை முன்மொழியப்பட்டன.

**சர்வதேச வர்த்தகத்திலுள்ள உலக மற்றும் உள்ளூர் சவால்களினால் நாட்டிற்கு முன்கூட்டியதும் மற்றும் தெளிவானதுமான வர்த்தகக் கொள்கை தேவை என்பது முன்னிலைப்படுத்தப்பபட்டது.** பிரித்தானியாவின் வெளியேற்றம் (பிரக்சிற்) மற்றும் ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் புதிய அரசாங்கத்தினால் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையின் மாற்றங்கள் தொடர்பான விளைவுகளை எதிர்காலத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு கவனமான முறையில் திட்டமிடப்பட்ட வர்த்தக் கொள்கை தேவைப்படுகின்றது. ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜிஎஸ்பி + மீள்நியமனத்தை இலங்கை எதிர்பார்த்துக் கொண்டு இருப்பினும் இலங்கை உயர் தலா வருமானமுடைய உயர்நடுத்தர வருமான நாடுகளின் நிலையை அடைந்து கொண்டிருப்பதனால், சலுகை அடிப்படையிலான அநேகமான சந்தை நுளைவுகள் வரையறுக்கப்பட்டிருக்கும். ஆகவே, ஏற்கனவே இருக்கும் சந்தைப்போட்டிகளை பாதுகாக்கும் அதேவேளை தீவிரமான உலகப்போட்டியைத் தாக்குப்பிடித்தல் மற்றும் புதிய சந்தை மற்றும் தொழிநுட்ப நுழைவு போன்றவற்றை அணுகுவதற்கு ஏற்றுமதியாளர்களுக்கு இயலச்செய்வதற்கு நிறுவன ரீதியான உதவி இன்றியமையாததாகும். எனவே இலங்கையின் ஏற்றுமதி சேரிடம், பாரம்பரிய பொருட்களிலிந்து பன்முகப்படுத்தப்பட்ட ஏற்றுமதிப் பொருட்கள் கூடைக்கு புதிய ஏற்றுமதிப் பொருட்களை அறிமுகப்படுத்தல், ஏற்றுமதியில் போட்டித்தன்மையை மேம்படுத்தல் போன்றவற்றை வலியுறுத்துவதற்கு புதிய வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை மற்றும் தேசிய ஏற்றுமதி தந்திரோபாயம் போன்றவற்றை உருவாக்குவதற்கான தேவை இருக்கின்றது. தயாரிப்புத் துறையினை மேலும், தொழில்நுட்பம் சார்ந்ததாகவும், அதிக பெறுமதி கூட்டல் கொண்டதாகவும், மீள ஆற்றுகைப்படுத்துவதன் மூலம் நாட்டின் கைத்தொழில் கொள்கையை ஏற்றுமதி மேம்பாடு நோக்கியதாக ஒத்திசைவாக்குவது உலக உற்பத்தி பெறுமதிச் சங்கிலியினுள் நுழைவதற்கும் அதன்மூலம் வியாபார ஏற்றுமதியின் வளர்ச்சிக்கு

5

ஆதரவளிப்பதற்கும் அவசியமாகின்றது. ஒரு செயற்றிறன் வாய்ந்ததும் ஒத்திசைவானதுமான ஏற்றுமதி தந்திரோபாயத்தை உருவாக்கிக் கொள்வதற்கு ஏற்றுமதி மேம்பாட்டினை மேற்பார்வை செய்யும் பல்வேறுபட்ட நிறுவனங்களது தொழிற்பாடுகளை ஒருமுகப்படுத்துவது இன்றியமையாததாகும். மேலும், இறக்குமதித் தீர்வைகளை தாராளமயமாக்குவதனைக் கட்டுப்படுத்துகின்ற இறக்குமதிக் கொள்கை இறக்குமதி மூல நாடுகளிலிருந்து எதிரிடை நன்மைகளை தூண்டுவதற்கு துணைபுரியும். மாறாக இது இலங்கையை உலகப் பெறுமதிச் சங்கிலியில் தன்னையொரு சிறந்த நிலையில் நிறுத்திக் கொள்வதற்கும் நாட்டின் உற்பத்திப் பங்கீட்டு வலையமைப்பினை அகலப்படுத்திக் கொள்வதற்கும் வழிசெய்யும்.

## 5.3 பொருட்களிலான வர்த்தகம், வர்த்தக நிலுவை, வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தகத்தின் போக்கு

### 5.3.1 ஏற்றுமதிச் செயலாற்றம்

**ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக 2016 இலும் சுருக்கமடைந்தமைக்கு பன்னாட்டு பண்ட விலைகளில் எற்பட்ட கீழ் நோக்கிய அசைவும் இலங்கையின் முக்கிய ஏற்றுமதி நாடுகளில் காணப்பட்ட மெதுவான வளர்ச்சியும் காரணங்களாக அமைந்தன.** 2016இன் பிற்பகுதியில் நேர்க்கணிய வளர்ச்சி ஏற்பட்ட போதிலும், ஏற்றுமதிகளில் இருந்தான வருவாய் 2015இல் ஐ.அ.டொலர் 10,546 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 10,310 மில்லியனிற்கு 2.2 சதவீதத்தால் குறைவடைந்து, ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் வேளாண்மை மற்றும் கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியைப் பிரதிபலித்தது.

**ஏற்றுமதி வருவாயின் பாரிய வீழ்ச்சிக்கு மொத்த ஏற்றுமதியில் ஏறத்தாழ ஒன்றில் நான்கு பங்கு இருக்கும் வேளாண்மையின் ஏற்றுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக அமைந்தது.** வேளாண்மை ஏற்றுமதிகளில் இருந்தான வருவாய் 2016இல் ஐ.அ.டொலர் 2,326 மில்லியனுக்கு 6.3 சதவீதத்தால் குறைவடைந்து அநேக வேளாண்மை உற்பத்தி வகைகளின் குறைந்த அளவான ஏற்றுமதிகளை பிரதிபலித்தது. தேயிலை ஏற்றுமதியின் மொத்த அளவு 2015 இல் 17.7 சதவீதம் வீழ்ச்சியடைந்ததை விட மேலும், 2016இல் 5.3 சதவீதத்தினால் 1,269 மில்லியனாக குறைவடைந்ததோடு 2009 இற்கு பிற்பட்ட காலப்பகுதியில் குறைவான அளவைப் பதிவுசெய்தது. தேயிலையின் மொத்த ஏற்றுமதி அளவு 289 மில்லியன் கி.கிறாமிற்கு 5.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு கேள்வியிலும் உற்பத்தியிலும் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாக அமைந்தது. 2016இல் தேயிலை உற்பத்தியின் வீழ்ச்சிக்கு சீரற்ற காலநிலையும் பெருந்தோட்டத் துறையில் தொழிற்சங்க நடவடிக்கைகளும் காரணமாக அமைந்தன. புவிசார் அரசியல் அபிவிருத்திகள் மற்றும் முக்கியமாக எண்ணெயிலிருந்தான வருமானத்தில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி என்பன ருஷ்யா மற்றும் மத்திய கிழக்கின் சில நாடுகள் போன்ற முக்கிய வாங்குநர்களிடமிருந்தான இலங்கைத் தேயிலைக்கான கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தன. வருடத்தின் முதல் அரையாண்டில் 6.3 சதவீத வீழ்ச்சி பதிவுசெய்யப்பட்ட போதிலும், 2016இல் தேயிலைக்கான சராசரி ஏற்றுமதி விலை 1 கி.கிறாமிற்கு ஐ.அ.டொலர் 4.39 இற்கு 0.6 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது. வாசனைத் திரவியம் மற்றும் சிறுவேளாண்மை உற்பத்திகள் என்பவற்றின் மூலம் கிடைக்கும் ஏற்றுமதி வருமானம் குறைவடைந்தமையும் வேளாண்மை ஏற்றுமதியின் வருமானத்தை பெரிதும் குறைவடையச் செய்தது. வாசனைத் திரவியங்களில் இருந்தான ஏற்றுமதி வருவாய் 2015இல் பதிவுசெய்யப்பட்ட 42.7 சதவீத அதிகரிப்பிற்கு எதிராக 2016இல் ஐ.அ.டொலர் 317 மில்லியனிற்கு 16.0 சதவீதத்தால் வீழ்ச்சி அடைந்து, மிளகு மற்றும் கராம்பு என்பவற்றின் ஏற்றுமதி அளவுகளில் முறையே 50.8 சதவீதம் மற்றும் 66.6 சதவீத கணிசமான வீழ்ச்சியைப் பிரதிபலித்தது. எனினும் கறுவா, ஜாதிக்காய் ஆகியவற்றின் ஏற்றுமதி அளவும் விலையும் அதிகரிப்பைக் காட்டியிருந்தன. சிறுவேளாண்மை உற்பத்திகளிலிருந்து கிடைக்கப்பெற்ற வருவாய் ஐ.அ.டொலர் 114 மில்லியனிற்கு 28.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு பாக்கு மற்றும் அரிசியின் ஏற்றுமதி அளவு முறையே 54.4 சதவீதம் மற்றும் 54.2 சதவீத்தில் வீழ்ச்சி அடைந்தமையே காரணமாகும்.

**தெங்கு, இறப்பர் மற்றும் கடலுணவு ஆகியவற்றின் ஏற்றுமதி வருவாயின் அதிகரிப்பு வேளாண்மையில் ஏற்பட்ட வீழ்ச்சியை பகுதியளவில் ஈடுசெய்யும் வகையில் அமைந்திருந்தது.**

வரைபடம் 5.2
ஏற்றுமதிகளின் உள்ளடக்கம் - 2016




மூலம் : இலங்கை மத்திய வங்கி

## சிறப்புக்குறிப்பு 07
## ஏற்றுமதியினை ஊக்குவிப்பதற்கான தேசிய உபாயம்

### அறிமுகம்

ஏற்றுமதி வளர்ச்சிக்கும் பொருளாதார வளர்ச்சிக்குமிடையிலான தொடர்பு பற்றி பொருளியல் நூல்களிடையே அதிகளவிற்கு விவாதிக்கப்பட்டு வருகின்றது. ஏற்றுமதி வளர்ச்சிக்கும் பொருளாதார வளர்ச்சிக்குமிடையே இரு வழித் தொடர்பு இருக்கின்றது என்ற பொதுவான விதியொன்று இருக்கின்ற போதும் இத்தொடர்பானது இலங்கையில் இன்னமும் காணப்படவில்லை. 10.4 சதவீதம் கொண்ட கூட்டு ஆண்டு வளர்ச்சி வீதத்தினால் மொ.உ.உற்பத்தி வளர்ச்சியடைந்து காணப்பட்ட 2000 - 2016ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இவ்வனுபவம் காணப்பட்ட வேளையில் ஏற்றுமதி 4.0 சதவீதத்தினால் மாத்திரமே வளர்ச்சி கண்டது. கடந்த அண்மைக் காலத்தில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியானது அதிகரித்த ஏற்றுமதியினைவிட உள்நாட்டுக் கேள்வியின் விரிவாக்கத்தினால் பெருமளவிற்கு உந்தப்பட்டிருந்தது.

உள்நாட்டுக் கேள்வியில் ஏற்பட்ட விரிவாக்கத்தின் காரணமாக முக்கியமாகத் தோன்றி 2005 - 2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் சான்று அளிக்கப்பட்ட உயர்ந்த மட்ட பொருளாதார வளர்ச்சி, 2013ஆம் ஆண்டிற்குப் பின்னர் 4 - 5 சதவீதத்திற்கிடையே தேக்கமடையத் தொடங்கியமையானது, இலங்கை போன்ற சிறிய பொருளாதாரமொன்றில் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய வேகத்திலான பொருளாதார வளர்ச்சிக்கு தேறிய வெளிநாட்டுக் கேள்வி அதிமுக்கியமானது என்பதனை எடுத்துக்காட்டுவதாயிருந்தது. விரிவடைந்த வர்த்தகம் மற்றும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை மற்றும் வெளிநாட்டுக் கடன்பாடுகளின் நிலையற்ற மட்டங்களின் நம்பிக்கை அதிகரிப்பு என்பன வர்த்தகமல்லா மற்றும் உள்நாட்டுக் கேள்வியின் சார்ந்த வளர்ச்சி தவிர்க்க முடியாத விளைவாகும். இது, உயர் பெறுமதி கொண்ட ஏற்றுமதிகளின் ஊக்குவிப்பின் மீது கவனம் செலுத்தும் அனைத்தையுமுள்ளடக்கிய உபாயங்கள் வெளிநாட்டுக் நடைமுறைக் கணக்கு மீதி மற்றும் உயர் வளர்ச்சியினை அடைவதற்கு கட்டாயமான சான்றினை வழங்குகின்றது. மேலும், உயர் ஏற்றுமதி வருமானத்தினை உருவாக்குவது, நடுத்தர மற்றும் நீண்ட கால வெளிநாட்டுப் பொறுப்புக்களில் ஒன்றுதிரண்ட இருப்புக்களுக்கான தாங்கிருப்பொன்றாக தொழிற்படுமென்பதனாலும் செலாவணி வீதத்தினை உறுதிப்படுத்துவதற்குப் பயன்படுத்திக் கொள்ள முடியுமென்பதனாலும் இது நாட்டின் பொருளாதாரத்தின் தாக்குப்பிடிக்கும்தன்மையினை மேம்படுத்த உதவக்கூடியதாக ஒதுக்குகளில் வலுவான மட்டமொன்றினை கட்டியெழுப்புவதற்குப் பங்களிக்கும். மேலும், ஏற்றுமதிகளின் மீது புதுப்பிக்கப்பட்ட பார்வையினைச் செலுத்துவது பொருளாதாரத்தின் மிகவும் வினைத்திறன்மிக்க துறைகளில் முதலீடுகளைத் திருப்பிவிட உதவும். ஏற்றுமதிகளின் வளர்ச்சி புதிய தொழில்நுட்பங்களை உட்புகுத்துதல், தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல், பெருமளவு பொருளாதாரச் சிக்கனங்கள் மற்றும் பொருளாதாரத்தினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தியாக்க மூலவளங்களை விரிவுபடுத்துதல் போன்ற மற்றைய பல நன்மைகளையும் பெற்றுக்கொள்ள உதவும்.

இலங்கை 1977இல் அதன் பொருளாதாரத்தினைத் தாராளமயப்படுத்திக் கொள்வதில் அதன் அயல்நாடுகளிடையே தலையானதாகக் காணப்பட்டது. தனியார் துறையினால் அடையப்பட்ட அபிவிருத்தி, ஏற்றுமதியினால் வழிநடத்தப்படும் வளர்ச்சி மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் ஊக்குவிப்பு என்பன வெளிநாட்டு வர்த்தகத்திலும் கட்டுப்பாடற்ற வர்த்தகத் தன்மைகளிலும்[1] குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை உடனடியாகப் பெற்றுக்கொள்ள வழிவகுத்தன. இதற்கமைய, 1977இல் 36.4 சதவீதமாகக் காணப்பட்ட கட்டுப்பாடற்ற வர்த்தகம் 1979இல் 72.2 சதவீதத்திற்கு ஏறத்தாழ இருமடங்காகிய வேளையில் 1977இல் மொ.உ.உற்பத்தியில் 18.7 சதவீதமாகக் காணப்பட்ட ஏற்றுமதி 1979இல் 29.2 சதவீதத்திற்குக் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. கொள்கை நோக்கில் ஏற்பட்ட இம்மாற்றம் ஏற்றுமதி வருவாய்களில் கணிசமான முன்னேற்றங்களைத் தோற்றுவித்தது. 1977இன் ஐ.அ.டொலர் 767 மில்லியனிலிருந்து 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 5,522 மில்லியனுக்கு ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்தது. எனினும், 2000ஆம் ஆண்டிலிருந்து ஏற்றுமதிகளின் வளர்ச்சி மிக ஊக்கம் தருவதாகக் காணப்படவில்லை. 2016இல் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஐ.அ.டொலர் 10,310 மில்லியனுக்கு அதிகரித்த வேளையில் இறக்குமதிகளின் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 19,400 மில்லியனுக்கு அதிகரித்தது. இதன் விளைவாக, 2016 அளவில் வர்த்தகப் பற்றாக்குறை ஐ.அ.டொலர் 9,090 மில்லியனுக்கு விரிவடைந்தது. தாராளமயமாக்கல் கொள்கையினைப் பின்பற்றலின் உடனடிப் பின்விளைவுகளில் காணப்பட்ட தலைகீழான மாற்றங்களுக்கும் மத்தியிலும் இலங்கையின் பன்னாட்டு வர்த்தகச் செயற்பாடானது மந்தமாகி, தாராளமயமாக்கலுக்கு முன் காணப்பட்ட மட்டங்களுக்கு பின்தள்ளப்பட்டது. 2016இல் இலங்கையின் கட்டுப்பாடற்ற வர்த்தகமானது 36.5 சதவீதமான வேளையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பான ஏற்றுமதியானது 12.7 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. ஏற்றுமதிக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதத்தை 2015இல் மலேசியா 67.5 சதவீதம், தாய்லாந்து 54.2 சதவீதம் மற்றும் வியட்நாம் 83.7 சதவீதமாகக் கொண்டது.

வரைபடம் 7.1
**இலங்கையின் வர்த்தகத்தின் கட்டுப்பாடற்றத் தன்மை மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு ஏற்றுமதிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

1 வர்த்தகக் கட்டுப்பாடற்றதன்மையானது மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வணிகப்பொருள் ஏற்றுமதி மற்றும் வணிகப்பொருள் இறக்குமதிகளின் மொத்தத்தினால் அளவிடப்படுகிறது.

2 ஏற்றுமதிப் பெறுமதிச் சுட்டெண் ஏற்றுமதிகளின் நடைமுறைப் பெறுமதியினைப் (க.ஏ.பெ) பயன்படுத்தி உலக வங்கியினால் சமர்ப்பிக்கப்படுகிறது. இது ஐ.அ.டொலரிற்கு மாற்றப்பட்டு வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகள் மாநாட்டின் தரவுகளிலிருந்து பெறப்பட்ட அடிப்படைக் காலப்பகுதிக்கான (2000ஆம் ஆண்டு) சராசரியின் சதவீதமொன்றாக விளக்கப்படுகிறது.

5

வரைபடம் 7.2
ஏற்றுமதிப் பெறுமதிச் சுட்டெண்ணின் (2000=100) ஒப்பீடு




மூலம்: உலக வங்கி

தாராளமயமாக்கலின் பின்னரான காலப்பகுதியானது இலங்கை ஏற்றுமதிக் கூறுகளில் முதன்மையாக வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதிக் கட்டமைப்பிலிருந்து அதிகப் பெறுமதிகூட்டப்பட்ட ஊழியர் - செறிவு உற்பத்திக் கட்டமைப்பு மாறியதனைச் சான்றுபடுத்தியது. கூறுகளின் மாற்றங்களுக்கு மத்தியிலும், ஏற்றுமதியானது ஆடைகள் மற்றும் தேயிலை ஆகிய இரண்டு பாரம்பரிய உற்பத்திகளில் தொடர்ந்து கவனத்தைச் செலுத்தியது. இவை ஏற்றுமதிக் கூடையில் அரைப்பங்கிற்கும் மேலாக வகைகூறி, ஏற்றுமதித் துறையில் வரையறுக்கப்பட்ட உற்பத்தி பன்முகப்படுத்தலினைப் பிரதிபலிக்கின்றது. ஏற்றுமதித் துறைச் சந்தை தொடர்பில் குறைந்த பன்முகப்படுத்தலினைக் காட்டுகின்றது. ஐரோப்பாவும்

அட்டவணை சி.கு. 7.1
தேர்ந்தெடுக்கப்பட்ட பிராந்திய நாடுகளின் மொ.உ.உற்பத்தி, வணிகப்பொருள் ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள்

| நாட்டின் பெயர் | குறிகாட்டிகள் | ஐ.அ.டொலர் பில்லியனில் பெறுமதி | | | | கூ.வ.வீ (%) |
|---|---|---|---|---|---|---|
| | | 1985 | 1995 | 2005 | 2015 | 1985-2015 |
| வங்காளதேசம் | மொ.உ.உ | 22.3 | 37.9 | 69.4 | 195.1 | 7.5 |
| | ஏற்றுமதிகள் | 1.0 | 3.5 | 9.3 | 32.4 | 12.3 |
| | இறக்குமதிகள் | 2.5 | 6.7 | 13.9 | 39.5 | 9.6 |
| தென் கொரியா | மொ.உ.உ | 103.7 | 559.3 | 898.1 | 1,377.9 | 9.0 |
| | ஏற்றுமதிகள் | 30.3 | 125.1 | 284.4 | 526.8 | 10.0 |
| | இறக்குமதிகள் | 31.1 | 135.1 | 261.2 | 436.5 | 9.2 |
| தாய்லாந்து | மொ.உ.உ | 38.9 | 169.3 | 189.3 | 395.2 | 8.0 |
| | ஏற்றுமதிகள் | 7.1 | 56.4 | 110.9 | 214.4 | 12.0 |
| | இறக்குமதிகள் | 9.2 | 70.8 | 118.2 | 202.7 | 10.8 |
| வியட்நாம் | மொ.உ.உ | 14.1 | 20.7 | 57.6 | 193.6 | 9.1 |
| | ஏற்றுமதிகள் | 0.7 | 5.4 | 32.4 | 162.1 | 19.9 |
| | இறக்குமதிகள் | 1.9 | 8.2 | 36.8 | 166.1 | 16.2 |
| இலங்கை | மொ.உ.உ | 6.0 | 13.0 | 24.4 | 80.6 | 9.1 |
| | ஏற்றுமதிகள் | 1.3 | 3.8 | 6.3 | 10.5 | 7.2 |
| | இறக்குமதிகள் | 2.0 | 5.3 | 8.9 | 18.9 | 7.7 |

குறிப்பு : இலங்கையின் தரவுகள் தேசிய மூலங்களிலிருந்தானவை. ஏனைய நாடுகளின் தரவுகள் உலக வங்கியிலிருந்தானவை.
மொ.உ.உ: மொத்த உள்நாட்டு உற்பத்தி
கூ.வ.வீ: கூட்டாண்டு வளர்ச்சி வீதம்

5

ஐக்கிய அமெரிக்காவும் மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ மூன்றிலிரண்டு பங்கிற்குத் தொடர்ந்தும் வகைகூறியது. மேலும், ஏறத்தாழ 70 சதவீதமான தேயிலை ஏற்றுமதிகள் மத்திய கிழக்கிற்கும் சுதந்திர நாடுகளின் பொதுநலவாயத்திற்குமே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதில் கேள்வி, எண்ணெய் ஏற்றுமதிகளினூடான வருமான உழைப்பிற்கேற்ப மாறக்கூடியதாகும். உற்பத்தி மற்றும் சந்தைப் பல்வகைப்படுத்தலிலான பற்றாக்குறை ஏற்றுமதித் துறையின் பாதிக்கக்கூடிய நன்மையினை குறித்துக்காட்டுகின்றது.

பிராந்திய போட்டியாளர்கள் வெளிநாட்டு வர்த்தகத்தினை விரைந்து விரிவுபடுத்தியுள்ளதுடன் ஏற்றுமதியினால் வழிநடத்தப்படும் வளர்ச்சிக்குச் சிறந்தவொரு மாதிரியாகவும் தோற்றம் பெற்றுள்ளன. உலக வங்கியினால் (வரைபடம் சி.கு. 7.2) வழங்கப்பட்டுள்ள ஏற்றுமதிப் பெறுமதிச்சுட்டெண்2 2000ஆம் ஆண்டிலிருந்து 2015ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கையின் ஏற்றுமதித் துறை இப்பிராந்தியத்திலுள்ள அதன் இணைத்தரப்பினர்களுடன் ஒப்பிடுகையில் எந்தளவிற்குப் பின்தங்கியுள்ளது என்பதனைக் காட்டுகின்றது. 2000ஆம் ஆண்டின் ஏற்றுமதிகளுடன் ஒப்பிடுகையில் 2015ஆம் ஆண்டில் இலங்கை அதன் ஏற்றுமதிகளை 1.9 தடவைகள் மாத்திரம் அதிகரித்த வேளையில் வியட்நாமும் வங்காளதேசமும் முறையே 11.2 தடவைகளும் 5.1 தடவைகளும் 1990 களிலிருந்து ஏற்றுமதியினால் வளர்ச்சியைக் காண்பித்த தென்கொரியா மற்றும் தாய்லாந்து ஒவ்வொன்றும் 2015இல் 3.1 தடவைகளும் அதிகரித்துக் கொண்டன.கடந்த மூன்று தசாப்த காலங்களுக்கான தெரிந்தெடுக்கப்பட்ட பல ஆசிய நாடுகளின் வெளிநாட்டு வர்த்தகத்தையும் மொ.உ.உற்பத்தியையும் பகுப்பாய்வு செய்யும் பொழுது இதேபோக்கினை அவதானிக்க முடியும். அனைத்து நாடுகளினதும் செயலாற்றம் மற்றையவற்றினை ஒத்ததாகக் காணப்படுகின்ற வேளையில், மொத்த உள்நாட்டு உற்பத்தி விமர்சிக்கக்கூடிய செயலாற்றத்தில் இருந்த போதும் குறைந்த ஏற்றுமதிகள்3 மற்றும் இறக்குமதிகளின் பின்னணியில் இலங்கையின் செயலாற்றம் வீழ்ச்சியடைந்தது.

**பன்னாட்டு அனுபவங்களிலிருந்தான வெற்றிகரமான கதைகள்**

தென்கொரியா, தாய்லாந்து, வியட்நாம் மற்றும் வங்காளதேசம் போன்ற நாடுகளின் ஏற்றுமதி வளர்ச்சி தொடர்பான பகுப்பாய்வொன்று இந்நாடுகள் அனைத்தும் பெருமளவிற்கு ஒரே மாதிரியான ஏற்றுமதி அபிவிருத்திக் கொள்கைகளைப் பின்பற்றியமையினைக் காட்டின. அனைத்தையுமுள்ளடக்கிய ஏற்றுமதி ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், ஏற்றுமதி உதவுதொகை, முன்னுரிமை அடிப்படையிலான வட்டி வீதங்களுடன் கூடிய ஏற்றுமதிக் கொடுகடன் திட்டம் மற்றும் வட்டி ஊக்குவிப்புக்கள் என்பன ஏற்றுமதியினை மேம்படுத்த நடைமுறைப்படுத்தப்பட்டன. இவ்வுபாயங்களுக்கு தாழ்ந்த மற்றும் உறுதியான பணவீக்கத்தினூடான சாதகமான பேரண்டப் பொருளாதாரச் சூழலின் உருவாக்கம், குறைந்த வட்டி வீதங்கள் மற்றும் போட்டி அடிப்படையிலான செலாவணி வீதங்கள் என்பன பக்கபலமாக விளங்கின. ஆர்வலர்களின் ஈடுபாடும் ஒட்டுமொத்த ஊக்குவிப்பு உபாயத்திற்கு மைய ஊக்கியாக விளங்குகிறது. இதன்படி, உரிய நேரத்தில் சௌகன்யமான தீர்மானங்களை எடுப்பதன் பொருட்டு அரசாங்கம், கைத்தொழில் நிபுணர்கள், வர்த்தக வசதிப்படுத்துநர்கள் மற்றும் வியாபார ஆளணியினர் உள்ளிட்ட பல்வேறு ஆர்வலர்களுடனும் கிரமமான ஏற்றுமதி ஊக்குவிப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. பொருத்தமான ஒழுங்குமுறைப்படுத்தல் சூழலொன்றும் உருவாக்கப்பட்டது. இதில் வளர்ச்சியின் எந்திரமாக தனியார்

துறையினை உருவாக்குவதற்கான ஊக்குவிப்பொன்றாக தனியார் துறை சொத்துடமையினை அங்கீகரிக்கும் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. மூலதனக் கணக்கு தாராளமயமாக்கப்படுவதனை இயலுமைப்படுத்துவதற்கும் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்குமான புதிய சட்டங்கள் அறிமுகப்பத்தப்பட்டிருக்கின்றமையானது வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் பாய்ச்சலில் அதிகரிப்பினைத் தோற்றுவிக்கும். பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்டதன் பெறுபேறாக அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த கொள்கையானது அபிவிருத்தியடைந்த நாடுகளுடன், இந்நாடுகள் இணைந்து செயற்படுவதற்கான வழிகளை வழங்குகின்ற வேளையில் இவை, உலக வர்த்தக அமைப்பு மற்றும் உலக வங்கி போன்ற பன்னாட்டு அமைப்புக்களிலிருந்தான பல்வேறு துறைகளிலுமிருந்து உதவிகளைப் பெற்றுக்கொண்டன.

உள்நாட்டு உற்பத்தி நியதிகளில், கொள்கைகள் இறக்குமதிப் பதிலீடுகளுக்கு வசதியளிக்கக்கூடிய முன்னெடுப்புக்களுக்கு முன்னுரிமையளிக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டன. இதன் மூலம் உள்நாட்டு நுகர்வுக் கேள்வி நிறைவு செய்யப்படும். அத்தகைய முன்னெடுப்புக்கள் தொழில்நுட்பவியல் புத்தம் புதுமைகளை மேற்கொள்ளுதல் மற்றும் தயாரிப்பு இயலாற்றலை விரிவுபடுத்துதல் போன்றவற்றினை உள்ளடக்கியிருந்தன. பன்னாட்டுச் சந்தையில், போட்டியிடக்கூடிய விதத்தில் உள்நாட்டுக் கைத்தொழில்கள் இயலளவினைப் பெற்றுக்கொள்ளும் பொழுது புடவைகள் மற்றும் ஆடைகள் போன்ற தொழிலாளர் செறிவுமிக்க கைத்தொழில் உற்பத்திகளின் ஏற்றுமதிகளை ஊக்குவிக்கின்ற ஏற்றுமதி விரிவாக்கக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் விதத்தில் வலியுறுத்தல்கள் மாற்றமடைகின்றன. ஏற்றுமதி வளர்ச்சி வலுவானதொரு மட்டத்தினை அடைந்ததும் இந்நாடுகளின் முக்கிய வலியுறுத்தல் கைத்தொழில் கொள்கைகள் ஏற்றுமதித் துறையினை உயர்வடைந்து வரும் கூலி மட்டங்களுடனும் இணைக்கும் பொருட்டும் ஒட்டுமொத்த வளர்ச்சிச் செயன்முறைக்கு வசதியளிக்கும் பொருட்டும் தொழிலாளர் செறிவுமிக்கவற்றிலிருந்து உயர் பெறுமதிகூட்டல்களுடன் கூடிய கைத்தொழில்களுக்கு மாறுகின்ற விதத்தில் மீள்ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களுக்கு கைத்தொழில் கொள்கைகளை மாற்றிக் கொள்வதாகும். இதன் விளைவாக, பெறுமதிகூட்டப்பட்ட கைத்தொழில்களின் பங்கு, உற்பத்தி பன்முகப்படுத்தலுடன் சேர்ந்து அதிகரித்த வேளையில், தொழிலாளர் செறிவுமிக்க கைத்தொழில் ஏற்றுமதிகளும் வேளாண்மை ஏற்றுமதிகளும் வீழ்ச்சியடைந்தன. ஏற்றுமதி உபாயங்களும் அந்தந்த நாடுகளுக்கேயுரிய சிறப்பம்சங்களை உள்ளடக்கியிருந்தன. உதாரணமாக, வியட்நாம் மைய ரீதியாக திட்டமிடப்பட்ட வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டதொரு பொருளாதாரமாகும். 1986இல் பல பொருளாதாரச் சீர்திருத்தக் கொள்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இவை ஏற்றுமதித் துறையினையும் ஒட்டுமொத்தமாக பொருளாதாரத்தினையும் மாற்றியமைக்க வழியமைத்தன. வியட்நாம் கோப்பி மற்றும் இறப்பர் மற்றும் அரசிற்குச் சொந்தமான காணிகளைத் தனியார் மயப்படுத்தியமை, கைத்தொழில் துறைக்கு முன்னுரிமையளிக்கும் சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டம் போன்ற உயர் பெறுமதி கொண்ட வேளாண்மை கைத்தொழில் உற்பத்திகளை அபிவிருத்திச் செய்வதுடன் தொடர்பான கொள்கைகள் போன்ற பல்வேறு சீர்திருத்தங்களை அதன் பாரிய வேளாண்மைத் துறைக்கு அறிமுகப்படுத்தியது. இதன் விளைவாக, வேளாண்மை ஏற்றுமதிகளும் மொ.உ.உற்பத்திக்கான துறை வாரியான பங்களிப்பும் வீழ்ச்சியடைந்த போதும் வேளாண்மைத் துறையின் வினைத்திறன் மேம்பட்டமையானது வேளாண்மை உற்பத்திகளின் தேறிய இறக்குமதியாளர் என்ற நிலையிலிருந்து தேறிய ஏற்றுமதியாளர் என்ற நிலைக்கு நாடு மாற்றமடையும் நிலைமையொன்றினைத் தோற்றுவித்தது. வியட்நாம், தென்கொரியா மற்றும் தாய்லாந்து போன்ற மற்றைய நாடுகளைப் பொறுத்தவரையில் ஏற்றுமதிகளில் கணிசமான வளர்ச்சி மட்டத்தினை எய்தியதன் பின்னர் கொள்கை முன்னுரிமைகள் துறை சார்ந்த ஆதரவு முறையிலிருந்து தொழிற்பாடு சார்ந்த ஆதரவு முறைக்கு மாற்றமடைந்தது. இது, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான அனைத்தையுமுள்ளடக்கிய உதவிக்கு வழிவகுத்ததுடன் இது, இறுதியில் தொழில்நுட்பப் புத்தாக்கத்தில் குறிப்பிடத்தக்கப் பாய்ச்சலுக்கு வழிவகுத்தது. தொழில்நுட்பவியலை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் ஏற்றுமதிகளில் அதிகரிப்பினைத் தோற்றுவித்தது. எனினும், நீண்ட காலத்தில், தென்கொரியா அரசாங்கம் சந்தைப் பொறிமுறையினைப் பலப்படுத்தும் பொருட்டும், சமமான வாய்ப்புக்களின் அடிப்படையில் உள்நாட்டுத் தொழிற்பாட்டாளர்கள் போட்டியின் அடிப்படையில் இயங்குவதற்கு இயலச்செய்யும் விதத்திலும் ஏற்றுமதித் துறைக்கு வழங்கிய பெருமளவு உதவிகள் தொடர்பான கவனத்தினை புறக்கீடு செய்து கொண்டது. மறுபுறத்தில் ஐரோப்பிய ஒன்றியம் - ஆயுதங்கள் தவிர்ந்த அனைத்தும்[4] வசதிகளின் நன்மையுடன் வங்காளதேசத்தின் ஏற்றுமதிகள் 2000ஆம் ஆண்டிற்குப் பின்னர் 5 மடங்கு கூடுதலானதாக வளர்ச்சியடைந்தமை மொ.உ.உற்பத்திக்கான ஏற்றுமதியிலும் கட்டற்ற வர்த்தகத்திலும் உறுதியான மேம்பாட்டினைத் தோற்றுவித்ததுடன், உற்பத்திப் பன்முகப்படுத்தல் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டவிடத்து ஆடைக் கைத்தொழில் மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 90 சதவீதத்திற்கு வகைகூறியது. இலங்கையைப் போன்றே, வங்காளதேசத்தின் முக்கிய ஏற்றுமதி நாடுகளாக ஐக்கிய அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் விளங்கி இப்பிராந்தியத்தில் காணப்படும் சாதகமற்ற நிகழ்வுகளினால் இதன் ஏற்றுமதித் துறை பெருமளவிற்குப் பாதிக்கப்படக்கூடிய தன்மையொன்றினை உருவாக்கியிருக்கின்றன. இந்நாடுகளின் அனுபவமும் நீண்ட காலத்திற்கான உறுதியான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அனைத்து ஆர்வலர்களையும் இயலுமைப்படுத்துவதற்கான நிலையான கொள்கையொன்றின் முக்கியத்துவத்தினைக் எடுத்துக்காட்டின. எனினும், அத்தகைய கொள்கைகளும் கூட உள்நாட்டு மற்றும் உலகளாவிய சூழ்நிலையில் தற்காலத்திலும் எதிர்காலத்திலுமான அபிவிருத்திகளைப் பின்பற்றுவதற்குப் போதுமான நெகிழ்ச்சித்தன்மையைக் கொண்டனவாக இருந்தன.

### ஏற்றுமதி ஊக்குவித்தல் தொடர்பான தேசிய உபாயம்

“வறுமைக்கு முடிவு காணுதல்” மற்றும் “பொருளாதாரச் சுபீட்சத்தினைப் பகிர்ந்து கொள்ளுதல்” என்ற இரட்டை இலக்குகளை நோக்கி முன்னேறுவதற்கான தடைகளையும் வளர்ச்சியைத் தூண்டுவோரையும் இனங்காண்பதற்காக

3 இருப்பினும், இது கட்டாயமாக கவனிக்கப்பட வேண்டும், இலங்கையில் பணிகள் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் அண்மைக் காலத்தில் குறிப்பிடத்தக்கதொரு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளல் அல்லது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஏற்றுமதிகள், போக்குவரத்து மற்றும் சுற்றுலாவில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினைப் பதிவுசெய்ததினால் 2009 இலிருந்து பணிகள் ஏற்றுமதி விரைவாக அதிகரித்தது. பணிகள் இறக்குமதியும் அதேபோக்கினைப் பின்பற்றின. தேறிய நியதிகளில் பணிகள் ஏற்றுமதியானது ஆண்டு முழுவதும் அதிகரித்த போதிலும், அவ்வதிகரிப்பானது வணிகப்பொருள் ஏற்றுமதியில் ஏற்பட்ட பற்றாக்குறையை எதிரீடு செய்யவில்லை.

4 ஐக்கிய ஒன்றியத்தில் ஆயுதங்கள் தவிர்ந்த அனைத்துமானது, ஆயுதம் மற்றும் போர்த் தளபாடங்கள் என்பனவற்றின் விதிவிலக்குடன், குறைந்த அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு ஐக்கிய ஒன்றியத்திற்கு அவர்களின் அனைத்து ஏற்றுமதிகளுக்கும் முழு வரியல்லா அணுகுமுறையினை வழங்க 2001ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

2016இல் உலக வங்கியினால் இலங்கையின் முறையியல் சார்ந்த நாட்டுப் பிரச்சனைக்கான அறிகுறிகளை அடையாளம் காணும் ஆய்வொன்று நடத்தப்பட்டது. இது ஹோஸ்மன், றொட்றிக் மற்றும் வலஸ்கோவின் வளர்ச்சிக்கான அறிகுறிகளை அடையாளம் காணும் மாதிரி மற்றும் புஸ்சொலோ மற்றும் லொபஸ் - கல்பாவின் (2014) சொத்துக்களை அடிப்படையாகக் கொண்ட கட்டமைப்பு என்பனவற்றை இணைத்த கலப்புக் கட்டமைப்பொன்றினைப் பயன்படுத்தியது. இது இலங்கையின் ஏற்றுமதி வளர்ச்சியின் உள்ளார்ந்த வளத்தினைக் குறிப்பிடத்தக்களவிற்கு விடுவிப்பதற்கு உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டிய பகுதிகளான, இலங்கையின் வர்த்தகம் தொடர்பான கொள்கைகளின் திருத்தம், வினைத்திறன்மிக்க தொழிற்படையினை விரிவுபடுத்தும் முகமான கல்வித் துறைக்கு அதிக வளங்கள் மற்றும் தரம் மேம்படுத்தும் முகாமைத்துவம் என்பனவற்றை வழங்கல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் தொழில்முயற்சியாளர் வலையமைப்பிற்கிடையில் இணைப்பினை அபிவிருத்தி செய்வதன் மூலம் புத்தாக்கத்தினை மேம்படுத்தல் என்பனவற்றின் அவசியத்தையும் எடுத்துக்காட்டியது. ஏற்றுமதியினை மேம்படுத்த உபாயங்களை அபிவிருத்தி செய்யும் பொழுது பின்வரும் அம்சங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**வர்த்தகத்தினை வசதிப்படுத்துவதற்கான பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகள்**

பன்னாட்டு மற்றும் உள்நாட்டுத் துறைகளில் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக பொருளாதாரமொன்றில் உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்கும் ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கான முக்கிய விலைகளாக வட்டி வீதங்களும் செலாவணி வீதங்களும் காணப்படுகின்றன. இலங்கை போன்ற சிறிய பொருளாதாரங்களில் செலாவணி வீதம் பணவீக்கம் கொண்டதாக இருக்கமுடியும். ஆகவே, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உறுதிப்பாட்டிற்கிடையில் சமநிலையொன்றினைப் பேணுவது முக்கியமானதாகும். வர்த்தகப் பெறுபேறுகளுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ள செலாவணி வீதமொன்றினைக் கருத்திற்கொள்கையில், தவறாக இணைக்கப்பட்ட செலாவணி வீதத்திலிருந்து மிகச் சிறந்த வர்த்தகப் பெறுபேறுகளை எதிர்பார்க்க முடியாது. இலங்கை நீண்ட காலமாக ஏற்றுமதிக்கெதிரான பாரபட்சமான தன்மையொன்றை உருவாக்கிய செலாவணி வீத அமைப்பொன்றைக் கொண்டிருக்கிறது. பெயரளவு செலாவணி வீதத்தினை தாழ்ந்த மட்டத்தில் பேணுவது பாரிய சென்மதி நிலுவைப் பற்றாக்குறைகளுக்கு வழிவகுத்து, ஒதுக்குகளில் இழப்புக்களை ஏற்படுத்துவதுடன் அரசாங்கம் வர்த்தக வட்டி வீதங்களில் கடன்பாடுகளை நாடுவதற்கும் வெளிநாட்டுப் படுகடன்களை அதிகரிப்பதற்கும் காரணமாகின்றது. ஏற்றுமதியாளர்கள் இலங்கையின் செலாவணி வீதம் போட்டித்தன்மையற்றதாகவும் அளவுக்கு மீறிய பெறுமானம் கொண்டதாகவும் இருப்பதாக தொடர்ச்சியாகக் குற்றம் சாட்டிவிடுகின்றனர். இலங்கை மத்திய வங்கி, இறுதியில் ஏறத்தாழ 100 ஆக இருந்த உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்ணினைப் பிரதிபலிக்கத்தக்க போட்டித்தன்மை கொண்ட பெயரளவு செலாவணி வீதத்தில் நெகிழ்ச்சித்தன்மையினைப் பேணும் அதன் நோக்கத்தினை அறிவித்திருக்கின்றது. அத்தகைய கொள்கையானது செலாவணி வீதம் நியாயமான முறையில் மதிப்பிடப்பட்டிருக்கின்றது என்பதனை உறுதிப்படுத்தும் என்பதுடன் சந்தை விசைகளினால் பெருமளவிற்குத் தீர்மானிக்கப்படுகின்ற வேளையில் நாட்டின் நாணயக் கொள்கையினைக் கொண்டு நடத்துவதற்கும் வசதியளிக்கின்றது. குறைந்த பெயரளவு வட்டி வீதம் மற்றும் போட்டித்தன்மையான செலாவணி வீதம் என்பனவற்றைப் பேணுவதற்கு நிலைத்திருக்கும் இறையினை அடைவது முக்கியமானதென்பதனை குறித்துக்காட்டுவது அவசியமாகும்.

**வர்த்தகத்திற்கு வசதியளிப்பதற்காக தாராளமயப்படுத்தப்பட்ட வெளிநாட்டுக் கொள்கையை தொடர்தல்**

பன்னாட்டுச் சந்தையில் காணப்படும் உயர்ந்த மட்ட போட்டித்தன்மையினைக் கருத்திற்கொண்டு, இலங்கை அணிசேராத மற்றும் தாராண்மைவாத வெளிநாட்டுக் கொள்கையினைத் தொடர்ந்தும் பேணுகின்ற வேளையில், தற்போதுள்ள இருபுடை மற்றும் பல்புடை வர்த்தக உடன்படிக்கைகளின் பொருத்தமான விடயங்களைக் கண்டறிகின்ற வேளையில் பொருளாதாரப் பங்குடமை உடன்படிக்கைகளினூடாக புதிய வர்த்தக வாய்ப்புக்களுக்கான சாத்தியங்களையும் தொடர்ச்சியாகக் கண்டறிதல் வேண்டும். அதேவேளை, இருபுடை உறவுமுறைகளைப் பலப்படுத்த தற்போதைய அரசாங்கத்தினால் எடுக்கப்படும் முயற்சிகள் குறிப்பிடத்தக்கனவாக இருப்பதுடன் சாத்தியமான வளங்களைக் கொண்ட சந்தைகளை அடைவதற்கு, குறிப்பாக விரைந்து வளர்ச்சியடைந்துவரும் ஆசிய பொருளாதாரங்களுக்குள் நுழைவதற்கான முன்னுரிமைகளை விரைவுபடுத்துவதன் மூலம் வர்த்தகப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்வது முக்கியமானதாகும். அதேநேரம் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள், சரியான இடங்களுக்குச் சரியான உற்பத்திகள் சென்றடைவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு சந்தை அளவீடுகளின் அடிப்படையில் ஏற்றுமதியாளர்களுக்குச் சந்தைத் தகவல்களை வழங்குதல் வேண்டும்.

**இலங்கையின் வர்த்தகம் தொடர்பான கொள்கைளைத் திருத்தல்**

பெருமளவு கட்டற்ற வர்த்தகம் ஏற்றுமதியின் வளர்ச்சியையும் பொருளாதாரத்தின் பன்முகப்படுத்தலையும் இயலுமைப்படுத்தி, அதன் மூலம், கூடியளவு தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் பகிரப்பட்ட வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் உதவுகிறது. கூடியளவிற்கு ஏற்றுமதி சார்ந்த வர்த்தகக் கொள்கை மீள்சமநிலைப்படுத்தலிலிருந்தான நன்மைகளை அதிகப்படுத்தி, பொருளாதாரத்தில் தனியார் துறையின் வகிபாகத்தினைப் பலப்படுத்தி, ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியை உயர்வடையச் செய்யும். உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கு வர்த்தக வழிமுறைகளைப் பயன்படுத்துவது, வர்த்தக வழிமுறைகள் தொடர்பில் (தீர்வை மற்றும் தீர்வையல்லா வழிமுறைகள்) பெருமளவு நிச்சயமற்றதன்மைகளுக்கு வழிவகுத்து அதன் மூலம் உற்பத்திக்கான திட்டமிடல் மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி பதிலீட்டு நடவடிக்கைகளை இணைப்பதிலும் முட்டுக்கட்டைகளை ஏற்படுத்திவிடும். குறைந்த வளர்ச்சி, தொழில் வாய்ப்பு மற்றும் வருமானங்களினை நாடு ஏற்றுக்கொள்ளாவிடில் (அதாவது 1977 தாராளமயமாக்கல் பொதிக்கு முன் காணப்பட்ட குறைந்த வளர்ச்சி, உயர் தொழில் வாய்ப்பின்மை மற்றும் உண்மை வருமானத்திலான தேக்கம்) இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் மூலம் சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையின் சமநிலையற்றதன்மையினை நீண்ட காலத்திற்கு சரிசெய்ய முடியாது. மேலும், இறக்குமதிக் கட்டுப்பாடுகள் ஏற்றுமதிகளை ஊக்கமிழக்கச் செய்வதன் மூலம் பற்றாக்குறை விரிவடைவதற்குப் பங்களிக்கும் (இறக்குமதிக் கட்டுப்பாடுகள் ஏற்றுமதிகள் மீதான வரிகளாகும்). எனவே, வரி அமைப்பிலும் நிருவாகத்திலுமான சீர்திருத்தங்கள் வியாபாரச் சூழலை மேம்படுத்தி போட்டித்தன்மையினை அதிகரிக்கும். கட்டுப்படுத்தப்பட்ட வர்த்தக அமைப்பு பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளினதும் குறைந்த

5

உற்பத்தி இயலளவிற்கும் குறைந்த போட்டித்தன்மைக்கும் வழிவகுத்து இலங்கையின் உற்பத்திகளுக்கு ஒப்பீட்டு ரீதியில் குறைந்த அநுகூலங்கள் ஏற்பட வழிவகுத்துவிடும். இது பன்னாட்டுத் துறையில் இலங்கை அதன் தளத்தினை இழக்க வழியேற்படுத்தியிருக்கிறது.

விநியோக ஏற்பாடுகளில் முன்னேற்றங்கள்

விநியோக ஏற்பாடுகளில், குறிப்பாக கடல் துறைமுகங்கள் மற்றும் வானூர்திநிலையங்களின் விநியோக ஏற்பாடுகளில் தொடர்ச்சியான முதலீடுகள் போட்டித்தன்மையினை உறுதிப்படுத்துவதில் முக்கிய பங்கினையாற்றுகின்றன. சுதந்திர வர்த்தக வலயங்கள், பொருளாதார வழிகள், பொருளாதார வலயங்கள் அதேபோன்று ஏற்றுமதிக் கிராமங்கள் என்பனவற்றை உருவாக்குவதற்கான தற்போதைய கொள்கைகளைச் செலவுச் சிக்கனத்தினை உறுதிப்படுத்தும் விதத்தில் வரவிருக்கும் விநியோக ஏற்பாட்டு மையங்களுடன் இணைத்துக் கொள்வது அவசியமானதாகும். அரசாங்கம் அதன் தேசிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தரம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் என்பனவற்றைப் பெற்றுக்கொள்வது உற்பத்திக்கான உள்ளீடொன்றாக அமைந்து பணியாற்றுவதனால் அவற்றை மேம்படுத்துவதன் மீது அரசாங்கம் கவனம் செலுத்துதல் வேண்டும். இவ்வழிமுறைகள் அனைத்தும் ஏற்றுமதிகளின் பெறுமதிகூட்டல் அதிகரிப்பதற்குப் பங்களிக்கும்.

ஏற்றுமதி ஊக்குவிப்பில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் வகிபாகம்

உள்ளடங்கிய வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு தொடர்ச்சியான அரசுகளின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் மீதான அதிகரித்த கவனம் செலுத்தலானது புதுப்பிக்கப்பட்ட ஏற்றுமதி முன்னேற்ற உபாயத்திற்கு சாதகமாகப் பெறப்படும். இவற்றின் செலவு - வினைத்திறனான வெளியீடுகளானது முக்கிய ஏற்றுமதியாக சந்தைப்படுத்தப்படலாம் அல்லது பன்னாட்டு நிறுவனங்களுக்கு உள்ளீடுகளாவதன் மூலம் நிறுவனங்கள் நிறுவனங்கள் உலகளாவிய சந்தைகளுடன் இணைப்பினைக் கட்டியெழுப்புவதற்கு இயலச்செய்யும். உற்பத்திப் பாய்ச்சல் செயன்முறையானது தற்பொழுது பெரிதும் பணிகளால் மேலோங்கிக் காணப்படுவதால் பணிகள் துறையினை நவீனமயப்படுத்தலும் முக்கியமானதாகும். குறிப்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சியாளர்களை பணிகள் கைத்தொழில் ஈடுபட ஊக்குவிக்கலாம். ஏனெனில் இவற்றிற்கு பெரியளவில் மூலதனம் மற்றும் மூலப்பொருட்களின் தேவைப்பாடில்லை.

ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகள்

அத்தகைய முன்னெடுப்புக்கள் உயர் தேர்ச்சியும் அறிவும் நிரம்பிய தொழிற்படையின் பிரசன்னத்திற்கு உதவுமென்பதுடன் இதன் மூலம் வெளிமூலங்களிலிருந்து வியாபாரச் செயன்முறைகளைப் பெற்றுக்கொள்ளுதல், வெளியிலிருந்து அறிவுச் செயன்முறைகளைப் பெற்றுக்கொள்ளும் நாடொன்றாக இலங்கையின் கவர்ச்சித்தன்மை மேலும் அதிகரித்துக்கொள்வதற்கும் இலங்கையை உலகளாவிய பெறுமதிச்சங்கிலியில் நுழைந்து கொள்வதற்கும் இயலச்செய்கின்றது. வெளிநாட்டு நேரடி முதலீடுகளும் இலங்கை அதன் ஒரு சில குறைந்த தொழில்நுட்ப உற்பத்திகளிலிருந்து உயர் தொழில்நுட்பத் தயாரிப்பு உற்பத்திகளில் பெருமளவிற்குக் கவனத்தினைச் செலுத்தும் தற்போதைய ஏற்றுமதித் தளத்தினை அபிவிருத்தி செய்ய இயலுமைப்படுத்தும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்ந்து கொள்ளும் விடயத்தில் இலங்கை அதன் தேசிய போட்டித்தன்மையினை மேம்படுத்துவதன் மீது கவனத்தினைச் செலுத்துவது அவசியமாகும். இதனை அடையும் விதத்தில் இலங்கை வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்ந்து கொள்வதற்கு முட்டுக்கட்டையாக விளங்கித் தடைகளைக் கட்டுப்படுத்துவதற்கேற்ற கடுமையான சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டமொன்றினை மேற்கொள்வது அவசியமாகும்.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் புத்தாக்கத்தினை ஊக்குவித்தல்

புத்தாக்கமானது உற்பத்தி அடியினை பல்வகைப்படுத்துவதற்கு இறுதி உற்பத்திக்கு அதிகப் பெறுமதியினைச் சேர்த்தல், நாடுகளை உலகளாவிய சந்தையில் ஏற்றுமதிகளில் உயர்ந்த பங்கினையடைய செலவு போட்டித்தன்மையினை மேம்படுத்த உதவுதலுக்கு வழிவகுக்கும். ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினாலான செலவுகள் மற்றும் புத்தாக்கத்தினை உயர்த்துதல் என்பனவற்றின் நிலைத்திருக்கும் அதிகரிப்பானது போட்டித்தன்மையில் நீண்ட காலத் தாக்கத்தினை ஏற்படுத்தும். ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் புத்தாக்கத்தில் தனியார் துறையின் ஈடுபாடானது ஆய்வு வெளியீடு வர்த்தக மயமாக்கல்களில் நெருக்கடியானதால் ஏற்கனவேயுள்ள ஆய்வு மற்றும் அபிவிருத்தியுடன் தொழில்முயற்சியாளர் வலையமைப்பினை இணைப்பதற்கான அத்தியாவசியமான ஆரம்பிப்புக்களை அரசாங்கம் எடுக்க வேண்டும்.

எதிர்கால நோக்கு

பொருளாதார வளர்ச்சியின் முக்கிய தூண்டுநராக ஏற்றுமதித் துறை தோற்றம் பெறுவதற்கு, அரசாங்கத்தின் ஒட்டுமொத்த அபிவிருத்தி உபாயமொன்றிற்குள் ஏற்றுமதித் துறையினைத் தூண்டுவதற்கான உபாயத் திட்டமொன்றினை வடிவமைப்பது முக்கியமானதொன்றாகவுள்ளது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினையும் அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் பன்னாட்டு வர்த்தக அமைச்சினையும் இருமுனைகளாகக் கொண்ட பல வழிமுறைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ள தேசிய ஏற்றுமதி உபாயம் அரச மற்றும் தனியார் துறையின் கூட்டு முயற்சியாகவுள்ளதுடன் வர்த்தகம் மற்றும் போட்டித்தன்மை என்பனவற்றின் அபிவிருத்திக்கான ஐந்தாண்டு நடவடிக்கை சார்ந்த கட்டமைப்பொன்றினையும் வழங்குகிறது. அதேநேரம் கூடியளவிற்கு ஏற்றுமதி சார்ந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவரும் நோக்குடனும், வர்த்தக ஏற்பாடுகளை மேம்படுத்துவதற்காகவும் சுங்க நடைமுறைகளைக் கூடியளவிற்கு வெளிப்படையானதாகவும் வினைத்திறன்மிக்கதாகவும் செய்வதற்காகவும் உலகளாவிய சந்தையில் போட்டியிடுவதற்கு நிறுவனங்களின் இயலாற்றலை மேம்படுத்துவதற்கான மற்றைய வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்காகவும் தேசிய வர்த்தகக் கொள்கையொன்று வரையப்பட்டிருக்கிறது. பரந்த அடிப்படையிலான நிறுவன ரீதியான உதவிக்கான தேவையினை அங்கீகரிக்கும் விதத்தில் அரசாங்கம் இரண்டு முகவர்களை, அதாவது, பன்னாட்டு வர்த்தகத்திற்கான முகவர் மற்றும் அபிவிருத்திக்கான முகவர் ஆகிய இரண்டு முகவர்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை ஏற்கனவே எடுத்திருக்கிறது. பன்னாட்டு வர்த்தகத்திற்கான முகவர் இந்தியத் துணைக் கண்டத்துடனான ஏற்கனவேயுள்ள வர்த்தக ஒப்பந்தங்களிலுள்ள பிரச்சனைகளைத் திருத்துவதில் ஈடுபட்டுள்ள அதேவேளையில், துணைக் கண்டத்தின் முழுச் சந்தைக்கும் பொருட்களை வழங்கும் விதத்தில் முதலீடுகளைக் கவர்வதற்கான இலங்கையின் மேம்பட்ட முதலீட்டுச் சூழலைப் பயன்படுத்தும் விதத்தில் இந்தியாவுடனான பொருளாதாரப் பங்குடமை உடன்படிக்கைகளின் சாத்தியம் பற்றி

5

கண்டறிவதிலும் ஈடுபட்டிருந்தது. அரசாங்கத்தின் அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையுடன் இணங்கிச்செல்லும் விதத்தில் குறிப்பாக, சந்தைக்கு ஏறத்தாழ 3 பில்லியன் ஆட்களை வழங்கும் சீனா, சிங்கப்பூர், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்க இராச்சியம் என்பவற்றைக் கொண்ட துணைக் கண்டத்திற்கு வெளியே புதிய இருபுடை மற்றும் பல்புடை வர்த்தக வாய்ப்புக்களைத் தொடர்வதிலும் பன்னாட்டு வர்த்தக முகவர் தொடர்ந்தும் ஈடுபட்டது. மறுபுறத்தில், அபிவிருத்திக்கான முகவர், அபிவிருத்திச் செயன்முறையின் மீதான தடைகளை அடையாளம் காணவும் இயலாற்றலை உயர்த்துவதற்கும் உற்பத்தி அபிவிருத்திகளில் ஈடுபடவும் ஏற்றுமதியினைப் பேணி வளர்க்கவும் தனியார் துறையினை இயலுமைப்படுத்துவதற்காக, துறைகளைக் கடந்து பிரச்சனைகளைத் தீர்க்கக்கூடிய விதத்தில் பணியாற்றக்கூடிய பல்தொழிற்பாட்டுக் குழுக்களைக் கட்டியெழுப்புவதன் மூலம் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்குத் தனியார் துறையுடனான ஒத்துழைப்பொன்றினை மேற்கொள்வதன் மூலம் அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க எதிர்பார்க்கிறது.

அரசாங்கம் பொருளாதார நிலைமாற்றங்களை உருவாக்குவதில் செயற்பாடு சார்ந்ததும் விட்டுக் கொடுக்கப்பட முடியாததுமான வகிபாகமொன்றினை ஆற்றுவது அவசியமானதாகும். இது கைத்தொழில் துறையினையும் ஏற்றுமதித் துறையினையும் மீளெழுச்சிப்படுத்தி தனியார் துறை வளர்ச்சி முன்னேற்றத்தினை நோக்கி முன்னேற அனுதிக்கும். அனைத்து ஆர்வலர்களினதும் ஆதரவுடனும் அதேபோன்று, தற்பொழுது வடிவமைக்கப்புக் கட்டத்தின் கீழ் இருக்கும் ஏற்றுமதி உபாயங்கள் வெற்றிகரமான நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அனைத்து முகவர்களினதும் கடப்பாடும் உலகளாவிய சந்தையில் இலங்கை ஏற்றுமதிகளின் பங்கினை அதிகரிப்பதற்கு மிக முக்கியமானதாகும். ஏற்றுமதிகளின் அதிகரிப்பு வர்த்தகப் பற்றாக்குறையினைக் குறைவடையச் செய்து சென்மதி நிலுவையின் பற்றாக்குறையினைச் சுருக்க உதவுவதுடன் கடந்த பல தசாப்தங்களாகக் காணப்படும் நீண்ட கால வெளிநாட்டுத் துறைச் சமமின்மை அனுபவங்களிலிருந்தும் இலங்கையின் பொருளாதாரம் விலகிச் செல்வதற்கும் வசதியளிக்கிறது

**உசாத்துணைகள்**

மத்திய வங்கி ஆண்டறிக்கை, பல வெளியீடுகள்.

Draft National Trade Policy (2016), Ministry of Development Strategies and International Trade.

Huyen, N.T.N. and Tuan B.A. (2004), "Vietnam's Economic Development, Opportunities and Challenges towards the Integration Tendency", National Economics University, Hanoi, Vietnam.

Mah, J.S. (2010), "Export Promotion Policies, Export Composition and Economic Development of Korea", Law and Development Institute Inaugural Conference, Australia.

"Sri Lanka Ending Poverty and Promoting Shared Prosperity: A Systematic Country Diagnostic" (2015), World Bank.

தெங்கு உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 366 மில்லியனிற்கு 4.0 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு குறைவான விலைகள் காரணமாக உள்ளீட்டு உற்பத்திகளின் கீழான தேங்காய் எண்ணெய் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாயில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்ட போதிலும் புதிய பருப்புக்கள், நார் மற்றும் தேங்காய் சிரட்டை மற்றும் ஈர்க்கு போன்ற உள்ளீடு அல்லாத உற்பத்திகளின் அதிகரிப்பே காரணமாகும். இறப்பர் ஏற்றுமதி விலைகளில் வீழ்ச்சி பதிவாகிய போதும், 2012 தொடக்கம் தொடர்ச்சியாக குறைவடைந்து சென்ற இறப்பர் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாயானது 2016இல் ஐ.அ.டொலர் 33 மில்லியனுக்கு (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 25.0 சதவீதத்தால் அதிகரித்து, ஏற்றுமதி அளவுகள் 16 மில்லியன் கிலோகிராமிற்கு 55.8 சதவீதத்தால் அதிகரித்தமையைப் பிரதிபலித்தது. 2015 சனவரி தொடக்கம் ஐரோப்பிய ஒன்றியத்தின் சந்தை நுழைவிற்கான மீதான கட்டுப்பாடுகள் காரணமாக 2015இல் கணிசமான அளவு குறைவடைந்திருந்த கடலுணவிலிருந்தான ஏற்றமதி வருவாய், 2016 யூனில் இலங்கையிலிருந்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கான கடலுணவு ஏற்றுமதி மீதான தடை நீக்கப்பட்டதன் பிற்பாடு 2016இல் ஐ.அ.டொலர் 170 மில்லியனுக்கு 4.0 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

**மொத்த ஏற்றுமதி வருவாயில் நான்கில் மூன்றளவுக்கு வகை கூறுகின்ற கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாயானது முந்தைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் ஐ.அ.டொலர் 7,940 மில்லியனுக்கு 1.0 சதவீதத்தால் சுருங்கியுள்ளது.** போக்குவரத்துச் சாதனங்கள், பெற்றோலிய உற்பத்திகள், இரத்தினக்கற்கள், வைரம் மற்றும் ஆபரணங்கள் போன்றவற்றிலிருந்தான குறைந்தளவான ஏற்றுமதி வருவாய்களே இந்த வீழ்ச்சிக்கு பெரிதும் பங்காற்றியுள்ளன. 2016இல் போக்குவரத்துச் சாதனங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய் ஐ.அ.டொலர் 131 மில்லியனுக்கு 46.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமைக்கு துறைமுக நகர அபிவிருத்தி செயற்றிட்ட பாவனைக்கென 2013 மற்றும் 2014இல் இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு மணல்வாரி கப்பல்களின் ஏற்றுமதியால் 2015இல் கணிசமான உயர்ந்த மட்ட ஏற்றுமதிகள் பதிவுசெய்யப்பட்டமையே பிரதான காரணமாகும். நீர்க்கல எரிபொருள் மற்றும் விமான எரிபொருள் என்பவற்றைப் பிரதானமாக உள்ளடக்கிய பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய் 2016இல் ஐ.அ.டொலர் 287 மில்லியனுக்கு 23.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமைக்கு சிங்கப்பூர் மற்றும் இந்தியா போன்ற ஏனைய பிராந்திய போட்டியாளர்களிடமிருந்தான உயர் போட்டியே பகுதியளவில் காரணமாகியது. இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய் முந்தைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் ஐ.அ.டொலர் 274 மில்லியனுக்கு 17.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து உலகளாவிய குறைந்தளவு கேள்வியைப் பிரதிபலித்தது. மேலும், விலங்குத்தீன், அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள் மற்றும் மட்பாண்ட உற்பத்திகள் என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாயும் இந்த வருடத்தில் குறைவடைந்துள்ளன.

அட்டவணை 5.2
ஏற்றுமதிகளின் உள்ளடக்கம்

| வகை | 2015 (அ) பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | 2015 (அ) பங்கு % | 2016 (ஆ) பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | 2016 (ஆ) பங்கு % | பெறுமதியின் மாற்றம் ஐ.அ.டொலர் மில்லியன் | ஆண்டுக்காண்டு மாற்றம் % | மாற்றத்திற்கான பங்களிப்பு % |
|---|---|---|---|---|---|---|---|
| வேளாண்மை ஏற்றுமதிகள் | 2,481.5 | 23.5 | 2,326.1 | 22.6 | -155.4 | -6.3 | 65.6 |
| தேயிலை | 1,340.5 | 12.7 | 1,269.0 | 12.3 | -71.5 | -5.3 | 30.2 |
| இறப்பர் | 26.1 | 0.2 | 32.7 | 0.3 | 6.5 | 25.0 | -2.8 |
| தெங்கு | 351.7 | 3.3 | 366.0 | 3.5 | 14.2 | 4.0 | -6.0 |
| வாசனைப் பொருட்கள் | 377.4 | 3.6 | 317.1 | 3.1 | -60.3 | -16.0 | 25.5 |
| மரக்கறிகள் | 30.5 | 0.3 | 26.5 | 0.3 | -4.0 | -13.0 | 1.7 |
| உற்பத்தியாக்கப்படாத புகையிலை | 31.8 | 0.3 | 31.2 | 0.3 | -0.6 | -2.0 | 0.3 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 160.4 | 1.5 | 114.1 | 1.1 | -46.3 | -28.9 | 19.6 |
| கடல் உணவுகள் | 163.1 | 1.5 | 169.6 | 1.6 | 6.5 | 4.0 | -2.8 |
| கைத்தொழில் ஏற்றுமதிகள் | 8,017.1 | 76.0 | 7,940.1 | 77.0 | -77.0 | -1.0 | 32.5 |
| புடவைகளும் ஆடைகளும் | 4,820.2 | 45.7 | 4,884.1 | 47.4 | 63.9 | 1.3 | -27.0 |
| இறப்பர் உற்பத்திகள் | 761.2 | 7.2 | 767.9 | 7.4 | 6.7 | 0.9 | -2.8 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 373.9 | 3.5 | 286.9 | 2.8 | -87.1 | -23.3 | 36.8 |
| இரத்தினம், வைரம் மற்றும் ஆபரணங்கள் | 331.7 | 3.1 | 273.9 | 2.7 | -57.8 | -17.4 | 24.4 |
| உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 306.8 | 2.9 | 323.7 | 3.1 | 16.9 | 5.5 | -7.1 |
| பொறி மற்றும் இயந்திர துணைக்கருவிகள் | 293.8 | 2.8 | 317.6 | 3.1 | 23.8 | 8.1 | -10.1 |
| அச்சு கைத்தொழில் உற்பத்திகள் | 45.7 | 0.4 | 42.4 | 0.4 | -3.3 | -7.2 | 1.4 |
| போக்குவரத்துக் கருவிகள் | 243.7 | 2.3 | 131.5 | 1.3 | -112.2 | -46.0 | 47.4 |
| தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி | 135.7 | 1.3 | 165.6 | 1.6 | 29.9 | 22.0 | -12.6 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 35.2 | 0.3 | 34.4 | 0.3 | -0.8 | -2.2 | 0.3 |
| ஏனைய கைத்தொழில் உற்பத்திகள் | 669.4 | 6.3 | 712.2 | 6.9 | 42.8 | 6.4 | -18.1 |
| கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 28.4 | 0.3 | 29.0 | 0.3 | 0.6 | 2.1 | -0.3 |
| வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள் | 19.5 | 0.2 | 14.5 | 0.1 | -5.0 | -25.5 | 2.1 |
| மொத்த ஏற்றுமதிகள் (இ) | 10,546.5 | 100.0 | 10,309.7 | 100.0 | -236.8 | -2.2 | 100.0 |
| ஆண்டுச் சராசரி நாணயமாற்று வீதம் (ஈ) | 135.94 | | 145.60 | | | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) மீள் ஏற்றுமதிகள் நீங்கலாக
(ஈ) ரூபா/ஐ.அ.டொலர் நாணயமாற்று வீதம்

மூலங்கள்: இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
தேசிய இரத்தினக்கற்கள் ஆபரண அதிகார சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

**மொத்த ஏற்றுமதியில் 47 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதியிலிருந்தான வருவாய் 2016இல் ஐ.அ.டொலர் 4,884 மில்லியனுக்கு 1.3 சதவீதத்தால் அதிகரித்து குறைந்தளவான கைத்தொழில் ஏற்றுமதிகளின் தாக்கத்தை ஓரளவுக்குக் குறைத்துள்ளது.** ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பன அளவு மற்றும் பெறுமதி நியதிகள் இரண்டிலும் இலங்கைப் புடவைகளின் இரு பெரும் வாங்குனர்களாக தொடர்ந்தும் காணப்படுகின்றன. 2016இல் இவ்விரண்டு சந்தைகளிலுமிருந்தான வருவாய்கள் முறையே ஐ.அ.டொலர் 2,104 மில்லியன் மற்றும் ஐ.அ. டொலர் 1,905 மில்லியன் பெறுமதியாகவிருந்து ஆடை ஏற்றுமதிகளின் மொத்த வருவாயில் கூட்டாக 87.1 சதவீதத்திற்கு பங்களிப்பு செய்கின்ற இதேவேளை கனடா, சீனா, அவுத்திரேலியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் போன்றவற்றை உள்ளடக்கிய பாரம்பரியமற்ற சந்தைகளுக்கான ஆடைகள் ஏற்றுமதிகள் 2015இல் பதிவுசெய்யப்பட்ட 4.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7.9 சதவீதத்தால் அதிகரித்துள்ளன. அலுமினியக் கட்டமைப்பு மற்றும் செப்புக் கம்பிகள் என்பவற்றிலிருந்தான உயர்வருவாய் காரணமாக 2016இல் அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய் 60.5 சதவீதத்தால் கணிசமானளவு அதிகரித்தது. அலுமினியம் மற்றும் செப்பு என்பன உள்ளடங்கலாக அடிப்படை உலோகங்களிற்கான உலகளாவிய விலைகள் 2016இல் ஓர் அதிகரித்த போக்கில் இருப்பினும் அவற்றுக்கான சராசரி விலைமட்டம் 2015உடன் ஒப்பிடுகையில் குறைவாக உள்ளது. காலணி ஏற்றுமதிகளிலிருந்தான கணிசமான அதிகரிப்பின் காரணமாக பிரதானமாக தோல் உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாயும் 22.0 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இறப்பர் கையுறைகள் மற்றும் இறப்பர் ரயர்களிலிருந்தான உயர்வருவாயின் பெறுபேறாக இறப்பர் உற்பத்திகளிலிருந்தான

5

ஏற்றுமதி வருவாய் 0.9 சதவீதத்தால் சிறிதளவு அதிகரித்துள்ளது. உயர் ஏற்றுமதி வருவாயை பதிவுசெய்த ஏனைய கைத்தொழில் பொருட்களாக இயந்திரங்கள், பொறியியல் கருவிகள் மற்றும் உணவும் குடிபானமும் என்பன காணப்பட்டன.

**2016இல் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய் 2.1 சதவீதத்தால் சிறிதளவு அதிகரித்து 2016இன் மொத்த ஏற்றுமதி வருவாயின் 0.3 சதவீதத்திற்கு மட்டும் பங்களிப்புச் செய்துள்ளது.** தாதுக்கள், கசடு மற்றும் சாம்பல் என்பவற்றிலிருந்தான வருவாய் குறைவடைந்த போதும் மண் மற்றும் கற்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய் அதிகரித்துள்ளது.

### 5.3.2 இறக்குமதிச் செயலாற்றம்

**2016ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் பதிவுசெய்யப்பட்ட, இறக்குமதிகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பின் காரணமாக 2016இல் இறக்குமதிகள் மீதான செலவினம் அதிகரித்துள்ளது.** எண்ணெய் மற்றும் உணவு அல்லா நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினத்திலான வீழ்ச்சியின் சாதகமான விளைவுகளை இல்லாதொழித்து, முதலீட்டுப் பொருட்கள் மற்றும் எண்ணெய் அல்லா இடைநிலைப் பொருட்களின் ஏற்றுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு இறக்குமதி மீதான செலவின அதிகரிப்புக்கு பங்களிப்புச் செய்துள்ளது. உணவு மீதான இறக்குமதிச் செலவினம், 2015இல் பதிவுசெய்யப்பட்டதிலிருந்து பெருமளவில் மாற்றமடையாமல் காணப்படுகிறது. இருப்பினும் சர்வதேச சந்தையில் நிலவுகின்ற பண்டங்களின் குறைந்த விலையில், இறக்குமதியைச் சிக்கனப்படுத்துவதற்காக அரசினாலும் மத்திய வங்கியினாலும் பின்பற்றப்படுகின்ற முன்மதியுடைய கொள்கை வழிமுறைகளுக்கு மாறாக நாட்டின் உயர் பொருளாதார செயற்பாடுகள் ஒட்டுமொத்த இறக்குமதியின் மீதான செலவின அதிகரிப்பிற்கு வழிகோலியது. அதன்படி இறக்குமதி மீதான மொத்தச் செலவினம் 2016இல் ஐ.அ.டொலர் 19,400 மில்லியனுக்கு 2.5 சதவீதத்தினால் மிதமாக அதிகரித்த அதேவேளை, எண்ணெய்யல்லா இறக்குமதி மீதான செலவினம் ஐ.அ.டொலர் 16,919 மில்லியனுக்கு 4.2 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

**இறக்குமதி மீதான மொத்தச் செலவின அதிகரிப்புக்கு பெரும் பங்களிப்புக் காரணி முதலீட்டுப் பொருட்களுக்கான இறக்குமதி மீதான செலவின் அதிகரிப்பு ஆகும்.** இறக்குமதி மீதான மொத்த செலவினத்தில் 27 சதவீதத்திற்கு வகை கூறுகின்ற முதலீட்டுப் பொருட்கள் மீதான செலவினம் 2016இல் ஐ.அ.டொலர் 5,198 மில்லியனுக்கு 13.8 சதவீதத்தினால்

வரைபடம் 5.3

**இறக்குமதிகளின் உள்ளடக்கம் - 2016**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

அதிகரித்து போக்குவரத்துச் சாதனங்கள் தவிர்ந்த முக்கிய முதலீட்டுப் பொருட்கள் வகைகளில் ஏற்பட்ட வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது. 2016இல் பொறிகள் மற்றும் கருவிகள் மீதான இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 2,741 மில்லியனுக்கு 20.3 சதவீதத்தினால் அதிகரித்து அனைத்து துணை வகைகளிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களைப் பாரியளவில் பிரதிபலிக்கின்றன. பொறிகள் மற்றும் கருவிப் பாகங்கள், இலத்திரனியல் கருவிகள், தொலைத்தொடர்பு சாதனங்கள் மற்றும் வேளாண்மைப் பொறிகள் என்பனவே பொறிகள் மற்றும் கருவிகளின் இறக்குமதியில் ஏற்பட்ட வளர்ச்சிக்கான முக்கிய பங்களிப்புக்கள் ஆகும். 2016இல் கட்டடப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 1,569 மில்லியனுக்கு 16.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. காப்பிடப்பட்ட கம்பி மற்றும் கம்பிவடம் தவிர்ந்த கட்டடப் பொருட்களின் அனைத்துத் துணை வகைகளினதும் இறக்குமதிச் செலவினம் கணிசமானளவு அதிகரித்துள்ளது. சிமெந்து, இரும்பு மற்றும் உருக்கிலான பொருட்கள், மட்பாண்ட உற்பத்திகள் மற்றும் மர உற்பத்திகள் என்பனவே கட்டடப் பொருட்களின் இறக்குமதிச் செலவின வளர்ச்சிக்கு பெரிய பங்களிப்புச் செய்துள்ளன. அதேவேளை, முச்சில்லு வண்டிகள் மற்றும் பேருந்துகள் என்பவற்றின் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கிய காரணமாக போக்குவரத்துக் கருவிகள் மீதான இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 880 மில்லியனுக்கு 5.5 சதவீத்தினால் குறைவடைந்துள்ளது.

**2016இல் இடைநிலைப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 9,870 மில்லியனுக்கு 2.4 சதவீதத்தினால் அதிகரித்து, நாட்டின் மொத்த இறக்குமதிப் பட்டியலின் 51 சதவீதத்திற்கு வகைகூறுகிறது.** எண்ணெய் இறக்குமதிகளை விஞ்சி, புடவைகள் மற்றும் புடவைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினமானது 2016இல்

அட்டவணை 5.3
இறக்குமதிகளின் உள்ளடக்கம்

| வகை | 2015 பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | 2015 பங்கு % | 2016 (அ) பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | 2016 (அ) பங்கு % | பெறுமதியின் மாற்றம் ஐ.அ.டொலர் மில்லியன் | ஆண்டுக்காண்டு மாற்றம் % | மாற்றத்திற்கான பங்களிப்பு % |
|---|---|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | **4,713.5** | **24.9** | **4,319.0** | **22.3** | **-394.5** | **-8.4** | **-84.8** |
| உணவும் குடிபானங்களும் | 1,627.8 | 8.6 | 1,627.4 | 8.4 | -0.4 | … | -0.1 |
| அரிசி | 135.1 | 0.7 | 12.8 | 0.1 | -122.3 | -90.5 | -26.3 |
| சீனி மற்றும் சீனி இனிப்பு வகை | 254.4 | 1.3 | 344.6 | 1.8 | 90.2 | 35.5 | 19.4 |
| பால் உற்பத்திகள் | 250.9 | 1.3 | 249.3 | 1.3 | -1.6 | -0.6 | -0.3 |
| பருப்பு வகை | 148.0 | 0.8 | 139.4 | 0.7 | -8.6 | -5.8 | -1.8 |
| ஏனையவை | 839.4 | 4.4 | 881.3 | 4.5 | 41.9 | 5.0 | 9.0 |
| ஏனைய உணவல்லாத நுகர்வுப் பொருட்கள் | 3,085.7 | 16.3 | 2,691.5 | 13.9 | -394.1 | -12.8 | -84.7 |
| வாகனங்கள் | 1,359.6 | 7.2 | 794.8 | 4.1 | -564.9 | -41.5 | -121.4 |
| மருத்துவ மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 459.8 | 2.4 | 525.8 | 2.7 | 66.0 | 14.3 | 14.2 |
| வீட்டுப் பாவனைப் பொருட்கள் | 221.0 | 1.2 | 270.7 | 1.4 | 49.7 | 22.5 | 10.7 |
| புடவைகள் மற்றும் துணைப் பொருட்கள் | 390.1 | 2.1 | 365.8 | 1.9 | -24.3 | -6.2 | -5.2 |
| ஏனையவை | 655.0 | 3.5 | 734.4 | 3.8 | 79.3 | 12.1 | 17.0 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **9,638.2** | **50.9** | **9,870.0** | **50.9** | **231.8** | **2.4** | **49.8** |
| எரிபொருள் | 2,699.6 | 14.3 | 2,481.0 | 12.8 | -218.6 | -8.1 | -47.0 |
| புடவைகள் மற்றும் புடவைகளுக்கான அணிகலன்கள் | 2,296.2 | 12.1 | 2,704.9 | 13.9 | 408.7 | 17.8 | 87.8 |
| வைரங்கள் மற்றும் அருமையான கற்கள் மற்றும் உலோகங்கள் | 161.5 | 0.9 | 514.4 | 2.7 | 352.9 | 218.5 | 75.8 |
| இரசாயன உற்பத்திகள் | 870.3 | 4.6 | 856.3 | 4.4 | -14.0 | -1.6 | -3.0 |
| கோதுமை மற்றும் சோளம் | 357.2 | 1.9 | 249.2 | 1.3 | -108.0 | -30.2 | -23.2 |
| வளமாக்கி | 289.6 | 1.5 | 136.9 | 0.7 | -152.8 | -52.7 | -32.8 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 2,963.7 | 15.7 | 2,927.3 | 15.1 | -36.5 | -1.2 | -7.8 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **4,567.0** | **24.1** | **5,198.0** | **26.8** | **631.0** | **13.8** | **135.6** |
| கட்டடப் பொருட்கள் | 1,352.0 | 7.1 | 1,568.7 | 8.1 | 216.7 | 16.0 | 46.6 |
| போக்குவரத்துக் கருவிகள் | 930.9 | 4.9 | 880.2 | 4.5 | -50.8 | -5.5 | -10.9 |
| பொறியும் கருவியும் | 2,278.1 | 12.0 | 2,740.7 | 14.1 | 462.6 | 20.3 | 99.4 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 5.9 | … | 8.5 | … | 2.5 | 42.3 | 0.5 |
| **வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **15.9** | **0.1** | **13.1** | **0.1** | **-2.9** | **-17.9** | **-0.6** |
| **மொத்த இறக்குமதிகள் (ஆ)** | **18,934.6** | **100.0** | **19,400.1** | **100.0** | **465.5** | **2.5** | **100.0** |
| **ஆண்டுச்சராசரி நாணயமாற்று வீதம் (இ)** | **135.94** | | **145.60** | | | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) மீள் இறக்குமதிகள் நீங்கலாக
(இ) ரூபா/ ஐ.அ.டொ. நாணயமாற்று வீதம்

மூலங்கள்: இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி. பி.எல்.சி
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

ஆடைகள் மற்றும் புடவைகள் ஏற்றுமதிக்கு ஏற்றாற் போல் ஐ.அ.டொலர் 2,705 மில்லியனுக்கு 17.8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட தங்கத்தினளவு அதிகரித்ததனால் தங்கம் மீதான இறக்குமதிச் செலவினம் 2015இல் ஐ.அ.டொலர் 42 மில்லியனிலிருந்து 2016இல் ஐ.அ.டொலர் 374 மில்லியனாக அதிகரித்துக் காணப்பட்டது. பன்னாட்டு பண்டங்கள் சந்தையில் 2016இன் முதல் மூன்று காலாண்டுகளில் அதிகரித்த போக்கைக் காட்டிய தங்கத்தின் விலைகள் இறுதிக் காலாண்டில் குறைவடைந்தது.

**நிலக்கரி இறக்குமதிகள் மீதான செலவினம் அதிகரித்த அதேவேளை மசகெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் இரண்டிலுமான இறக்குமதி மீதான குறைவடைந்த செலவினத்தின் காரணமாக பெற்றோலிய இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 2,481 மில்லியனுக்கு 8.1 சதவீதத்தினால் குறைவடைந்து காணப்பட்டது.** மசகெண்ணெய் இறக்குமதி அளவானது 2016இல் 4.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த அதேவேளை, பீப்பாய் ஒன்றுக்கு செலுத்திய விலையானது 2015இல் ஐ.அ.டொலர் 54.80 இலிருந்து ஐ.அ.டொலர் 46.30ஆக குறைவடைந்துள்ளது. நாட்டின் வரட்சி நிலைப்பாடுகளால் அதிகரித்த வெப்பவலு உருவாக்கத்தின் பகுதியளவான காரணத்தால் இதே காலப்பகுதியில் இறக்குமதி அளவுகள் 17.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ள அதேவேளை சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியத்தின் இறக்குமதி விலைகள் 19.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. பிரதானமாக நிலக்கரி அடிப்படையிலான வலு உருவாக்கத்தில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக, 2016இல் நிலக்கரி இறக்குமதி மீதான செலவினம் 23.9 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இதன் விளைவாக மொத்த இறக்குமதிச் செலவினத்தில் ஒரு பங்காக எண்ணெய் இறக்குமதி மீதான செலவினம் 2014இல் 23.7 சதவீதமாகவும் மற்றும் 2015இல் 14.3 சதவீதமாகவிருந்து 2016இல் 12.8 சதவீதமாகவும் மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது. அதேவேளை விலை மற்றும் அளவு இரண்டிலும் ஏற்பட்ட வீழ்ச்சி

காரணமாக வளமாக்கி மீதான இறக்குமதிச் செலவினம் 52.7 சதவீத்தினால் குறைவடைந்துள்ளதோடு கோதுமை மற்றும் சோள இறக்குமதிகள் 30.2 சதவீதத்தினாலும் குறைவடைந்துள்ளன. முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது உணவுத் தயாரிப்பு உள்ளீடுகள், உற்பத்தியாக்கப்படாத புகையிலை, அடிப்படை உலோகங்கள் மற்றும் கனிப்பொருள் உற்பத்திகள் என்பன உள்ளடங்கலாக இடைநிலைப் பொருட்களின் குறித்த ஏனையவகைகளுடன் தொடர்புடைய இறக்குமதிச் செலவினம் 2016இல் வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது.

**உணவல்லா நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக நுகர்வுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினமானது முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் ஐ.அ.டொலர் 4,319 மில்லியனுக்கு 8.4 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது.**

அட்டவணை 5.4
முக்கிய இறக்குமதிகளின் அளவு

மெ.தொ '000

| விடயம் | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 (அ) |
|---|---|---|---|---|---|
| அரிசி | 36 | 23 | 600 | 286 | 30 |
| 1ஆம் காலாண்டு | 15 | 9 | 6 | 176 | 6 |
| 2ஆம் காலாண்டு | 7 | 6 | 102 | 91 | 9 |
| 3ஆம் காலாண்டு | 10 | 4 | 145 | 9 | 6 |
| 4ஆம் காலாண்டு | 4 | 4 | 348 | 9 | 8 |
| கோதுமை (ஆ) | 1,084 | 895 | 1,179 | 1,208 | 948 |
| 1ஆம் காலாண்டு | 353 | 197 | 271 | 242 | 171 |
| 2ஆம் காலாண்டு | 235 | 326 | 324 | 342 | 326 |
| 3ஆம் காலாண்டு | 291 | 170 | 291 | 373 | 271 |
| 4ஆம் காலாண்டு | 205 | 201 | 292 | 251 | 179 |
| சீனி | 569 | 548 | 520 | 624 | 651 |
| 1ஆம் காலாண்டு | 158 | 126 | 131 | 169 | 147 |
| 2ஆம் காலாண்டு | 135 | 175 | 162 | 161 | 144 |
| 3ஆம் காலாண்டு | 114 | 118 | 152 | 156 | 179 |
| 4ஆம் காலாண்டு | 162 | 129 | 75 | 137 | 181 |
| மசகு எண்ணெய் (ஆ) | 1,486 | 1,743 | 1,824 | 1,763 | 1,685 |
| 1ஆம் காலாண்டு | 558 | 482 | 548 | 369 | 372 |
| 2ஆம் காலாண்டு | 413 | 545 | 365 | 355 | 456 |
| 3ஆம் காலாண்டு | 137 | 315 | 462 | 472 | 384 |
| 4ஆம் காலாண்டு | 379 | 401 | 449 | 567 | 473 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் (ஆ) | 3,961 | 2,907 | 3,385 | 3,321 | 3,885 |
| 1ஆம் காலாண்டு | 1,036 | 673 | 970 | 799 | 830 |
| 2ஆம் காலாண்டு | 903 | 756 | 762 | 952 | 1,163 |
| 3ஆம் காலாண்டு | 997 | 791 | 1,006 | 744 | 749 |
| 4ஆம் காலாண்டு | 1,025 | 687 | 647 | 826 | 1,142 |
| வளமாக்கி | 640 | 600 | 765 | 873 | 527 |
| 1ஆம் காலாண்டு | 129 | 61 | 202 | 163 | 139 |
| 2ஆம் காலாண்டு | 176 | 139 | 190 | 244 | 135 |
| 3ஆம் காலாண்டு | 226 | 187 | 95 | 189 | 126 |
| 4ஆம் காலாண்டு | 108 | 214 | 277 | 277 | 127 |

(அ) தற்காலிகமானது
(ஆ) சீராக்கப்பட்டது

மூலங்கள்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி பி.எல்.சி
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை
வரையறுக்கப்பட்ட செரண்டிப் (தனியார்) மா ஆலை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

தனிநபர் பயன்பாட்டிற்கான வாகனங்களின் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி, உணவல்லா நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிச் செலவினம் ஐ.டொலர் 2,692 மில்லியனுக்கு 12.8 சதவீதத்தால் குறைவடைய வழிகோலியது. அரசாங்கத்தினால் உந்து ஊர்திகளின் இறக்குமதி மீது விதிக்கப்பட்ட இறக்குமதி வரிகளிலான அதிகரிப்புடன் மத்திய வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களினால் பின்பற்றப்பட்ட வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் உந்து ஊர்தி கொள்வனவிற்காக வழங்கப்படக் கூடிய கடன்கள் மற்றும் முற்பணங்கள் குறித்த அதிகபட்ச கடன் பெறுமதி விகிதமான பேரண்ட முன்மதியுடைய வழிமுறைகள் என்பனவே இந்த வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாகும். ஆடைகள் மற்றும் துணைப்பொருட்கள், இறப்பர் உற்பத்திகள் மற்றும் அச்சிடப்பட்ட பொருட்கள் மற்றும் எழுது கருவிகள் போன்றவற்றின் இறக்குமதிச் செலவினமும் 2016இல் குறைவடைந்துள்ளது. மாறாக, மருத்துவ மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 14.3 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொலர் 526 மில்லியனைப் பதிவு செய்துள்ளது. வீட்டுப் பாவனைப் பொருட்கள் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் என்பனவும் முறையே 22.5 சதவீதத்தினாலும் 21.5 சதவீதத்தினாலும் அதிகரித்துள்ளன. இதன்படி, உணவு மற்றும் குடிபானங்கள் தவிர்ந்த நுகர்வுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் மொத்த இறக்குமதி செலவினத்தில் 14 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளது.

**2016இல் உணவு மற்றும் குடிபானங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2015இல் பதிவு செய்யப்பட்ட மட்டத்திலிருந்து பரந்தளவில் மாற்றமடையாமல் காணப்படுகின்றது.** பிரதானமாக சீனியின் அளவை விட சீனியின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினால், 2016இல் சீனி மீதான இறக்குமதி செலவினம் ஐ.அ.டொலர் 343 மில்லியனுக்கு 35.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. குடிபானங்கள், வாசனைப் பொருட்கள், கடலுணவு மற்றும் பழங்கள் மீதான இறக்குமதிச் செலவினமும் அதிகரித்த இறக்குமதி அளவுகளுடன் அதிகரித்துப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதேவேளை, அரிசி இறக்குமதி அளவில் ஏற்பட்ட வீழ்ச்சியும் அதனால் அரிசி இறக்குமதி செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும் இறக்குமதி செலவின அதிகரிப்பை ஈடுசெய்வதற்கு பெரிதும் பங்களிப்புச் செய்துள்ளன. உள்நாட்டு சந்தையில் காணப்பட்ட அதிகரித்த அரிசி நிரம்பலின் காரணமாக இறக்குமதியைக் குறைப்பதற்காக 2015 மற்றும் 2016 முற்பகுதியில் அரிசிக்கான இறக்குமதித் தீர்வையின் மேல்நோக்கிய திருத்தம், அரிசி இறக்குமதி 2015இல் 285,604 மெற்றிக் தொன்னிலிருந்து 2016இல் 29,524 மெற்றிக் தொன்னாகக் குறைவடைய பங்களிப்புச் செய்துள்ளது. அளவு அதிகரித்த போதிலும் பால்மாவிற்கான சராசரி இறக்குமதி விலை குறைவடைந்தமையால் பால் உற்பத்திகள் மீதான

வரைபடம் 5.4
ஏற்றுமதிகள், இறக்குமதிகள் மற்றும் வர்த்தக நிலுவை




மூலம்: இலங்கைச் சுங்கத்துறை

இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 249 மில்லியனுக்கு 0.6 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. வெங்காயம், பருப்பு வகை மற்றும் உருளைக் கிழங்கு போன்றவற்றின் இறக்குமதிச் செலவினமும் 2016இல் வீழ்ச்சியடைந்தது.

## 5.3.3 வர்த்தக நிலுவை

**வர்த்தக நிலுவைப் பற்றாக்குறையானது 2016இன் முதல் நான்கு மாதங்கள் சுருங்கியும் அதன் பின்னர் விரிவடைந்தும் காணப்பட்டமை, 2016ஆம் ஆண்டில் ஓர் விரிவாக்கத்தை ஏற்படுத்தியது.** 2015 உடன் ஒப்பிடுகையில் 2016இல் ஏற்றுமதி மூலமான வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் குறிப்பாக 2016இன் இறுதி காலாண்டில் இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு என்பனவே வர்த்தக பற்றாக்குறையை விரிவுபடுத்தின. வர்த்தக பற்றாக்குறையானது 2015இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 8,388 மில்லியனிலிருந்து 2016இல் ஐ.அ.டொலர் 9,090 மில்லியனாக விரிவாகியுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வர்த்தக பற்றாக்குறையானது 2015இன் 10.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 2016இல் 11.2 சதவீதமாக அதிகரித்துள்ளது.

## 5.3.4 வர்த்தக மாற்று விகிதம்

**வர்த்தக மாற்று விகிதம் 2016இல் மேம்பட்டது.** ஏற்றுமதி விலைச் சுட்டெண்ணில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் இறக்குமதி விலைச் சுட்டெண்ணில் அவதானிக்கப்பட்ட கணிசமான வீழ்ச்சியினால் வர்த்தக மாற்று விகிதம் நன்மையடைந்து 3.7 சதவீதத்தினால் மேம்பட்டது. இதன்படி வர்த்தக மாற்று விகிதச் சுட்டெண் 2015இல் 100.3 சுட்டெண் புள்ளிகளிலிருந்து 2016இல் 104.0 சுட்டெண் புள்ளிகளாக அதிகரித்தது.

**அனைத்து முக்கிய வகை ஏற்றுமதிகளுக்குரித்தான விலைச் சுட்டெண்களிலான வீழ்ச்சியுடன் 2016இல் ஒட்டுமொத்த ஏற்றுமதி விலைச் சுட்டெண் 1.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** குறிப்பாக வருடத்தின் முதல் அரையாண்டில் பன்னாட்டு பண்டங்கள் சந்தையில் குறைந்த விலைகள் நிலவியதுடன் 2015 உடன் ஒப்பிடுகையில் 2016இல் வேளாண்மை ஏற்றுமதிகளின் விலைச் சுட்டெண் 1.3 சதவீதத்தினால் குறைவடைந்தது. 2016 ஓகத்திலிருந்து தேயிலைக்கான ஏற்றுமதி விலைச்சுட்டெண் அதிகரித்ததனால், வருடத்தின் முதல் 07 மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட குறைவான விலைகள் காணப்பட்ட போதிலும் தேயிலைக்கான ஏற்றுமதி விலைச் சுட்டெண் 0.2 வீதத்தால் அதிகரித்தது. இதே காலப்பகுதியில் இறப்பர் மற்றும் தெங்கு என்பவற்றின் ஏற்றுமதி விலைச் சுட்டெண்கள் முறையே 3.3 சதவீதம் மற்றும் 4.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. சிறு வேளாண்மை ஏற்றுமதிகளுக்கானதும் கடலுணவுக்கானதுமான விலைச் சுட்டெண்கள் வீழ்ச்சியடைந்த வேளையில், மரக்கறிகளுக்கான ஏற்றுமதி விலைச்சுட்டெண் ஓர் அதிகரிப்பை பதிவு செய்தது. அநேகமான துணை வகைகளின் ஏற்றுமதி விலைச் சுட்டெண்களிலான கணிசமான வீழ்ச்சியுடன் கைத்தொழில் ஏற்றுமதிகளுக்கான விலைச் சுட்டெண் 1.3 சதவீதத்தினால் குறைவடைந்தது. 2016இல் பன்னாட்டு சந்தையில் நிலவிய குறைவான பெற்றோலிய விலைகளின் காரணமாக பெற்றோலிய ஏற்றுமதிகளுக்கான ஏற்றுமதி விலைச் சுட்டெண் 13.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. எவ்வாறிருப்பினும் புடவைகள் மற்றும் ஆடைகள், மட்பாண்டங்கள் உற்பத்திகள் மற்றும் தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணிகள் என்பவற்றின் ஏற்றுமதி விலைச்சுட்டெண்கள் முறையே 0.8 சதவீதம், 2.5 சதவீதம் மற்றும் 1.0 சதவீதத்தினால் அதிகரித்தன.

**2016இன் பிற்பகுதியில் பெற்றோலிய விலைகள் படிப்படியாக அதிகரித்த போதும், 2015 உடன் ஒப்பிடுகையில்**

வரைபடம் 5.5
வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தக சுட்டெண்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

5

அட்டவணை 5.5
**வர்த்தகச் சுட்டெண்கள் (அ)**

2010 = 100

| வகை | பெறுமதிச் சுட்டெண் | | | அளவுச் சுட்டெண் | | | அலகு விலைச் சுட்டெண் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 (ஆ) | ஆண்டுக்காண்டு மாற்றம் % | 2015 | 2016 (ஆ) | ஆண்டுக்காண்டு மாற்றம் % | 2015 | 2016 (ஆ) | ஆண்டுக்காண்டு மாற்றம் % |
| ஏற்றுமதிகள் | | | | | | | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **107.6** | **100.9** | **-6.3** | **95.6** | **90.8** | **-5.0** | **112.6** | **111.2** | **-1.3** |
| தேயிலை | 93.1 | 88.1 | -5.3 | 91.3 | 86.2 | -5.5 | 102.0 | 102.2 | 0.2 |
| இறப்பர் | 15.1 | 18.9 | 25.0 | 21.0 | 27.2 | 29.3 | 71.8 | 69.4 | -3.3 |
| தெங்கு | 212.3 | 220.9 | 4.0 | 159.4 | 174.1 | 9.3 | 133.2 | 126.9 | -4.8 |
| வாசனைப் பொருட்கள் | 182.2 | 153.0 | -16.0 | 118.3 | 100.3 | -15.2 | 154.0 | 152.6 | -0.9 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 224.6 | 159.7 | -28.9 | 205.3 | 149.6 | -27.1 | 109.4 | 106.8 | -2.4 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **131.6 (இ)** | **130.3** | **-1.0** | **144.4** | **144.9** | **0.4** | **91.1 (இ)** | **89.9** | **-1.3** |
| புடவைகளும் ஆடைகளும் | 143.7 | 145.6 | 1.3 | 126.4 | 127.1 | 0.5 | 113.7 | 114.6 | 0.8 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 142.1 | 109.0 | -23.3 | 208.6 | 185.8 | -10.9 | 68.1 | 58.6 | -13.9 |
| இறப்பர் உற்பத்திகள் | 136.7 | 137.9 | 0.9 | 96.9 | 104.2 | 7.5 | 141.1 | 132.4 | -6.2 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | 117.2 | 119.7 | 2.1 | 82.4 | 88.9 | 7.9 | 142.2 | 134.6 | -5.4 |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **122.3 (இ)** | **119.6** | **-2.2** | **128.0** | **127.0** | **-0.7** | **95.6 (இ)** | **94.1** | **-1.5** |
| **இறக்குமதிகள்** | | | | | | | | | |
| **நுகர்வுப் பொருட்கள்** | **190.5** | **174.5** | **-8.4** | **177.9** | **156.5** | **-12.0** | **107.1** | **111.5** | **4.1** |
| உணவும் குடிப்பானங்களும் | 123.1 | 123.0 | ... | 128.1 | 124.1 | -3.1 | 96.0 | 99.1 | 3.2 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 268.0 | 233.7 | -12.8 | 235.0 | 193.8 | -17.5 | 114.0 | 120.6 | 5.8 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **119.8** | **122.6** | **2.4** | **128.7** | **142.5** | **10.8** | **93.1** | **86.0** | **-7.6** |
| எரிபொருள் | 88.8 | 81.6 | -8.1 | 116.6 | 129.5 | 11.1 | 76.2 | 63.0 | -17.3 |
| வளமாக்கி | 120.6 | 57.0 | -52.8 | 129.5 | 68.6 | -47.1 | 93.1 | 83.1 | -10.7 |
| இரசாயன உற்பத்திகள் | 167.4 | 164.7 | -1.6 | 155.6 | 163.4 | 5.1 | 107.6 | 100.8 | -6.3 |
| கோதுமை மற்றும் சோளம் | 134.6 | 93.9 | -30.2 | 121.3 | 92.7 | -23.6 | 110.9 | 101.3 | -8.7 |
| புடைவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் | 126.9 | 149.5 | 17.8 | 120.4 | 138.2 | 14.7 | 105.4 | 108.2 | 2.7 |
| பிளாத்திக்குகள் மற்றும் அதனுடன் தொடர்புடையவை | 145.5 | 146.1 | 0.4 | 142.6 | 155.7 | 9.2 | 102.0 | 93.8 | -8.0 |
| வைரங்கள் மற்றும் பெறுமதிவாய்ந்த உலோகங்கள் | 42.8 | 136.2 | 218.5 | 49.1 | 155.0 | 215.4 | 87.1 | 87.9 | 1.0 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **165.8** | **188.7** | **13.8** | **179.7** | **215.6** | **20.0** | **92.2** | **87.5** | **-5.1** |
| கட்டடப் பொருட்கள் | 164.5 | 190.9 | 16.0 | 167.8 | 206.2 | 22.9 | 98.1 | 92.6 | -5.6 |
| போக்குவரத்துக் கருவிகள் | 157.1 | 148.5 | -5.5 | 156.5 | 142.0 | -9.2 | 100.4 | 104.6 | 4.2 |
| பொறியும் கருவியும் | 170.3 | 204.9 | 20.3 | 197.3 | 253.9 | 28.7 | 86.3 | 80.7 | -6.5 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 178.4 | 253.9 | 42.3 | 184.6 | 262.0 | 41.9 | 96.7 | 96.9 | 0.3 |
| **மொத்த இறக்குமதிகள்** | **141.2** | **144.7** | **2.5** | **148.2** | **159.9** | **7.9** | **95.3** | **90.5** | **-5.1** |
| **வர்த்தக மாற்று விகிதம்** | | | | | | | **100.3 (இ)** | **104.0** | **3.7** |

(அ) ஐ.அ.டொலர் நியதிகளில்
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

மூலங்கள்: இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
லங்கா ஐ.ஓ.சி. பி.எல்.சி.
தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி



**உலக சந்தையின் குறைவான பெற்றோலிய விலைகள் காரணமாக 2016இல் ஒட்டுமொத்த இறக்குமதி விலைச்சுட்டெண் 5.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** 2016இல் உலக சந்தையில் பருத்திக்கான விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பானது, புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் தொடர்பான இறக்குமதி விலைச் சுட்டெண் 2.7 சதவீதத்தினால் அதிகரிக்க பகுதியளவில் காரணமாகியது. அதேபோல உலக சந்தையில் தங்கத்தின் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பைப் பிரதிபலித்து இரத்தினக்கற்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்களுடன் தொடர்பான இறக்குமதி விலைச் சுட்டெண்கள் அதிகரித்தன. இடைநிலைப் பொருட்களின் கீழுள்ள அனைத்து வகைகளினதும் விலைச் சுட்டெண்கள் வீழ்ச்சியடைந்தன. போக்குவரத்துச் சாதனங்களானது அதிகரித்த போதும், முதலீட்டுப் பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட பொறிகள் மற்றும் கருவிகள் மற்றும் கட்டடப் பொருட்களின் விலைச் சுட்டெண்கள் வீழ்ச்சியடைந்தன. இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் விலைச் சுட்டெண்களுக்கு மாறாக, நுகர்வுப் பொருட்களின் விலைச் சுட்டெண்கள் அதிகரித்து, உணவு மற்றும் குடிபானம் மற்றும் உணவல்லா நுகர்வுப் பொருட்கள் இரண்டினதும் விலை அதிகரிப்பை பிரதிபலித்தன. உணவு மற்றும் குடிபானங்களின் கீழ், சீனி, எண்ணெய் மற்றும் கொழும்பு, பழவர்க்கங்கள் மற்றும் கடலுணவு போன்றவற்றுக்கான இறக்குமதி விலைச் சுட்டெண் கணிசமானளவு அதிகரித்தது. எவ்வாறிருப்பினும் தானியங்கள் மற்றும் அரைக்கும் கைத்தொழில் உற்பத்திகள் தொடர்பான இறக்குமதி விலைச் சுட்டெண்கள் இதே காலப்பகுதியில் ஓர் வீழ்ச்சியை பதிவு செய்தன.

### 5.3.5 வர்த்தகத்தின் போக்கு

**இலங்கை ஏற்றுமதிகளின் பிரதான சேரிடங்கள் மற்றும் அச்சேரிடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள் வகைகள் என்பன 2015 உடன் ஒப்பிடுகையில் 2016இல் பரந்தளவில் மாற்றமடையாது இருந்தவேளை, 2001 இலிருந்து பிரதான இறக்குமதி மூலமாக இருந்த இந்தியாவை விஞ்சி 2016இல் சீனா முக்கிய இறக்குமதி மூலமாகியது.** 2016இல் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம் என்பன தொடர்ந்தும் இரு பிரதான ஏற்றுமதி சேரிடங்களாக ஏற்றுமதி வருவாய்களின் 37 சதவீதத்திற்கு வகைகூறுகின்றன. சீனா மற்றும் இந்தியாவுடனான மொத்த வர்த்தகம் ஐ.அ.டொலர் 4 பில்லியனை தாண்டிய போது ஐக்கிய அமெரிக்காவுடனான வர்த்தகம் ஐ.அ.டொலர் 3 பில்லியனை தாண்டி, மொத்த வெளிநாட்டு வர்த்தகத்திற்கு முறையே 14.9 சதவீதம், 14.7 சதவீதம் மற்றும் 11.3 சதவீதம் பங்களிப்பதால் சீனா, இந்தியா மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பன இலங்கையின் பிரதான வர்த்தகப் பங்காளர்களாக இருக்கின்றன. அதேவேளை ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சிங்கப்பூர், யப்பான் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய ஒவ்வொன்றுடனுமான வர்த்தகம் ஐ.அ.டொலர் 1 பில்லியனுக்கு கூடுதலாக காணப்பட்டது. இந்தியா மற்றும் யப்பான் ஆகியவற்றிலிருந்தான இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் குறைவடைந்தமையால் 2015 உடன் ஒப்பிடுகையில் 2016இல் அவற்றுடனான வர்த்தகம் கணிசமானளவு வீழ்ச்சியடைந்த வேளை சீனா, சிங்கப்பூர், ஜேர்மனி, இத்தாலி மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகியவற்றுடனான வர்த்தகம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.

**ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்தும் பிரதான ஏற்றுமதி சேரிடமாக 2016இல் விளங்கி மொத்த ஏற்றுமதி வருவாய்களில் 27.3 சதவீதத்திற்கு வகைகூறுகின்றது.** ஐக்கிய அமெரிக்காவுக்கான மொத்த ஏற்றுமதி ஐ.அ.டொலர் 2,810 மில்லியனில் 74.9 சதவீதம் ஆடை ஏற்றுமதிகள் மூலமும் 8.7 சதவீதம் இறப்பர் உற்பத்திகள் மூலமும் பெறப்பட்டன. ஐக்கிய அமெரிக்காவிற்கான ஆடை ஏற்றுமதிகள் மூலமான வருவாய் 2016இல் பரந்தளவில் மாற்றமடையாது காணப்பட்டு மொத்த ஆடை ஏற்றுமதிகளில் 45.7 சதவீதத்திற்கு வகைகூறுகின்றது. ஐக்கிய இராச்சியம், மொத்த ஏற்றுமதி வருவாய்களில்

வரைபடம் 5.6
நாடுகளின்படி ஏற்றுமதிகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.7
நாடுகளின்படி இறக்குமதிகள்




மூலம்: இலங்கை சுங்கத்துறை

5

10.1 சதவீதத்தையும் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் மூன்றில் ஒரு பங்கையும் பதிவு செய்து தொடர்ந்தும் இரண்டாவது பெரிய ஏற்றுமதி சேரிடமாக காணப்படுகின்றது. ஆடைகள் மற்றும் இறப்பர் உற்பத்திகள் என்பன பிரதான ஏற்றுமதி விடயங்களாக ஐக்கிய இராச்சியத்திலிருந்தான பெறுவனவுகளில் முறையே 79.1 சதவீதம் மற்றும் 2.8 சதவீதத்திற்கு வகைகூறுகின்றன. ஆடைகளிலிருந்தான மொத்த ஏற்றுமதி வருவாய்களில் 41.4 சதவீதத்திற்கு வகைகூறிய ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஆடைகள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2016இல் ஐ.அ. டொலர் 1,905 மில்லியன் பெறுமதியாகவிருந்தது. ஐக்கிய இராச்சியம் தவிர்ந்த, ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள பிரதான ஏற்றுமதி சேரிடங்களாக ஜேர்மனி, இத்தாலி, பெல்ஜியம், ஜேர்மனி, நெதர்லாந்து மற்றும் பிரான்ஸ் காணப்படுகின்றன. நான்காவது மற்றும் ஐந்தாவது பெரிய ஏற்றுமதி சேரிடங்களாக உள்ள ஜேர்மனி மற்றும் இத்தாலி ஆகியவற்றுக்கான பிரதான ஏற்றுமதிகளாக ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், தேயிலை, உணவு, குடிபானங்கள், புகையிலை மற்றும் வாசனைத்திரவியங்கள் என்பன காணப்பட்டன. தேயிலை, சிறு வேளாண்மை உற்பத்திகள், வாசனைத்திரவியங்கள், போக்குவரத்து சாதனங்கள் மற்றும் விலங்குத்தீன் என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக மூன்றாவது பெரிய ஏற்றுமதி சேரிடமாக காணப்படுகின்ற இந்தியாவிற்கான மொத்த ஏற்றுமதிகள் 2015இல் ஐ.அ.டொலர் 643 மில்லியினிலிருந்து 2016இல் ஐ.அ.டொலர் 554 மில்லியனாக வீழ்ச்சியடைந்தது. 2016இல் ஈரான், ருசியாவை விஞ்சி இலங்கைத் தேயிலையின் உச்ச வாங்குநராக தோற்றம் பெற்றது. ஏனைய முக்கிய வாங்குநர்களாக ஈராக், துருக்கி மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் என்பன காணப்பட்டன. இந்நாடுகள் ஒன்றுசேர்ந்து 2016இன் தேயிலையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களின் 45.2 சதவீதத்திற்கு பங்களித்தன.

**2016இல் சீனா இலங்கையின் முக்கிய இறக்குமதி மூலமாகி மொத்த இறக்குமதி மீதான செலவினத்தில் 21.7 சதவீதத்திற்கு வகைகூறுகிறது.** 2016இல் சீன இறக்குமதிகள் மீது ஏற்பட்ட செலவினம் ஐ.அ.டொலர் 4,215 மில்லியனுக்கு 13.6 சதவீதத்தால் அதிகரித்ததுடன் புடவைகளும் புடவைப் பொருட்களும், பொறியும் கருவிகளும், கட்டடப் பொருட்கள், போக்குவரத்துச் சாதனங்கள் மற்றும் இரசாயன உற்பத்திகள் என்பன மீதான செலவினம் அதிகரித்தது. மொத்த இறக்குமதிகளில் 19.7 சதவீதத்திற்கு வகைகூறிய, 2016இல் இரண்டாவது பெரிய இறக்குமதி மூலமாகிய இந்தியாவானது பெற்றோலிய உற்பத்திகள், முச்சில்லு வண்டிகள் மற்றும் உந்து ஊர்திகள் போன்ற வாகனங்களின் மீதான இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட குறைவு காரணமாக 10.6 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. மொத்த இறக்குமதியில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் 19.7 சதவீதத்திற்கு வகைகூறியது. மூன்றாவது பெரிய இறக்குமதி மூலமாகிய சிங்கப்பூர், மொத்த இறக்குமதிகளில் 6.1 சதவீதத்திற்கு வகைகூறுகிறது. நான்காவது பெரிய இறக்குமதி மூலமாகியதுடன் ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்தான இறக்குமதிகள் பெற்றோலிய உற்பத்திகள், வைரங்களும் பெறுமதிமிக்க கற்களும் மற்றும் அடிப்படை உலோகங்கள் போன்றவற்றைக் கொண்டுள்ளன. சிங்கப்பூரிலிருந்தான இறக்குமதிகள் பிரதானமாக பெற்றோலிய உற்பத்திகள், பொறிகளும் கருவிகளும் மற்றும் வைரங்களும் பெறுமதிமிக்க கற்களும் போன்றவற்றை உள்ளடக்குகின்றது. யப்பானிலிருந்தான ஊர்தி, பொறி உதிரிப்பாகங்கள் மற்றும் பொறிகள் மற்றும் சாதனங்களினதும் இறக்குமதி மீது ஏற்பட்ட செலவினம் அதிகமாக இருந்தபோதும் வாகன இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக ஐந்தாவது பெரிய இறக்குமதி மூலமான யப்பானிலிருந்தான இறக்குமதிகள் மீது ஏற்பட்ட செலவானது 31.6 சதவீதத்தால் குறைவடைந்தது.

## 5.4 நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு

### 5.4.1. பணிகளிலுள்ள வர்த்தகம்

**இலங்கையின் பணிகள் ஏற்றுமதி 2016இல் தொடர்ந்தும் திருப்திகரமான வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தமை ஆண்டு காலப்பகுதியில் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கிற்கு ஆதரவளித்தது.** பணிகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் 2015இன் ஐ.அ.டொலர் 6,397 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இல் ஐ.அ.டொலர் 7,138 மில்லியனுக்கு 11.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. பணிகளிலுள்ள வர்த்தகத்தின் வளர்ச்சிக்கான முக்கிய ஊக்கியாக சுற்றுலாவிலிருந்தான வருவாய்களும் அதனைத் தொடர்ந்து போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பூட்டல்கள், கணனி மற்றும் தகவல் பணிகளும் காணப்பட்டன. அதேவேளை குறிப்பாக பயணங்கள் துறையின் பணிகள் இறக்குமதிக்கான கேள்விகள் உயர்ந்ததால் ஆண்டு காலப்பகுதியில் பணிகளின் பேரிலான வெளிப்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 4,259 மில்லியனுக்கு 4.6 சதவீதத்தால் அதிகரித்தன. ஒட்டுமொத்தமாக பணிகள் கணக்கின் மிகை ஐ.அ.டொலர் 2,879 மில்லியனுக்கு வகைகூறப்பட்டது. இது 2015 உடன் ஒப்பிடுகையில் 23.8 சதவீதமான ஓர் அதிகரிப்பாகும்.

### போக்குவரத்துப் பணிகள்

**போக்குவரத்துப் பணிகளில் ஏற்பட்ட விரிவாக்கம் 2016இல் பணிகள் கணக்கிற்கு சாதகமாகப் பங்களித்தது.** பயணிகள் கட்டணங்கள், வான் சரக்குக் கட்டணங்கள், துறைமுகம்

மற்றும் வானூர்தி நிலையத்துடன் தொடர்பான நடவடிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய போக்குவரத்துப் பணிகளின் பேரிலான மொத்த உட்பாய்ச்சல்கள் ஆண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 2,250 மில்லியனை அடைந்து, 6.9 சதவீத வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. அதேவேளை, இறக்குமதி நடவடிக்கைகளின் விரிவாக்கம் மற்றும் இலங்கையர்களின் வெளிநாட்டுப் பயணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பவற்றால் உந்தப்பட்ட துறைமுகம் மற்றும் வானூர்தி நிலையத்துடன் தொடர்புபட்ட பணிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவால் போக்குவரத்துப் பணிகளின் பேரிலான வெளிப்பாய்ச்சல்கள் 2016இல் ஐ.அ.டொலர் 1,618 மில்லியனுக்கு 2.5 சதவீதத்தால் அதிகரித்தன. அதன் விளைவாக ஆண்டு காலப்பகுதியில் போக்குவரத்துத் துறைகளிலிருந்தான தேறிய உட்பாய்ச்சல்கள் 2015இன் ஐ.அ.டொலர் 526 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 632 மில்லியனுக்கு அதிகரித்தது.

**பயணிகள் கட்டணத்துடன் தொடர்பான உட்பாய்ச்சல்கள் முன்னைய ஆண்டின் ஐ.அ.டொலர் 1,073 மில்லியனுக்கு மேலாக 2016இல் 7.6 சதவீதத்தால் அதிகரித்தது.** இலங்கைக்கு பயணம் செய்த பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பே பயணிகள் கட்டணங்களிலிருந்தான உட்பாய்ச்சல்களின் முன்னேற்றத்திற்குப் பிரதானமாக பங்களித்தது. ஆண்டு காலப்பகுதியில் சிறிலங்கன் எயர்லையின்ஸினால் பணியாற்றிய சேரிடங்களின் எண்ணிக்கை விரிவடைந்தது. இத்தகைய சேரிடங்கள் மத்திய கிழக்கு, தூர கிழக்கு மற்றும் பல்வேறுபட்ட ஆசிய நாடுகளையும் உள்ளடக்கியுள்ளது. ஆண்டு காலப்பகுதியில் பயணிகள் கட்டணங்களிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட விரிவாக்கத்திற்கு இதுவும் பங்களித்தது. அதேவேளை, சிறிலங்கன் எயார்லையின்ஸ் 2016இல் மிகின் லங்காவின் தொழிற்பாடுகளை கையேற்றதுடன் ஒன்பது குறுகிய சுமை வழிகளையும் மூன்று வானூர்திகளையும் ஏற்றுக்கொண்டது. எனினும் சிறிலங்கன் எயார்லையின்ஸின் சில பறப்பு சேரிடங்களின் முடிவுறுத்தல் அதேபோன்று 2016 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வான் கட்டணங்களின் கீழ் நோக்கிய திருத்தம் என்பன பயணிகள் கட்டணங்களிலிருந்தான வருவாய்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தின. பண்டாரநாயக்கா பன்னாட்டு விமான நிலையத்தின் ஓடுபாதையை மீள்தளமிடல் ஓடுபாதையின் இயலளவை அதிகரிப்பதுடன் இந்தத் துறையின் நீண்ட கால உள்ளார்ந்த வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும்.

**துறைமுகத்துடன் தொடர்பான நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கத்துடன் துறைமுகம் மற்றும் வானூர்தி நிலையத்துடன் தொடர்புபட்ட நடவடிக்கைகள் இரண்டிலுமான சரக்குக் கட்டணங்களின் பேரிலான உட்பாய்ச்சல்கள் 2016இல் அதிகரித்தது.** கொழும்பு துறைமுகத்தில் கையாளப்பட்ட சரக்கு, கொள்கலன் மற்றும் மாற்றிக்கப்பலேற்றல் என்பவற்றின் அளவு அதிகரித்ததன் காரணமாக இத்தகைய பணிகளிலிருந்த மொத்த உட்பாய்ச்சல்கள் 2016இல் ஐ.அ.டொலர் 1,177 மில்லியனுக்கு 6.3 சதவீதத்தால் அதிகரித்தது. முழுமையான அளவுத்திட்டத்தில் அதனது இரண்டாவது வருட நடவடிக்கைகளின் போது கொள்கலன்கள் கையாளலில் 2 மில்லியன் என்ற இருபது அடிக்கு சமமான கொள்கலன் அலகுகள் என்ற மைல்கல் என்றளவுகளை கடந்து சென்ற கொழும்பு பன்னாட்டு

அட்டவணை 5.6
நடைமுறை மற்றும் மூலதன கணக்கு
(பீ.பி.எம்.6 வெளிப்படுத்துகை வடிவமைப்பு)

ஐ.அ.டொ.மில்லியன்

| விடயம் | 2015 (அ) | | | 2016 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | வரவு | செலவு | தேறிய | வரவு | செலவு | தேறிய |
| **பொருட்கள் மற்றும் பணிகள்** | **16,943** | **23,006** | **-6,063** | **17,448** | **23,659** | **-6,211** |
| **பொருட்கள்** | **10,546** | **18,935** | **-8,388** | **10,310** | **19,400** | **-9,090** |
| பொது வணிகம் | 10,546 | 18,892 | -8,346 | 10,310 | 19,026 | -8,716 |
| நாணயமல்லா தங்கம் | - | 42 | -42 | - | 374 | -374 |
| **பணிகள்** | **6,397** | **4,072** | **2,325** | **7,138** | **4,259** | **2,879** |
| போக்குவரத்து | 2,105 | 1,579 | 526 | 2,250 | 1,618 | 632 |
| கடல்வழி போக்குவரத்து | 997 | 762 | 234 | 1,059 | 779 | 281 |
| சரக்குத் தொகுதி | 997 | 762 | 234 | 1,059 | 779 | 281 |
| வான்வழி போக்குவரத்து | 1,108 | 816 | 292 | 1,191 | 840 | 351 |
| பயணிகள் | 997 | 732 | 266 | 1,073 | 753 | 320 |
| சரக்குத் தொகுதி | 111 | 85 | 26 | 118 | 87 | 31 |
| பயணம் (இ) | 2,981 | 1,420 | 1,561 | 3,518 | 1,542 | 1,977 |
| கட்டுமானம் | 60 | 30 | 30 | 63 | 29 | 34 |
| காப்புறுதியும் ஓய்வூதியப் பணிகளும் | 119 | 92 | 27 | 121 | 89 | 32 |
| நிதியியல் பணிகள் | 254 | 380 | -126 | 252 | 403 | -151 |
| தொலைத்தொடர்பு மற்றும் கணனி பணிகள் | 805 | 429 | 375 | 858 | 443 | 416 |
| தொலைத்தொடர்புகள் | 128 | 102 | 26 | 134 | 105 | 29 |
| கணனி பணிகள் | 677 | 327 | 349 | 724 | 337 | 387 |
| ஏனைய வியாபார பணிகள் | 42 | 63 | -21 | 42 | 67 | -25 |
| அரச பொருட்கள் மற்றும் பணிகள் (என்.ஐ.இ) | 31 | 79 | -48 | 33 | 68 | -35 |
| **முதலாந்தர வருமானம்** | **127** | **2,140** | **-2,013** | **120** | **2,304** | **-2,184** |
| ஊழியர்களுக்கான நட்டஈடு | 19 | 83 | -63 | 16 | 67 | -51 |
| முதலீட்டு வருமானம் | 108 | 2,058 | -1,950 | 105 | 2,238 | -2,133 |
| நேரடி முதலீடு | 17 | 787 | -771 | 12 | 953 | -941 |
| பங்குலாபம் | 17 | 435 | -419 | 12 | 504 | -491 |
| மீள் முதலிடப்பட்ட வருவாய்கள் | - | 352 | -352 | - | 450 | -450 |
| சொத்துப் பட்டியல் முதலீடு | - | 844 | -844 | - | 831 | -831 |
| பங்கு மூலதனம் | - | 80 | -80 | - | 75 | -75 |
| வட்டி | - | 764 | -764 | - | 756 | -756 |
| குறுங்காலம் | - | 27 | -27 | - | 1 | -1 |
| நீண்டகாலம் | - | 737 | -737 | - | 755 | -755 |
| ஏனைய முதலீடு | 25 | 426 | -401 | 45 | 453 | -408 |
| ஒதுக்கு சொத்துக்கள் | 66 | - | 66 | 47 | - | 47 |
| **இரண்டாந்தர வருமானம்** | **7,007** | **814** | **6,193** | **7,260** | **807** | **6,453** |
| அரசாங்கம் | 27 | - | 27 | 19 | - | 19 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 6,980 | 814 | 6,167 | 7,242 | 807 | 6,434 |
| **நடைமுறை கணக்கு** | **24,078** | **25,960** | **-1,883** | **24,829** | **26,771** | **-1,942** |
| **மூலதன கணக்கு** | **71** | **24** | **46** | **46** | **21** | **26** |
| மூலதன மாற்றல்கள் | 71 | 24 | 46 | 46 | 21 | 26 |
| அரசாங்கம் | 50 | - | 50 | 35 | - | 35 |
| கூட்டுத்தாபனங்கள் மற்றும் வீட்டுத்துறை | 21 | 24 | -3 | 11 | 21 | -10 |
| **நடைமுறை மற்றும் மூலதன கணக்கு** | 24,148 | 25,985 | -1,836 | 24,875 | 26,792 | -1,917 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) வதியாதோருக்கு வழங்கப்பட்ட பயணிகள் பணிகள் போக்குவரத்து பணிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

கொள்கலன் முனைக்கோடியின் அதிகரித்த நடவடிக்கைகள் இவ்விரிவாக்கத்திற்கு முக்கிய பங்களிப்பாளராக இருந்தது. அதேவேளை, உலகளாவிய ஒரு செயற்பரப்பில் இலங்கையின் கடற்போக்குவரத்து இயலளவினை அங்கீகரிக்கும் வகையில் 2017 பெப்புருவரியில் சிங்கப்பூரை அடிப்படையாகக் கொண்ட உலகளாவிய துறைமுக அரங்கினால் “தெற்காசியாவின் சிறந்த முனைக்கோடி” என்று தெற்காசியா கொள்கலன் நுழைவாயிலுக்கு விருது வழங்கப்பட்டது.

## பயணம் மற்றும் சுற்றுலா

**பொருளாதாரத்தில் பிரதானமான வெளிநாட்டு நாணயத்தை ஈட்டித் தருகின்ற இலங்கைச் சுற்றுலாத் தொழில்துறை 2016இல் தனது வளர்ச்சி உத்வேகத்தைத் தொடர்ந்தது.** வரலாற்றில் முதன்முறையாக சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2 மில்லியன் மைல் கல்லைக் கடந்து 2,050,832 வருகைகளை அடைந்ததுடன், 2016இல் 14.0 சதவீதமான வரவேற்கத்தக்க வருடாந்த வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது. சுற்றுலா சம்பந்தப்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் முதலீடுகளிலான கணிசமான அதிகரிப்பு, புதிய வான்வழி மற்றும் கப்பல் உலா போன்றவற்றின் தொழிற்பாட்டினால் அதிகரித்த இணைப்பு என்பவற்றுடன் நாடு குறித்த ஊக்குவிப்புப் பிரசாரங்களும் இந்த வரவேற்கத்தக்க வளர்ச்சிக்கு பங்களித்திருந்தன. உலகின் முக்கிய சுற்றுலாச் சேரிடங்களில் அதிகரித்த புவிசார் அரசியல் பதற்றமும் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கு இலங்கைக்கு உதவியது.

**2016இல் ஆபிரிக்காவைத் தவிர அனைத்து பிரதான பிராந்தியங்களிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் அதிகரித்துள்ளன.** மேற்கு ஐரோப்பா 31.4 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கைக்கான பெரிய சுற்றுலா

வரைபடம் 5.8
நாடுகளின்படி சுற்றுலாப் பயணிகளின் வருகை - 2016



மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

வரைபடம் 5.9
சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மற்றும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்



மூலம்: இலங்கை சுற்றுலா அதிகாரசபை

மூலமாகத் தொடர்ந்தும் காணப்படுவதுடன், சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் எண்ணிக்கை 643,333இற்கு 16.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. சீனாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் பதிவு செய்யப்பட்ட வரவேற்கத்தக்க வளர்ச்சியினால் பங்களிக்கப்பட்டு கிழக்கு ஆசியாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் பங்கு 2010 இலிருந்து தொடர்ச்சியாக அதிகரித்து 2010இல் 10.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் மொத்த வருகைகளில் 20.7 சதவீதத்திற்கு வகைகூறி, 2016இல் 356,729 வருகைகளுடன் இந்திய பெரிய சுற்றுலா மூலமாக இருந்த வேளை சீனா இரண்டாவதாகவும் அதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் என்பன காணப்பட்டன. இந்த 5 பெரிய சுற்றுலா மூல சேரிடங்களும் சேர்ந்து 2016இன் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் 51.0 சதவீதத்திற்கு வகைகூறி சுற்றுலாவின் சந்தைச் செறிவைப் பிரதிபலித்தன. வளர்ச்சிக்கான அதிகூடிய பங்களிப்பு 271,577 சுற்றுலாப் பயணிகளின் வருகைகளுடன் சீனாவிடமிருந்து பதிவாகியதுடன் அதனைத் தொடர்ந்து இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியம் என்பன காணப்படுகின்றன. வருகைக்கான நோக்கத்தினை நியதிகளில் பெரும்பான்மையான சுற்றுலாப் பயணிகள் (83.4 சதவீதம்) விடுமுறையைக் கழிக்கும் நோக்கத்தில் நாட்டிற்கு வருகை தந்திருந்தனர். வியாபார நோக்கங்களுக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 1.8 சதவீதளவில் காணப்பட்ட அதேவேளை, நண்பர்கள் மற்றும் உறவினர்களை பார்ப்பதற்காக, சமய மற்றும் கலாசார நோக்கங்கள், அலுவல்சார், கூட்டங்கள், சன்மானங்கள், மாநாடுகள், நிகழ்வுகள், நலம், கல்வி மற்றும் விளையாட்டு போன்ற ஏனைய நோக்கங்களுக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் பங்கு 2016இல் மொத்த வருகைகளில் 14.8 சதவீதமளவில் காணப்பட்டன.

5

**சுற்றுலா மூலமான வருவாய்கள் 2016இலும் தனது வளர்ச்சி வேகத்தைத் தொடர்ந்து, பணிகள் கணக்கை வலுப்படுத்துவதில் பங்களித்தது.** சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் ஏற்பட்ட அதிகரிப்புடன் உயர் செலவிடல் மற்றும் சுற்றுலாப் பயணிகள் தங்கியிருக்கும் காலம் அதிகரித்தமை என்பவற்றின் விளைவாக சுற்றுலாவிலிருந்தான வருவாயானது 2015இன் ஐ.அ.டொலர் 2,981 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இல் ஐ.அ.டொலர் 3,518 மில்லியனுக்கு 18.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் சுற்றுலாப் பயணிகள் செலவிடல் மற்றும் தங்கியிருக்கும் காலம் மீது மேற்கொள்ளப்பட்ட அண்மிய வருடாந்த அளவீட்டின்படி, ஒரு நாளுக்கான சுற்றுலாப் பயணி ஒருவரின் சராசரி செலவிடல் 2015இல் ஐ.அ.டொலர் 164.1 இலிருந்து 2016இல் ஐ.அ.டொலர் 168.2ஆக உயர்ந்துள்ளது. மேலும் 2016இல் சுற்றுலாப் பயணியொருவரின் சராசரி தங்கியிருக்கும் காலம் 10.2 நாட்களாக மதிப்பிடப்பட்டு 2015இன் 10.1 நாட்களுடன் ஒப்பிடுமிடத்து மிதமாக மேம்பாடடைந்துள்ளது.சுற்றுலாவிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட ஆரோக்கியமான வளர்ச்சிக்கு விரிவான சுற்றுலா ஊக்குவிப்புச் செயற்பாடுகள் மற்றும் போருக்குப் பின்னரான யுகத்தில் சுற்றுலாவிடுதி அதனுடன் தொடர்புடைய ஏனைய உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் போன்றவை காரணம் கூறுகின்றன. சுற்றுலாத் தொழில்துறை தொடர்பான உட்கட்டமைப்புக்களில் தொடர்ச்சியான முதலீடு மற்றும் தந்திரோபாய சந்தைப்படுத்தல் பிரசாரங்கள் ஊடாக இலங்கையின் வர்த்தகச் சின்னப் பெறுமதியை தரமுயர்த்த எடுக்கப்பட்ட முயற்சிகளுடன், சுற்றுலாத் துறையின் செயலாற்றத்தின் மேல்நோக்கிய போக்கு வருகின்ற வருடங்களிலும் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, 2016இல் பயணங்கள் தொடர்பான வெளிப்பாய்ச்சல்களும் ஐ.அ.டொலர் 1,542 மில்லியனுக்கு 8.6 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய அபிவிருத்திகளைத் தொடர்ந்து பயணம் மற்றும் சுற்றுலாத் துணைத்துறை ஐ.அ.டொலர் 1,977 மில்லியன் மிகையொன்றைப் பதிவு செய்தது.

**சுற்றுலாத்துறை முதலீடுகள் 2016இல் மேலும் விரிவடைந்தன.** 2015இல் 37 செயற்றிட்டங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டதுடன் ஒப்பிடுகையில் 2016இல் ஐ.அ.டொலர் 126 மில்லியன் முதலீட்டுடன் கூடிய 1,526 அறைகளைக் கொண்ட 41 புதிய சுற்றுலாவிடுதி செயற்றிட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. கயாட், செறட்டன், ஜரிசி மற்றும் நெக்ஸ்ட் என்பன உள்ளிட்ட பல முக்கிய சுற்றுலாவிடுதி செயற்றிட்டங்கள் இந்த வருடமும் தமது கட்டுமான வேலைகளைத் தொடர்கின்ற வேளை பல பன்னாட்டு சுற்றுலாவிடுதிகளான சங்கறி-லா, ஆர்ஜயு மற்றும் பெஸ்ட் வெஸ்டர்ன் என்பன தொழிற்துறைக்கு 1,569 அறைகளைக் கூட்டி தமது தொழிற்பாடுகளை ஆரம்பித்தன. மேலும், கடைமாளிகைகள், விருந்தினர் இல்லங்கள், வீடுகளில் தங்குதல், பாரம்பரிய இல்லங்கள், பங்களாக்கள் மற்றும் வாடகைக்கு விடப்படும் தொடர்மாடிகள் என்பன உள்ளிட்ட துணை நிறுவனங்கள் போன்றன 2016இல் 1,558 இற்கு 149 ஆல் அதிகரித்ததன் மூலம் மொத்த அறைகளின் கொள்ளளவு 11,535 இற்கு 833 அறைகளினால் அதிகரித்தது. 2020 அளவில் 4.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளுக்கு வழங்கக்கூடிய 75,000 அறைகளைக் கட்டுக்கின்ற அதன் இலக்கினை அடைய அரசிற்கு இப்புதிய சுற்றுலா விடுதி செயற்றிட்டங்கள் உதவிபுரியும்.



அட்டவணை 5.7
சுற்றுலாத் துறையின் செயலாற்றம்

| விடயம் | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 (அ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) 2016 |
|---|---|---|---|---|---|---|
| சுற்றுலா பயணிகளின் வருகை (எண்ணிக்கை) | 1,005,605 | 1,274,593 | 1,527,153 | 1,798,380 | 2,050,832 | 14.0 |
| வருகையின் நோக்கங்களின் படி | | | | | | |
| பொழுதுபோக்கு | 748,436 | 915,208 | 1,037,644 | 1,198,240 | 1,710,027 | 42.7 |
| வியாபாரம் | 90,040 | 67,946 | 20,270 | 23,323 | 37,121 | 59.2 |
| ஏனையவை | 167,129 | 291,439 | 469,239 | 576,817 | 303,684 | -47.4 |
| சுற்றுலா விருந்தாளிகளின் இரவுகள் ('000) | 10,056 | 10,909 | 15,119 | 18,163 | 20,918 | 15.2 |
| தங்கும் அறை குடியிருப்பு விகிதம் (%) | 71.2 | 71.7 | 74.3 | 74.5 | 74.8 | 0.4 |
| மொத்தச் சுற்றுலா பெறுகைகள் (ரூ.மில்லியன்) | 132,427 | 221,720 | 317,479 | 405,492 | 512,373 | 26.4 |
| தலைக்குரிய சுற்றுலா பெறுகைகள் (ரூ) | 131,688 | 173,954 | 207,889 | 225,476 | 249,837 | 10.8 |
| மொத்த தொழில்நிலை (எண்ணிக்கை) (ஆ) | 162,869 | 270,150 | 299,890 | 319,436 | 335,659 | 5.1 |
| நேரடி தொழில்வாய்ப்புக்கள் | 67,862 | 112,550 | 129,790 | 135,930 | 146,115 | 7.5 |
| மறைமுக தொழில்வாய்ப்புக்கள் | 95,007 | 157,600 | 170,100 | 183,506 | 189,544 | 3.3 |

(அ) தற்காலிகமானது
(ஆ) மதிப்பீடுகள்

மூலங்கள் : இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
இலங்கை மத்திய வங்கி

**நாட்டின் கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களிலுள்ள சுற்றுலா தொழிற்துறையானது தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தமை மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அம் மாகாணங்களிலுள்ள சுற்றுலாவிற்கான உயர் சாத்தியத்தினை அணிதிரட்டுவதில் தமது கவனத்தை செலுத்துகின்றனர்.** இந்த அபிவிருத்தியை பிரதிபலிக்கின்ற விதத்தில் மோதல் முடிவடைந்ததிலிருந்து சுற்றுலா தொடர்பிலான பல புதிய செயற்றிட்டங்கள் கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் குறிப்பாக பாசிக்குடா, நிலாவெளி மற்றும் யாழ்ப்பாணத்தில் நிறைவுபெற்றுள்ளன. மேலும், வடக்கு மற்றும் கிழக்கின் யாழ்ப்பபாணம், மன்னார், முல்லைத்தீவு மற்றும் குச்சவெளி போன்ற தீவுகளில் புதிய சுற்றுலாச் செயற்றிட்டங்களை நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. மேலும், இலங்கை முதலீட்டு சபை கல்பிட்டியில் ஒருங்கிணைக்கப்பட்ட சுற்றுலா வாசஸ்தலம் மற்றும் தெத்துவவில் சுற்றுலா வாசஸ்தலம் மற்றும் பொழுதுபோக்கு அபிவிருத்தி என்பவற்றை உருவாக்கச் செய்ய முன்மொழிந்திருந்தது.

**இலங்கையின் சுற்றுலா தொழிற்துறையின் தரங்களை முன்னேற்றுவதற்காக ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டன.** 1968இலும் 1999இலும் உருவாக்கப்பட்ட முன்னைய வகைப்படுத்தலுக்குப் பதிலாக 2016 ஏப்பிறலில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் சுற்றுலா விடுதிகளுக்கான புதிய வகைப்பாடு அறிமுகப்படுத்தப்பட்டது. புதிய வகைப்பாட்டின் தேவைப்பாட்டின் கீழ் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவுசெய்யப்பட்டுள்ள அனைத்து சுற்றுலா விடுதிகளும், ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு மீள வகைப்படுத்துகின்ற ஓர் நட்சத்திர வகைப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 2016இற்கான பாதீட்டின்படி, பணியின் தரத்தை ஒழுங்கமைக்கும் மற்றும் மேம்படுத்தும் நோக்குடன் முறைசாரா துறையை முறைசார்ந்த துறைக்குள் ஈர்த்துக்கொள்வதற்கான திட்டமொன்று வெளியிடப்பட்டது. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம், சுற்றுலா மற்றும் சுற்றுலாவிடுதிகள் முகாமைத்துவத்திற்கான இலங்கை நிறுவனம் மற்றும் இலங்கை மாநாட்டு பணியகம் என்பன உள்ளடங்கிய "இலங்கை சுற்றுலா" 2016 மே இல் தனது பொன்விழாவைக் கொண்டாடியதுடன், அதற்கென பல செயற்பாடுகளையும் ஒழுங்கமைத்திருந்தது. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை ஏனைய சுற்றுலா நிறுவனங்களுடன் இணைந்து உச்ச சுற்றுலாப் பயணிகள் வருகை வழங்கலுக்காக 2016 திசெம்பரில் கலாசார நிகழ்வுகள், பருவகால நிகழ்வுகள், உணவுத் திருவிழா, கண்காட்சி மற்றும் பொழுதுபோக்கு என்பவற்றுடன் கூடிய சுற்றுலாப் பயணிகள் விடுமுறை விழாவினை ஒழுங்கமைத்திருந்தது. பிரதானமாக சுற்றுலா தொழிற்துறை மற்றும் சுற்றுலாப் பயணிகளை கவர்தல் போன்றவற்றின் தரத்தை உயர்த்தவும், கூட்டங்கள், ஊக்குவிப்புக்கள், மாநாடுகள் மற்றும் நிகழ்வுகள் சுற்றுலாவை அபிவிருத்தி செய்வதற்காக மாநாட்டு நிலையமொன்றை நிர்மாணிக்கவும் மற்றும் சுற்றுலா நிறுவனங்களுக்கான நிதியுதவித் திட்டங்களுக்கும் இலங்கை சுற்றுலா தொழிற்துறையின் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு, சுற்றுலா தொழிற்துறையின் வளர்ச்சித் உத்வேகத்தினை இனங்கண்டு 2017இற்கான பாதீட்டில் பல முன்மொழிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

**இலங்கை முன்னணியில் திகழவும் உலகின் கவர்ச்சிமிக்க சுற்றுலா சேரிடங்களில் ஒன்றாக இருக்கவும் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்ட இலக்குடைய மேம்பாட்டு பிரசாரங்கள் உதவி புரிந்தன.** சுற்றுலா மேம்பாட்டின் முக்கியத்துவத்தினை இனங்கண்டு இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம் 2016இல் தனது நாடு குறித்த தந்திரோபாய சந்தைப்படுத்தல் திட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டு பயணக் கண்காட்சிகளில் பங்குபற்றுதல் மற்றும் தெருவோர நிகழ்வுகளை நடாத்துதல் மற்றும் 22 முக்கிய சந்தைகளில் விளம்பரப்படுத்தல் பிரசாரங்கள் போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்தது. இது உலகளாவிய வெளிப்புற மேம்பாட்டு செயற்பாடுகளான ஐக்கிய இராச்சிய நிலத்தடியில் விளம்பரப்படுத்தல், நஷனல் ஜோக்கிரபிக் மற்றும் பிபிசி வைல்ட்லைப் போன்ற சர்வதேச புகழ்மிக்க நாளேடுகளில் விளம்பரப்படுத்தல் போன்றவற்றையும் உள்ளடக்கியுள்ளது. இதற்கு மேலாக, விசேடமாக உயர் வர்க்க சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்டு வருகைதரும் வலைப்பதிவாளர்கள் நிகழ்ச்சிகளை நடாத்துதல், இயக்கவலை விளம்பரப்படுத்தல் பிரசாரம், வலை பேனர்கள் ஊடான இலக்கமுறை விளம்பரப்படுத்தல், அர்ப்பணிக்கப்பட்ட மின்னஞ்சல் மற்றும் சமூக வலைத்தள நிகழ்வுகள் மூலம் 2016இல் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம் அதிகளவில் வலை அடிப்படையிலான மேம்பாட்டு செயற்பாடுகளை பயன்படுத்தியது. பிராண்ட் ஃபினான்ஸ் எனப்படும் முன்னணி சுதந்திர வியாபார மதிப்பிடும் நிறுவனத்தினால் கணிக்கப்பட்ட இலங்கையின் தேசிய வியாபாரக் குறியின் பெறுமதி ஐ.அ.டொலர் 74 பில்லியனுக்கு அதிகரித்து 2015இல் 57 இலிருந்து நாடு 2016இல் 55ஆம் நிலைக்கு தரமுயர்த்தவும் இம் மேம்பாட்டு பிரசாரங்கள் உதவிபுரிந்தன. மேலும், இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தினால் முன்னெடுக்கப்பட்ட பயனுறுதிமிக்க

5

மற்றும் தொடர்ச்சியான மேம்பாடுகளின் விளைவாக 2016 மற்றும் 2017இல் பயணிப்பதற்கு சிறந்த சேரிடங்களில் ஒன்றாக இலங்கையை பயணத்துடன் தொடர்புடைய பல நிறுவனங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

**கடந்த சில வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட தீவிரமான மேம்பாட்டு பிரசாரங்கள் மற்றும் சுற்றுலாத் தொழிற்துறை தொடர்பான உட்கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்வதற்கு எடுக்கப்பட்ட முன்முயற்சிகள் என்பன சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கு உதவிய போதும் உலகச் சந்தையில் இலங்கை தன்னுடைய முழுமையான சாத்தியத்தன்மையை இன்னும் அடையவில்லை.** 2016இல் இலங்கை 2 மில்லியன் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்த வேளை, தென்கிழக்காசிய பிராந்தியத்திலுள்ள சில நாடுகளான சிங்கப்பூர், தாய்வான் மற்றும் ஹொங்கொங் போன்ற வருடத்திற்கு 10 மில்லியனுக்கும் மேலதிகமான சுற்றுலாப் பயணிகளின் வருகைகளைப் பதிவு செய்திருந்தன. நாடு ஏற்கனவே ஆயுர்வேத மருத்துவ வழங்கலிலும் உயர் தரத்திலான தனியார் நலப் பராமரிப்பு வசதிகளிலும் போட்டித் தன்மையுடன் காணப்படுவதால் இலங்கை தனது திறனை மருத்துவ சுற்றுலா மற்றும் சூழலியல் சுற்றுலா போன்ற பகுதிகளில் வெளிப்படுத்த முடியும். அண்மிய வருங்காலத்தில் தொழிலாளர் பற்றாக்குறை தொழிற்துறையின் வளர்ச்சி உத்வேகத்தை தடுக்கும் என்பதால் விருந்தோம்பல் கைத்தொழிலில் வேலையாட்களை பயிற்றுவிப்பதற்காக ஓர் அரச தனியார் பங்குடமையாக முறையான பொறிமுறையொன்று வடிவமைக்கப்பட வேண்டும். விரும்தோம்பல் முகாமைத்துவத்திலான உள்ளிருப்பு நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்த பயிற்சிப் பாடநெறிகள் பிராந்திய மட்டத்தில் மேம்படுத்தப்பட வேண்டும். மேலும் அறைகள் கொள்ளளவை முன்னேற்றுவதற்கான வழிமுறைகள் தொடர்ந்தும் செய்யப்பட வேண்டும். வீடுகளில் தங்கியிருத்தல் சிக்கன சுற்றுலாப் பயணிகளிடம் பிரபலமடைவதால், நீண்ட காலத்தில் நாட்டின் போட்டித்தன்மையை பேணுவதற்கு உயர் நியமங்கள் தேவைப்படுவதால் முறைசாரா துறையின் தங்குமிட வசதியை தரப்படுத்த வேண்டியது அவசியமாகும். அதேநேரம், தற்போது தேக்கநிலையிலுள்ள சராசரி விருந்தினர் இரவினை அதிகரிக்கும் பொருட்டு பின்தங்கியுள்ள சுற்றுலாத் தொழிற்துறை துறைகளான பொழுதுபோக்கு சுற்றுலா மற்றும் விளையாட்டு சுற்றுலா என்பவற்றுக்கு அதிகளவு வலியுறுத்தல்கள் கொடுக்கப்பட்டு இலங்கையின் சுற்றுலா செயற்பாடுகளின் கிடைப்பனவுத்தன்மையை பன்முகப்படுத்துவதற்கு கொள்கை முன்னெடுப்புக்கள் தேவைப்படுகின்றன.

## தொலைத்தொடர்பூட்டல்கள், கணனி மற்றும் தகவல் பணிகள்

**தொலைத்தொடர்பூட்டல்கள், கணனி மற்றும் தகவல் பணிகளிலிருந்தான வருவாய்கள் 2016இல் வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்திருந்தன.** தொலைத்தொடர்பூட்டல்கள், கணனி மற்றும் தகவல் பணிகளின் பேரிலான மொத்த உட்பாய்ச்சல்கள் 2015இன் ஐ.அ.டொலர் 805 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இல் ஐ.அ.டொலர் 858 மில்லியனுக்கு 6.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. 2015ஆம் ஆண்டின் மொத்த வருவாயானது ஐ.அ.டொலர் 128 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 134 மில்லியனுக்கு அதிகரித்ததுடன் ஆண்டு காலத்தில் தொலைத்தொடர்பூட்டலின் துணைத்துறைகள் மிதமான வீதத்தில் வளர்ச்சியடைந்தது. பன்னாட்டு நேரடி அழைப்புப் பாவனையில் ஏற்பட்ட வீழ்ச்சியானது துறையின் வளர்ச்சியை ஊக்கங்கெடுப்பதாகவிருந்த அதேநேரத்தில், வருவாய்களிலான விரிவாக்கமானது இணையத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட தொடர்பூட்டல் பணிகளின் பாவனை அதிகரிப்பின் மூலம் ஆதரவளிக்கப்பட்டது. 2016 காலப்பகுதியில் டிஜிட்டலாக்கம், அகலப்பட்டை, இணையத்தள தொடர்புகளின் பாவனை, செய்மதி மற்றும் கம்பித் தொலைக்காட்சி பணிகள் போன்ற தொலைத்தொடர்பூட்டல்களின் பகுதிகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான தொழில்நுட்ப புத்தாக்கங்களின் காரணமாக துறையின் உயர்வருமான உற்பத்திக்கு ஆதரவளிக்கும் விதமாக துறை விருத்தியடைந்தது. மாத்தறையில், தென்கிழக்காசியா-மத்திய கிழக்கு மேற்கு ஐரோப்பா 5 கம்பித் தரையிறக்கல் நிலையத்தின்[2] நிறுவுகையானது 2016இல் தொலைத்தொடர்பூட்டல் தொழில்துறையில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லினைப் பதிவு செய்தது. இச்செயற்றிட்டமானது இலங்கையின் உலகளாவிய இணைப்பின் நம்பகத்தன்மையினை உயர்த்துவதுடன் அதன் மூலம் தொலைத்தொடர்பூட்டலின் செயலாற்றத்தினை நடுத்தர காலத்திலிருந்து நீண்டகாலத்திற்கு மேம்படுத்தும்.

**அதேவேளை, 2016இல் கணனி மற்றும் தகவல் பணிகள் உப துறையானது அதன் வளர்ச்சிப் போக்கினை தொடர்ந்தது.** 2016இல் கணனி மற்றும் தகவல் பணிகளிலிருந்தான வருவாய்கள் 7.0 சதவீத்தினால் ஐ.அ.டொலர் 724 மில்லியனுக்கு வளர்ச்சியடைந்தது. இந்த துறையில் ஏற்பட்ட வளர்ச்சியானது பிரதானமாக வெளியிலிருந்து வியாபார

2 தென்கிழக்காசியா - மத்தியகிழக்கு - மேற்கு ஐரோப்பா 5 என்பது மூன்று கண்டங்களிலுள்ள 16 நாடுகளை இணைக்கின்ற கடலுக்கடியிலான நவீன கம்பிவழி முறைமையாகும்.

5

செயன்முறையைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் வெளியிலிருந்து அறிவு செயன்முறையைப் பெற்றுக்கொள்ளல் என்பவற்றை உள்ளடக்கிய மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்ப இயலுமைப்படுத்தல் பணிகளின் விரைவான அதிகரிப்பின் மூலம் உந்தப்பட்டது. போட்டித்தன்மை மற்றும் நலன் உயர்வில் தகவல் மற்றும் தொடர்பூட்டல்களினால் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களை பொருளாதாரம் எவ்வாறு பயன்படுத்துகின்றது என்பதனை அளவிடுகின்ற உலக பொருளாதார அரங்கினால் 2016இல் வெளியிடப்பட்ட “வலையமைக்கப்பட்ட தயார்நிலைச் சுட்டெண்ணில்” இலங்கை, 139 நாடுகளின் மத்தியில் 63 நாடாக தரமிடப்பட்டது. தொழில்துறையின் சாத்தியப்பாடான வளர்ச்சியை அங்கீகரிக்கும் விதத்தில் 2017இல் தேசிய வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு தகவல் தொழில்நுட்ப இயலுமைப்படுத்தல் பணிகள் தொழில் துறையின் முற்தேவைகளை பூர்த்திசெய்வதற்கு நெகிழ்ச்சித்தன்மையுள்ள தொழிற்பாட்டு மணித்தியாலங்களுடன் தொடர்புடைய தற்போதுள்ள தொழிலாளர் சட்டம், ஒப்பந்த தொழில்வாய்ப்பு மற்றும் திறமை அடிப்படையிலான கூலிகள் என்பவற்றை அரசு திருத்தியமைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தொழில் துறையின் முழுமையான சாத்தியப்பாட்டை அடைந்து கொள்ளும் பொருட்டு ஒரு உயர் ஆற்றல்மிக்க தேர்ச்சித் தளம், அனைத்தையுமுள்ளடக்கிய ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் நவீன உட்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றை அபிவிருத்தி செய்வது கட்டாயமாகவுள்ளது.

5

### 5.4.2 முதலாந்தர வருமானம்

**2016இல் முதலாந்தர வருமானக் கணக்கிலான பற்றாக்குறையானது விரிவாக்கமடைந்தது.** இது, பிரதானமாக தொடர்ச்சியான வட்டிக் கொடுப்பனவுகள் பங்கிலாப கொடுப்பனவுகளினதும் மீமுதலீகளுக்கமைவான வெளிப்பாய்ச்சல்கள் என்பவற்றுடன் இணைந்த ஒதுக்கச் சொத்துக்களிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட சரிவினால் ஏற்பட்டதாகும். இதற்கிணங்க, முதலாந்தர வருமான கணக்கிலான பற்றாக்குறையானது 2015இன் ஐ.அ.டொலர் 2ஈ013 மில்லியன பற்றாக்குறையொன்றுடன் ஒப்பிடுகையில் ஆண்டுகாலப்பகுதியில் 8.5 சதவீதத்தினால் ஐ.அ.ெடாலர் 2ஈ184 மில்லியனுக்கு அதிகரித்தது. 2015இல் ஐ.அ.டொலர் 127 மில்லியனாக தொகையிடப்பட்ட முதலாந்தர வருமான கணக்கிற்கான உட்பாய்ச்சலகளானது 2016இல் ஐ.அ.டொலர் 120 மில்லியனுக்கு சரிவடைந்தது. உட்பாய்ச்சல்களில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சிக்கு முக்கியமாக, ஆண்டுக் காலப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளிலான சரிவுடன் இணங்கிச் செல்லும் ஒதுக்குச் சொத்துக்களிலிருந்தான வருவாய்களின் குறைவடைதலே காரணமாக இருந்தது. அதேவேளையில், முதலாந்தர வருமான கணக்கிலிருந்தான மொத்த வெளிப்பாய்ச்சலானது 2015இனை ஐ.அ.டொலர் 2,140 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இல் ஐ.அ.டொலர் 2ஈ304 மில்லியனாகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016இல், வெளிநாட்டு முதலீட்டாளர்களால் மேற்கொள்ளப்படும் நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் இலாபங்களிலிருந்தான வருவாய்களின் மீள்முதலீடு மற்றும் பங்கிலா வடிவிலான இலாப மீளனுப்பல்கள் போன்றவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. அதன் விளைவாகஈ 2015இல் ஐ.அ.டொலர் 787 மில்லியனாகக் காணப்பட்ட நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளினால் மேற்கொள்ளப்படும் பங்கிலாப கொடுப்பனவுகள் மற்றும் வருவாய்களின் மீள் முதலீடானது 2016இல் ஐ.அ.டொலர் 953 மில்லியனுக்கு அதிகரித்தது. அதேவேளை, ஆண்டுக்காலப்புகதியில் சொத்துப்பட்டியல் முதலீடுகளின் மீதான வட்டிக்கொடுப்பனவுகள் வீழ்ச்சியடைந்தமைக்கு வதியாதோர் வசமிருந்த திறைசேரி முறிகளின் வெளிநின்ற கையிருப்புக்கள் குறைவடைந்தமையே காரணமாகும். இது, சொத்துப்பட்டியல் முதலீடுகளுடன் தொடர்புடைய வட்டிக் கொடுப்பனவுகளில் 2015இன் ஐ.அ.டொலர் 764 மில்லியனிலிருந்து 2016இல் 756 மில்லியனுக்கு மிதமான சரிவொன்றைத் தோற்றுவித்தது. எவ்வாறாயினும், நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் புதிய வழங்கலின் விளைவொன்றின் காரணமாக தொடர்ச்சியாக அதிகரித்தது. மேலும், 2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளிநாட்டு கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளை உள்ளடக்குகின்ற ஏனைய முதலீடுகளின் வடிவிலுள்ள முதலாந்தர வருமான வெளிப்பாய்ச்சல்கள் மிதமாக அதிகரித்தன. இத்தகைய தொழில்முயற்சிகளின் அதிகரிக்கப்பட்ட வெளிநாட்டு கடன் பொறுப்புக்களின் விளைவு அரசுக்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளினால் பெற்றுக்கொள்ப்பட்ட கடன்களின் வட்டிக் கொடுப்பனவுகளின் அதிகரிப்புக்கு பங்களிப்பு செய்யக் கூடியதாகவிருந்தது. எவ்வாறாயினும், அரச செயற்றிட்ட கடன்களுக்கான வட்டிக் கொடுப்பனவுகளானது முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட மட்டங்களிலிருந்து பெரிதளவில் மாற்றமடையாமல் தொடர்ந்து காணப்பட்டது.

### 5.4.3 இரண்டாந்தர வருமானம்

**தனியார் மற்றும் அரச மாற்றல்களை உள்ளடக்கிய இரணடாந்தர வருமானக்கணக்கானது 2015இன் மெதுவான வீழ்ச்சியிலிருந்து ஓரளவிற்கு மீண்டு, 2016இல் மெதுவான வளர்ச்சியை பதிவுசெய்தது.** தனியார் மாற்றல்களின் முக்கிய மூலமாக இரண்டாந்தர வருமானத்தின் பாரியளவிலான

உட்பாய்ச்சல்களுக்கு வகைகூறும், தொழிலாளர் பணவனுப்பல்கள் 2015இல் அவதானிக்கப்பட்ட 0.5 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 3.7 சதவீதத்தால் ஐ.அ.டொலர் 7,242 மில்லியனுக்கு மிதமாக அதிகரித்தது. இதேவேளையில், அரச மாற்றல்கள் வடிவிலிருந்த பெறுகைகள் 2016இல் வீழ்ச்சியடைந்தன. இதன் விளைவாக, இரண்டாந்தர வருமானக் கணக்குக்கான உட்பாய்ச்சல்கள் சென்றாண்டின் ஐ.அ.டொலர் 7,007 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இல் ஐ.அ.டொலர் 7,260 மில்லியனுக்கு 3.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. தொடர்ச்சியான குறைந்த எண்ணெய் விலைகள் மற்றும் புவிசார் அரசியல் உறுதியின்மைகளினால் மத்திய கிழக்குப் பிராந்தியத்திலுள்ள நாடுகளின் வருமான மட்டங்களின் வீழ்ச்சி என்பது தொழிலாளர் பணவனுப்பல்களின் ஒப்பீட்டு ரீதியான குறைந்த வளர்ச்சிக்கு காரணமானது. மேலும், தேர்ச்சியுடைய, பகுதியளவில் தேர்ச்சிபெற்ற மற்றும் வீட்டுப்பணிப் பெண்கள் உட்பட தேர்ச்சியற்ற வகைகளுக்கு கீழேயான தொழிலாளர் புலம்பெயர்வு 8.6 சதவீதத்தால் வீழ்ச்சியிடைந்ததும் தொழிலாளர் பணவனுப்பல்களின் மெதுவடைதலுக்கு 2016இல் பங்களித்திருக்கும். குறைந்த தேர்ச்சியுடைய பெண் தொழிலாளர்களின் புலம்பெயர்வை சீராக்குவதற்கான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் முயற்சிகளினால் பணிப்பெண்கள் உட்பட, பகுதியளவில் தேர்ச்சிபெற்ற மற்றும் தேர்ச்சியற்ற வகைகளுக்கு கீழேயான தொழிலாளர் புலம்பெயர்வு வீழ்ச்சிபெற்றது. இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களுக்கான முக்கிய ஓர் சேரிடமாக இருந்த சவூதி அரேபியாவின் தொழிலாளர் சந்தை தேசியமயமாக்கல் கொள்கைகள் மூலம் வெளிநாட்டு தொழிற்படைக்கு ஊக்கமளிக்காத வகையிலான தடைகளின் நடைமுறைபடுத்தலும் இந்த வீழ்ச்சிக்கு வகைகூறியது. எனினும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் வெளியிடப்பட்ட தரவுகளுக்கேற்ப, தொழில்வல்லுனர் வகையின் கீழான தொழிற்படை புலப்பெயர்வு ஆண்டுப்பகுதியில் 5.1 சதவீதத்தால் அதிகரித்து, கடந்த ஆண்டுகளில் காணப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்களின் உள்ளடக்க மாற்றம் தொடர்ந்தது.

## 5.5 நடைமுறைக் கணக்கு மீதி

**பணிகள் மற்றும் இரண்டாந்தர வருமானக் கணக்குகளில் மிகைகள் காணப்பட்டப்போதிலும், வர்த்தகக் கணக்கு மற்றம் முதலாந்தர வருமானக் கணக்கின் மோசமடைதலுக்கு மத்தியில் 2016 இல் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை விரிவடைந்தது.** ஏற்றுமதிகளிலிருந்தான பெறுகைகளின் வீழ்ச்சிக்கு மத்தியில் அதிகரித்த இடைநிலை மற்றும் முதலீட்டு இறக்குமதிச் செலவினத்தின் விளைவாக, வர்த்தக மீதியில் ஓர் கணிசமானளவு தேய்வடையச் செய்தது. எனினும், சுற்றுலாத்துறையின் வருவாய்களின் கணிசமான வளர்ச்சியினால் ஏற்பட்ட பணிகளின் கணக்கிற்கான அதிகரித்த உட்பாய்ச்சல்கள் மற்றும், பிரதானமாக தொழிலாளர் பணவனுப்பல்களைக் கொண்ட இரண்டாந்தர வருமானக் கணக்கின் மிகை என்பவை நடைமுறைக் கணக்கின் வர்த்தக மற்றும் முதன்மை வருமானக் கணக்குகளில் ஏற்பட்ட பற்றாக்குறைகளை ஓரளவிற்கு தளர்த்தின. இதன் விளைவாக, நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை 2015இன் ஐ.அ.டொலர் 1,883 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இல் ஐ.அ.டொலர் 1,942 மில்லியனுக்கு சிறிதளவால் விரிவடைந்தது. இதற்கேற்ப, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை 2015 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.3 சதவீதத்திலிருந்து 2016இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.4 சதவீதமாக மெதுவாக அதிகரித்தது.

## 5.6 மூலதனக் கணக்கு மீதி

**மூலதனக் கணக்கானது 2015இன் ஐ.அ.டொலர்கள் 46 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இல் ஐ.அ.டொலர்கள் 26 மில்லியன் சிறிதளவு மிகையினைப் பதிவுசெய்தது.** இது அரசினால் பெறப்பட்ட மூலதனமாற்றல்களின் வீழ்ச்சி மற்றும் 2016இல் தனியார் துறையிலிருந்தான மூலதன வெளிப்பாய்ச்சல்களின் வீழ்ச்சி என்பனவற்றின் இணைந்த விளைவாகும்.

## 5.7 நிதியியல் கணக்கு

**சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கில் தேறிய நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் தேறிய நிதியியல் சொத்துக்களின் கையேற்பு ஆகிய இரண்டும் 2016இல் மந்தமடைந்திருந்தன.** இதன்படி, தேறிய நிகழத்தக்க பொறுப்புக்கள் 2015இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர்கள்

வரைபடம் 5.10
நிதியியல் கணக்கு



மூலம்: இலங்கை மத்திய வங்கி

3,223 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இல் ஐ.அ.டொலர் 2,199 மில்லியனிற்கு வகைகூறின. அதேவேளை தேறிய நிதியியல் சொத்துக்களின் கையேற்புக்கள் 2015இன் ஐ.அ.டொலர் 911 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 82 மில்லியனிற்கு வகைகூறின. நிதியியல் கணக்கிற்கான தாழ்ந்தமட்ட

அட்டவணை 5.8 அ

**நிதியியல் கணக்கு**

ஐ.அ.டொ.மில்லியன்

| வகை | 2015 (அ) | | 2016 (ஆ) | |
|---|---|---|---|---|
| | நிதியியல் சொத்துக்களில் தேறிய கைப் படுத்துகை | பொறுப்புக்களின் தேறிய உறப்படல் | நிதியியல் சொத்துக் களில் தேறிய கைப் படுத்துகை | பொறுப்புக்களின் தேறிய உறப்படல் |
| நிதியியல் கணக்கு | 911 | 3,223 | 82 | 2,199 |
| நேரடி முதலீடு | 53 | 680 | 237 | 898 |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதி பங்குகள் | 53 | 439 | 235 | 709 |
| வருவாய்களில் மீள் முதலீடு தவிர்ந்த பங்கு மூலதனம் | 53 | 87 | 235 | 260 |
| நேரடி முதலீட்டு முயற்சிகளில் நேரடி முதலீட்டாளர் | 53 | 87 | 235 | 260 |
| பீஓஐ கம்பனிகள் | ... | 36 | - | 107 |
| ஏனைய கம்பனிகள் | - | 51 | - | 153 |
| வருமானத்தின் மீள் முதலீடு | - | 352 | - | 450 |
| பீஓஐ கம்பனிகள் | - | 249 | - | 318 |
| ஏனைய கம்பனிகள் | - | 103 | - | 131 |
| படுகடன் கருவிகள் | - | 241 | 2 | 189 |
| நேரடி முதலீட்டு முயற்சிகளில் நேரடி முதலீட்டாளர் | - | 241 | 2 | 189 |
| பீஓஐ கம்பனிகள் | - | 202 | - | 195 |
| பங்குதாரர் முற்பணங்கள் | - | 126 | - | 111 |
| கம்பனிகளுக்கிடையிலான கடன்பாடுகள் | - | 76 | - | 84 |
| ஏனைய கம்பனிகள் | - | 145 | - | 81 |
| படுகடன் மீள்கொடுப்பனவுகள் | - | -107 | - | -87 |
| சொத்துப்பட்டியல் முதலீடு | ... | 686 | ... | 993 |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள் | - | -60 | - | 24 |
| சிஎஸ்ஈ கம்பனிகள் | - | -60 | - | 24 |
| படுகடன் கருவிகள் | ... | 747 | ... | 969 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | ... | - | ... | - |
| நீண்ட காலம் | ... | - | ... | - |
| அரசாங்கம் | - | 747 | - | 969 |
| குறுங்காலம் (திறைசேரி உண்டியல்கள்) | - | -392 | - | 36 |
| நீண்டகாலம் | - | 1,139 | - | 932 |
| திறைசேரி முறிகள் | - | -701 | - | -361 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | - | 190 | - | -207 |
| நாட்டுக்கான முறிகள் | - | 1,650 | - | 1,500 |
| நிதியியல் பெறுதிகள் | - | - | - | - |
| ஏனைய முதலீடு | 503 | 1,857 | 317 | 308 |
| நாணயமும் வைப்புக்களும் | 143 | 1,457 | 5 | -609 |
| மத்திய வங்கி | - | 1,098 | - | -701 |
| குறுங்காலம் | - | -2 | - | -1 |
| நீண்ட காலம் | - | 1,100 | - | -700 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 143 | 359 | 5 | 92 |
| குறுங்காலம் | 152 | 359 | -4 | 92 |
| நீண்ட காலம் | -9 | - | 9 | - |
| பக்கம் ..... இல் தொடர்கிறது. | | | | |
| ஞாபகார்த்த விடயங்கள் | | | | |
| சீஎஸ்ஈ இற்கான மொத்த தேறிய உட்பாய்ச்சல்கள் | | 4 | | 19 |
| நேரடி முதலீடுகள் | | 64 | | -5 |
| சொத்துப்பட்டியல் முதலீடுகள் | | -60 | | 24 |
| திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் மீதான தேறிய முதலீடுகள் | | -1,093 | | -325 |
| வெளிநாட்டு கொள்வனவுகள் | | 1,211 | | 1,237 |
| வெளிநாட்டு விற்பனைகள் | | 2,304 | | 1,562 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

உட்பாய்ச்சல்களானது குறிப்பாக வெளிநாட்டு நேரடி முதலீட்டு வடிவிலான மூலதன உட்பாய்ச்சல்கள் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையுடனான வெளிநாட்டு முதலீடுகளின் தொடர்ச்சியான மிதப்படுத்தலினைப் பிரதிபலித்தது. மேலும், அதிகரித்துவரும் உலகளாவிய வட்டி வீதத்தின் பின்னணி மற்றும் ஐக்கிய அமெரிக்க பொருளாதாரத்தின் பலமான வளர்ச்சி உத்வேகத்தின் பின்னணியில் விசேடமாக ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையச் சந்தை வடிவில் 2016இல் இலங்கை குறிப்பிடத்தக்களவு மூலதன வெளிப்பாய்ச்சலை அனுபவித்தது.

**2016இல் நிதியியல் கணக்கிற்கான தொடர்ச்சியான மூலதன வெளிப்பாய்ச்சல்கள், உயர் படுகடன் மீள்கொடுப்பனவுகள் மற்றும் மிதமான உட்பாய்ச்சல்கள் ஆண்டுகாலப்பகுதியில் வெளிநாட்டு நிதியிடலினை அவசியப்படுத்தியது.** இதன்படி, ஐ.அ.டொலர்கள் 1.5 பில்லியன் பெறுமதியான நாட்டிற்கான பன்னாட்டு முறிகள், ஐ.அ.டொலர் 1.1 பில்லியனிற்கு வகைகூறுகின்ற பன்னாட்டு நாணய பரஸ்பர பரிமாற்றலின் முதிர்ச்சியினைத் தொடர்ந்து ஐ.அ.டொலர் 400 மில்லியனான புதியதொரு பன்னாட்டு நாணய பரஸ்பர பரிமாற்றல் ஒழுங்கு, மற்றும் ஐ.அ.டொலர் 700 மில்லியனிற்கு வகைகூறுகின்ற வெளிநாட்டு நாணய தவணை நிதியிடல் வசதிகளின் மூலம் நிதியியல் கணக்கானது ஆதரவளிக்கப்பட்டது. சென்மதிநிலுவை மற்றும் அரசின் சீர்திருத்த நிகழ்ச்சி நிரலினை ஆதரிக்கும் முகமாக இலங்கையானது பன்னாட்டு நாணய நிதியத்துடன் விரிவுபடுத்தப்பட்ட நிதிய வசதியொன்றிற்குள்ளும் நுழைந்தது. இதன் தொடர்ச்சியாக ஆண்டுகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 332 மில்லியன் பெறுமதியான விரிவுபடுத்தப்பட்ட நிதிய வசதியின் இரு தொகுதிகளை இலங்கை பெற்றுக்கொண்டது. இவ்வழிமுறைகளிற்கு மத்தியிலும் நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சலானது 2016இல் தொடர்ந்தும் மிதமாகக் காணப்பட்டது. ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்களில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அவர்களின் உடமைகளை விடுபடாது தொடர்ந்து வைத்திருந்தமையுடன் இத்தளம்பல்களுக்கு மத்தியில், இலங்கை மத்திய வங்கியினால் உள்நாட்டு வெளிநாட்டு செலாவணி சந்தைக்கு திரவத்தன்மை வழங்கப்பட்டதுடன் இணைந்து திட்டமிடப்பட்ட படுகடன் கடன்பாடுகளைத் தீர்த்தல் 2016இன் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை விளைவித்தது.

### 5.7.1 நேரடி முதலீடு

**2016இல் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் மிதமான மட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட்டது.** 2016இல் முதலீட்டுச் சபை கம்பனிகளிற்கான வெளிநாட்டுக் கடன்கள்

உள்ளடங்கலாக மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர்கள் 1,079 மில்லியனிற்கு வகைகூறிய அதேவேளை முதலீட்டுச் சபை கம்பனிகளின் வெளிநாட்டு கடன்பாடுகள் நீங்கலாக நேரடி முதலீடுகள் ஐ.அ.டொலர் 898 மில்லியனிற்கு வகைகூறியது. ஒப்பீட்டு ரீதியில் 2015இன் வெளிநாட்டுக் கடன்களுடன் மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 1,160 மில்லியனிற்கு வகைகூறிய அதேவேளை அவை வெளிநாட்டுக் கடன்கள் நீங்கலாக ஐ.அ.டொலர் 680 மில்லியனிற்கு வகைகூறின. தாழ்ந்த மட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்களானது இலங்கைப் பொருளாதாரத்தில் நீண்டகால பிரச்சினையாகக் காணப்பட்ட அதேவேளை 2016 காலப்பகுதியில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சலானது ஐக்கிய அமெரிக்க பெடரல் ரிசேர்வின் மூலமான வட்டிவீத உயர்வின் பின்னணியில் உலகப் பொருளாதாரத் தோற்றப்பாடு உருவாக்கத்தின் மூலம் பாதிக்கப்பட்டது. இதற்கு மேலாக, பிராந்திய சக நாடுகளுடன் ஒப்பிடுகையில் உற்பத்தியின் கூலி வீதம் மற்றும் ஏனைய கிரயங்களின் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பானது நாட்டிற்கான வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்வதில் பிரதிகூலங்களை ஏற்படுத்தியது. 2016இல் மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்களின் ஐ.அ.டொலர் 260 மில்லியன் பங்குரிமை வடிவிலும் ஐ.அ.டொலர் 450 மில்லியன் மீள்முதலீட்டு வருவாய்களாகவும் ஐ.அ.டொலர் 276 மில்லியன் பங்குதாரர்களின் முற்பணங்களாகவும் மற்றும் கம்பனிகளுக்கிடையிலான கடன்களாகவும் காணப்பட்ட அதேவேளை பங்குதாரர் முற்பணங்களுக்கான மீள்செலுத்தல்கள் மற்றும் கம்பனிகளுக்கிடையிலான படுகடன்கள் என்பன ஐ.அ.டொலர் 87 மில்லியனிற்கு வகைகூறின. ஆண்டுகாலப்பகுதியில் தொடர்பற்ற கடன்வழங்குனர்களிடமிருந்து முதலீட்டுச் சபைக் கம்பனிகள் ஐ.அ.டொலர் 181 மில்லியனான வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக் கொண்டன.

**2016இல் வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களானது பிரதானமாக சுற்றுலா, தொலைத் தொடர்பூட்டல் மற்றும் உற்பத்தி துறைகளுக்கு வழிப்படுத்தப்பட்டன.** முதலீட்டின் உடனடி நாடுகள் என்ற அடிப்படையில் சிறந்த ஐந்து நேரடி முதலீட்டு நாடுகளாக மலேசியா, இந்தியா, நெதர்லாந்து, சீனா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் என்பன விளங்கின. அதேவேளை, இலங்கை முதலீட்டாளர்களினால் வெளிநாட்டில் மேற்கொள்ளப்பட்ட நேரடி முதலீடுகளானது 2015இன் ஐ.அ.டொலர் 53 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இல் ஐ.அ.டொலர் 237 மில்லியனுக்கு அதிகரித்தது, வெளிநாட்டில் நேரடி முதலீடுகளின் இக்குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது பிரதானமாக வெளிநாடுகளில் இலங்கை ஆடைக் கைத்தொழிலினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் காரணமாக ஏற்பட்டது. இலங்கை கம்பனிகளினால் வெளிநாடுகளில், குறிப்பாக இந்தியா, வியட்னாம், பங்களாதேஷ், பிஜி மற்றும் மாலைதீவில் வெளிநாட்டு முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

## 5.7.2 சொத்துப் பட்டியல் முதலீடு

### பங்குரிமை மூலதனம்

**நேரடி முதலீடுகள் நீங்கலான கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல்களினால் பிரதிபலிக்கப்படுகின்ற பங்குரிமை மூலதனத்திலுள்ள வெளிநாட்டு முதலீடுகளானது 2016இல் குறைவாகவே காணப்பட்டது.** வளர்ந்துவரும் பொருளாதாரத்தின் முதலீட்டுச் சந்தைகளின் மீதான குறைந்தளவான முதலீட்டாளர் மனோபாவமானது 2016இல் ஐ.அ.டொலர் 24 மில்லியன் மிதமான தேறிய உட்பாய்ச்சல் ஒன்றை தோற்றுவித்ததுடன் நேரடி முதலீடுகள் போன்று பங்குரிமை மூலதன முதலீடுகளையும் தொடர்ச்சியாகப் பாதித்தது. 2016இல் கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான வெளிநாட்டு முதலீட்டின் தேறிய உட்பாய்ச்சலானது இரண்டாந்தர சந்தைக்கு ஐ.அ.டொலர் 10 மில்லியன் தேறிய உட்பாய்ச்சல் ஒன்றையும் முதலாந்தரச் சந்தைக்கு ஐ.அ.டொலர் 14 மில்லியன் உட்பாய்ச்சல் ஒன்றையும் கொண்டிருந்தது. இது 2015இல் ஐ.அ.டொலர் 60 மில்லியன் தேறிய வெளிப்பாய்ச்சலொன்றை பதிவுசெய்த அதேவேளை கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளில் மிதமான வெளிநாட்டு முதலீடுகளின் முன்னைய ஆண்டுகளிலிருந்தான ஒரு தொடர்ச்சியாக காணப்படுகின்றது.

### படுகடன் பிணையங்கள்

**நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வெளியிடுவதனூடாக இலங்கை பன்னாட்டுச் சந்தைகளில் தொடர்ச்சியாக நுழைந்தது.** 2016 யூலை மாதத்தில் இலங்கை 10 ஆண்டுகளில் முதிர்ச்சியடையக்கூடிய ஐ.அ.டொலர் ஒரு பில்லியன் மற்றும் ஐந்தரை ஆண்டுகளில் முதிர்ச்சியடையக்கூடிய 500 மில்லியன் என்பற்றை உள்ளடக்கிய ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் பெறுமதியான இரட்டைத்தொகுதியுடைய நாட்டிற்கான பன்னாட்டு முறியொன்றை வெற்றிகரமாக வெளியிட்டது. இது இலங்கையின் 10வது நாட்டிற்கான பன்னாட்டு முறியாக காணப்பட்டதுடன் சர்வதேச சந்தையில் நாட்டிற்கான முதலாவது இரட்டைத் தொகுதி வழங்குகையாகக் காணப்பட்டது. ஒரு சவாலான உலகப் பொருளாதார சூழல் இருந்தபோதிலும் இலங்கையின்

5

நடுத்தரகால தோற்றப்பாட்டில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கையினைத் தொடர்ச்சியாக பிரதிபலிக்கும் வகையில் இரண்டு தொகுதிகளுமே முதனிலை விலை வழிகாட்டியின் குறைந்த விலை குறிக்கப்பட்டன. எவ்வாறாயினும் 2016இல் திறைசேரி முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளின் மீதான வெளிநாட்டு முதலீடுகள் தொடர்ச்சியாக வெளிப்பாய்ச்சலொன்றை பதிவுசெய்தன. அதன் விளைவாக, 2016இல் திறைசேரி முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளிலிருந்தான தேறிய வெளிப்பாய்ச்சல்கள் முறையே ஐ.அ.டொலர் 361 மில்லியன் மற்றும் 207 மில்லியனாகக் காணப்பட்டன. அதேவேளை, 2016இல் திறைசேரி உண்டியல்கள் மீதான வெளிநாட்டு முதலீடுகள் ஐ.அ.டொலர் 36 மில்லியன் மிதமான தேறிய உட்பாய்ச்சலொன்றிற்கு வகைகூறின. மேலும், 2015இன் ஐ.அ.டொலர் 903 மில்லியன் தேறிய வெளிப்பாய்ச்சலொன்றுடன் ஒப்பிடுகையில் 2016இல் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் நீங்கலான அரச பிணையங்கள் ஐ.அ.டொலர் 531 மில்லியன் தேறிய வெளிப்பாய்ச்சலொன்றை திரண்ட அடிப்படையில் பதிவுசெய்தன.

### 5.7.3 ஏனைய முதலீடு

#### நாணயம் மற்றும் வைப்புக்கள்



**நாணயம் மற்றும் வைப்புக்களிலான பொறுப்புக்களின் தேறிய நிகழத்தக்க பொறுப்புக்களின் கணிசமான ஓர் வீழ்ச்சியை பதிவுசெய்த அதே வேளையில் நாணயம் மற்றும் வைப்புக்களிலான சொத்துக்களின் தேறிய கையேற்பு 2016இல் சிறிதளவால் அதிகரித்தது.** முக்கியமாக 2016 யூனில ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 700 மில்லியன் அளவிலான பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் வசதியின் தீர்ப்பனவின் விளைவாக நாணயம் மற்றும் வைப்புக்கள் தொடர்பான பொறுப்புக்கள் வீழ்ச்சியடைந்தன, ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 400 மில்லியன் கொண்ட பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் வசதியின் எஞ்சிய பகுதி 2016 திசெம்பரில் முதிர்ச்சியடைந்த போதிலும் இதேயளவான புதியதொரு வசதி அதே மாதத்தில் பெறப்பட்டது. இதற்கிடையில், வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களால் வைத்திருக்கப்படும் நாணயம் மற்றும் வைப்புப் பொறுப்புக்கள் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 92 மில்லியனால் 2016இல் அதிகரித்தது. இதன் விளைவாக, நாணயம் மற்றும் வைப்புக்களிலான பொறுப்புக்களின் மொத்த தேறிய நிகழத்தக்கப் பொறுப்புக்களால் 2015இல் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 1,457 மில்லியன் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2016இல் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 609 மில்லியனால் வீழ்ச்சியடைந்தது. மேலும், வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் நாணயம் மற்றும் வைப்புக்களிலான சொத்துக்களின் தேறிய கையேற்பு தொடர்பிலான நடவடிக்கைகள் 2015இல் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 143 மில்லியன் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2016 இல் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 5 மில்லியனால் அதிகரித்தது.

**அட்டவணை 5.8 ஆ**
**நிதியியல் கணக்கு**
**(பீ.பி.எம்.6 வெளிப்படுத்துகை வடிவமைப்பு)**

ஐ.அ.டொ.மில்லியன்

| வகை | 2015 (அ) | | 2016 (ஆ) | |
|---|---|---|---|---|
| | நிதியியல் சொத்துக்களில் தேறிய கைப் படுத்துகை | பொறுப்புக்களின் தேறிய உறப்படல் | நிதியியல் சொத்துக் களில் தேறிய கைப் படுத்துகை | பொறுப்புக்களின் தேறிய உறப்படல் |
| ஏனைய முதலீடு (பக்கம் 186 இலிருந்து தொடர்கிறது) | | | | |
| கடன்கள் | - | 759 | - | 753 |
| மத்திய வங்கி | - | -507 | - | -123 |
| ப.நா.நி. உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | - | -507 | - | -123 |
| விரிவாக்கப்பட்ட நிதிய வசதி | - | -507 | - | -455 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | - | - | - | 332 |
| குறுங்காலம் | - | 787 | - | -507 |
| நீண்ட காலம் | - | 657 | - | -608 |
| அரசாங்கம் | - | 131 | - | 100 |
| நீண்ட காலம் | - | 470 | - | 1,287 |
| ஏனைய துறைகள் (இ) | - | 470 | - | 1,287 |
| நீண்ட காலம் | - | 9 | - | 96 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | - | 9 | - | 96 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 116 | -401 | -67 | 109 |
| குறுங்காலம் | -30 | - | -3 | - |
| ஏனைய துறைகள் (ஈ) | -30 | - | -3 | - |
| குறுங்காலம் | 146 | -401 | -64 | 109 |
| பெறவேண்டிய/செலுத்தவேண்டிய ஏனைய கணக்குகள் | 146 | -401 | -64 | 109 |
| மத்திய வங்கி | 244 | 41 | 379 | 55 |
| குறுங்காலம் (உ) | - | 41 | - | 55 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | - | 41 | - | 55 |
| குறுங்காலம் | 244 | - | 379 | - |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 244 | - | 379 | - |
| **ஒதுக்குச் சொத்துக்கள்** | **354** | | **-472** | |
| நாணய தங்கம் | -39 | | - | |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | -2 | | -5 | |
| பா.நா. நிதியத்தில் ஒதுக்கு நிலைமை | - | | - | |
| ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள் | 395 | | -467 | |
| நாணயமும் வைப்புக்களும் | 116 | | -1,267 | |
| நாணய அதிகார சபைகள் மீதான பெறுகைகள் | 369 | | -1,365 | |
| ஏனைய நிறுவனங்கள் மீதான பெறுகைகள் | -253 | | 98 | |
| பிணையங்கள் | 279 | | 800 | |
| படுகடன் பிணையங்கள் | 279 | | 800 | |
| நீண்ட காலம் | 279 | | 800 | |
| **நிதியியல் கணக்கு (தேறிய)** | **-2,312** | | **-2,117** | |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | | | |
| **அரசாங்கத்திற்கான நீண்டகால கடன்கள் (தேறிய)** | | 470 | | 1,287 |
| உட்பாய்ச்சல்கள் (பகிர்ந்தளிப்புக்கள்) | | 1,268 | | 2,163 |
| செயற்திட்டக்கடன்கள் | | 1,268 | | 1,278 |
| வெளிநாட்டு நாணய நியதிகளில் நிதியிடல் வசதிகள் | | - | | 700 |
| நிகழ்ச்சித்திட்ட நிதியிடல் கடன்கள் | | - | | 185 |
| மீள்கொடுப்பனவுகள் | | 798 | | 876 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் மற்றும் தனியார்துறை கம்பனிகளை உள்ளடக்குகின்றது.
(ஈ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக கொடுகடன்களை உள்ளடக்குகின்றது.
(உ) ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் தேறிய கொடுக்கல்வாங்கல்கள்

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## கடன்கள்

**கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016இல் தேறிய கடன் உட்பாய்ச்சல்கள் தொடா்ந்து ஏறத்தாழ ஒரே அளவில் காணப்பட்டது.** ஆண்டுப்பகுதியில் அரசிற்கான கணிசமான வெளிநாட்டு கடன் உட்பாய்ச்சலகள் காணப்பட்டபோதும், இது பிரதானமாக, மத்திய வங்கி, வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளினால் மீள்செலுத்தப்பட்ட கடன் பொறுப்புக்களின் அதிகரித்த மீள்செலுத்தல்களினாலாகும். இதன் விளைவாக, வெளிநாட்டுக் கடன்களிலிருந்தான தேறிய கடன் உட்பாய்ச்சல்கள் 2015 இல் ஐ.அ. டொலர்கள் 759 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இல் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 753 மில்லியனாகவிருந்தன.

**வெளிநாட்டுக் கடன்களிலான அரசாங்கத்திற்கான தேறிய உட்பாய்ச்சல்கள் 2016இல் ஓர் கணிசமான அதிகரிப்பை பதிவுசெய்தன.** இதற்கேற்ப, அரசாங்கித்திற்கான தேறிய உட்பாய்ச்சல் 2015 இல் ஐ.அ. டொலர்கள் 470 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இல் ஐ.அ. டொலர்கள் 1,287 மில்லியனாக காணப்பட்டது. இது ஆண்டுப்பகுதியில் ஐ.அ. டொலர்கள் 2,163 கொண்ட மொத்த நீண்ட கால கடன் உட்பாய்ச்சல்கள் மற்றும் ஐ.அ. டொலர்கள் 876 மில்லியன் கொண்ட மீள்செலுத்தல்ககளை உள்ளடக்கியது. மொத்த கடன் உட்பாய்ச்சல்களில், ஐ.அ. டொலர்கள் 1,278 மில்லியன் செயற்றிட்டக் கடன்களாகவும், ஐ.அ. டொலர்கள் 700 மில்லியன் இரு வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகளிலிருந்தும், ஐ.அ. டொலர்கள் 185 மில்லியன் நிகழ்ச்சித்திட்ட நிதியிடலாகவும் காணப்பட்டன. தெற்கு விரைவுப்பாதையின் பகுதி 1 மற்றும் 2 இன் நீட்டிப்பின் கட்டுமானம், ஒன்றிணைக்கப்பட்ட பாதை முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - தொகுதி 2, அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திச் செயற்றிட்டம் மற்றும் பெருநகர் கொழும்பு நகர அபிவிருத்திச் செயற்றிட்டம் ஆகியவைக்கு பெறப்பட்ட கடன்கள் 2016இல் அரசிற்கான முக்கிய செயற்றிட்டக் கடன் உட்பாய்ச்சல்களில் உள்ளடக்கப்பட்டன. அபிவிருத்திக் கொள்கைக் கடனாக யப்பானிய அரசாங்கத்திடமிருந்து ஐ.அ. டொலர்கள் 85 மில்லியனும் போட்டித்தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டிற்கான அபிவிருத்திக் கொள்கை நிதியிடலுக்கு உலக வங்கியின் பன்னாட்டு அபிவிருத்தி கழகத்திலிருந்து ஐ.அ. டொலர்கள் 100 மில்லியனும் நிகழ்ச்சித்திட்ட நிதியிடல் முறையிலான இரு கடன்களாகும். இந்நிகழ்ச்சித்திட்ட நிதியிடல் வசதிகள் உள்நாட்டிலுள்ள நடைமுறைபடுத்தும் முகவா்களால் கொள்கை நடடிவடிக்கைகளின் சட்டவாக்கத்தை நிபந்தனையாகக்கொண்டவை.

அட்டவணை 5.9

**2016இல் வெளிநாட்டுக் கடன்பாடுகளுடன் நிதியிடப்பட்ட பிரதான செயற்றிட்டங்கள்**

| கடன் வழங்குநரும் செயற்றிட்டமும் | வழங்கப்பட்ட தொகை ஐ.அ.டொலர்கள் மில்லியன் |
|---|---|
| அரசாங்க திட்டங்கள் - மொத்தம் | 1,278 |
| இதில்; | |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 337 |
| இதில்; | |
| இணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - பகுதி 2 | 64 |
| தூய வலு மற்றும் வலயமைப்பு செயற்திறன் முன்னேற்ற செயற்திட்டம் | 31 |
| இணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் | 31 |
| இணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - பகுதி 3 | 23 |
| உள்நாட்டு அரசாங்க உயா்துறை செயற்றிட்டம் | 17 |
| நீடிக்கப்பட்ட வலுத்துறை துணைச் செயற்றிட்டம் | 14 |
| சீன ஏற்றுமதி - இறக்குமதி வங்கி | 320 |
| இதில்; | |
| தெற்கு அதிவேக நெடுஞ்சாலை செயற்றிட்டத்தின் விரிவாக்க கட்டுமானம் - பகுதி 1 மாத்தறையிலிருந்து பெலியத்தை வரை | 97 |
| தெற்கு அதிவேக நெடுஞ்சாலை செயற்றிட்டத்தின் விரிவாக்க கட்டுமானம் - பகுதி 2 பெலியத்தையிலிருந்து வெட்டிய வரை | 49 |
| அம்பாந்தோட்டை மைய அபிவிருத்திச் செயற்றிட்டம் | 48 |
| வெளிச்சுற்று நெடுஞ்சாலை செயற்றிட்டத்தின் கட்டுமானம் - கட்டம் III கெரவலப்பிட்டியவிலிருந்து கடவத்தை வரை | 48 |
| தெற்கு அதிவேக நெடுஞ்சாலை செயற்றிட்டத்தின் விரிவாக்க கட்டுமானம் - பகுதி 4 மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை வரை | 24 |
| பன்னாட்டு அபிவிருத்தி சம்மேளனம் | 136 |
| இதில்; | |
| அணைக்கட்டு பாதுகாப்புக்கான மேலதிக நிதியிடல் செயற்றிட்டம் | 24 |
| இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் | 21 |
| வடகிழக்கு உள்ளக சேவை மேம்பாட்டிற்காக மேலதிக நிதியிடல் செயற்றிட்டம் | 20 |
| வானிலை மீளெழுச்சி மேம்படுத்தல் முகாமைத்துவம் | 17 |
| மீள் கட்டுமானம் மற்றும் அபிவிருத்திக்கான பன்னாட்டு வங்கி | 114 |
| கொழும்பு பெரும்பாக நகர அபிவிருத்திச் செயற்றிட்டம் | 102 |
| அனா்த்த இடா் முகாமைத்துவ அபிவிருத்தி செயற்றிட்டக் கடன் | 12 |
| ஜப்பானிய அரசாங்கம் | 67 |
| இதில்; | |
| தேசிய வீதி வலையமைப்பிற்கான முக்கிய பாலக் கட்டுமான செயற்றிட்டம் | 15 |
| பெரும்பாக கொழும்பு ஊடுகடுத்தல் மற்றும் பரப்பல் இழப்பீடு குறைத்தல் நிகழ்ச்சித்திட்டம் | 13 |
| கோப் சென்றலே ரைபீசின் - போறன்லீன் பாங்க் | 48 |
| 463 கிராமிய பால கட்டுமான செயற்றிட்டம் | 48 |
| இந்திய அரசாங்கம் | 44 |
| இதில்; | |
| இரண்டு உயா்ந்த வெளிநாட்டு காவல் குழாய்களை பெறுதல் | 40 |
| டொயிஷ் பாங்க் ஏஜி | 36 |
| 537 இரும்புகோல் பாலத்தின் கட்டுமான செயற்றிட்டம் | 36 |
| வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதி | 23 |
| இதில்; | |
| தேசிய வேளாண்மை வா்த்தக அபிவிருத்திச் செயற்றிட்டம் | 13 |
| ஸ்பெயின் இராச்சியம் | |
| கனேமுல்ல, பொல்காவல மற்றும் இராயகிரியவிற்கான மூன்று மேம்பாலங்கள் வளங்கள் | 22 |
| அரசிற்கு சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சி - மொத்தம் | 22 |
| அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி செயற்றிட்டம் - கட்டம் II | 21 |

மூலம்: தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் வெளித்துறை மூலங்களிற்கான திணைக்களம்

**பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை 2016 யூனில் விசேட எடுப்பனவு உரிமைகள் 1.1 பில்லியன் அண்ணளவாக ஐ.அ.டொலா் 1.5 பில்லியன் கொண்ட மூன்றாண்டு காலத்திற்கான விரிவாக்கப்பட்ட நிதிய வசதியை அங்கீகரித்தது.**

பன்னாட்டு நாணய நிதியத்துடனான நாட்டின் நடைமுறை பங்கில் 185 சதவீதத்திற்கு சமானமான விரிவாக்கப்பட்ட நிதிய வசதியானது, சென்மதி நிலுவைக்கும் அரசாங்கத்தின் சீர்திருத்தச் செயற்றிட்டத்திற்கும் ஆதரவளிப்பதனை இலக்காகக் கொண்டுள்ளது. சிறப்பு எடுப்பனவு உரிமைகள் 120 மில்லியனளவான (ஏறத்தாழ ஐ.அ. டொலர்கள் 169 மில்லியன்) விரிவாக்கப்பட்ட நிதிய வசதியிற்கு கீழான முதலாவது தொகுதி இலங்கைக்கு 2016 யூனில் வழங்கப்பட்டதுடன், பன்னாட்டு நாணய நிதியத்தின் முதலாவது மீளாய்வின் வெற்றிகரமான நிறைவை முன்னிட்டு ஏழத்தாழ இதே அளவானது 2016 நவம்பரில் இரண்டாவது தொகுதியாக வழங்கப்பட்டது. மேலும், ஐ.அ.டொலர்கள் 455 மில்லியன் அளவிலான மொத்த மீளச்செலுத்தல்கள் 2009இல் பெறப்பட்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் துணை நில் ஒழுங்கு வசதிக்கு மத்திய வங்கி தொடர்ந்து மீளச்செலுத்தியது. பன்னாட்டு நாணய நிதியத்தின் துணை நில் ஒழுங்கு வசதிக்கு கீழான மீளச்செலுத்தல்கள் 2017 நடுப்பகுதியில் நிறைவடைகின்றன.

**வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் பெற்றுக்கொண்ட வெளிநாட்டுக் கடன்கள் ஓர் தேறிய மீள்செலுத்தலை பதிவுசெய்த அதே வேளையில் 2016 இல் தனியார் கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளின் வெளிநாட்டுக் கடன்கள் தேறிய உட்பாய்ச்சலை பதிவுசெய்தன.** உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளை உள்ளடக்கிய வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களுக்கான தேறிய வெளிநாட்டு கடன் உட்பாய்ச்சல்கள், 2015 இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ. டொலர்கள் 787 மில்லியன் தேறிய உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் ஐ.அ. டொலர்கள் 507 மில்லியன் தேறிய மீளச்செலுத்தலை பதிவுசெய்தன. சென்ற ஆண்டுகளில் காணப்பட்ட வங்கித்தொழில் துறையின் வியாபார நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து பெறப்பட்ட வெளிநாட்டு நிதியிடலுடன் ஒப்பிடுகையில் இதுவொரு கடும் புறமாற்றலாகக் காணப்பட்டது. மேலும், சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கின் ஏனையவை என்ற துறையிக்கு கீழ் வகைபடுத்தப்பட்ட தனியார் கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகள் ஐ.அ. டொலர்கள் 96 மில்லியன் பெறுமதியான வெளிநாட்டுக் கடன்களின் தேறிய உட்பாய்ச்சலை பதிவுசெய்தன. ஏனைய துறைகளுக்கான வெளிநாட்டு கடன் உட்பாய்ச்சல்களானது தனியார் கூட்டுறவுகளுக்கான ஐ.அ. டொலர்கள் 637 மில்லியன் கடன் உட்பாய்ச்சல்கள் மற்றும் 2016இல் அரசுக்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளுக்கான ஐ.அ.டொலர்கள் 21 மில்லியன்களை உள்ளடக்குகின்றது. இதேவேளையில், நடைமுறையிலிருந்த வெளிநாட்டுக் கடன்களின் மீளச்செலுத்தல்களாக, தனியார் கூட்டுத்தாபனங்கள் ஐ.அ. டொலர்கள் 362 மில்லியனும் அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகள் ஐ.அ. டொலர்கள் 200 மில்லியனுமாக காணப்பட்டன. அரசிற்குச் சொந்தமான வர்த்தக தொழில்முயற்சிகளால் மேற்கொள்ளப்பட்ட படுகடன் மீளச்சசெலுத்தல்களில் பெரும்பான்மையானவை புத்தளம் நிலக்கரி பொறி, மாத்தளை பன்னாட்டு வானூர்தி நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகச் செயற்றிட்டம் மற்றும் சிறீலங்கன் எயர்லைன்ஸ் ஆகியவையின் கடன்கள் தொடர்பானவை.

## வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் மற்றும் பெறத்தக்க மற்றும் கொடுக்கத்தக்க ஏனைய கணக்குகள்

**வதிவோனால் பெறப்பட்ட வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் அதிகரித்த வேளையில் வதிவற்றோரிற்கு வழங்கப்பட்ட வார்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் 2016 ஆண்டுப் பகுதியில் வீழ்ச்சியடைந்தன.** பெறப்பட்ட வர்த்தக கொடுகடன் 2015 இல் காண்ப்பட்ட ஐ.அ.டொலர்கள் 401 வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016 இல் ஐ.அ.டொலர்கள் 109 மில்லியனால் அதிகரித்தது. ஆண்டுப்பகுதியில், வர்த்தக கொடுகடன் மூலம் தேறிய நிகழத்தக்க பொறுப்புக்கள் என்பன இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்ட ஐ.அ.டொலர்கள் 95 மில்லியன் மற்றும் தனியார் கூட்டுத்தாபன்ங்களாலா் பெறப்பட்ட ஐ.அ.டொலர்கள் 14 மில்லியனை உள்ளடக்குகின்றன. அதே வேளையில், இலங்கை ஏற்றுமதியாளர்கள் தங்களுடைய வார்த்தக பங்காளர்களுக்கு வழங்கியதும் வங்கித்தொழில் துறையினால் வழங்கப்பட்ட வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்களின் தேறிய கையேற்பு 2016 இல் ஐ.அ.டொலர்கள் 67 மில்லியனால் வீழ்ச்சியடைந்தது. இது, தனியார் கூட்டுத்தாபனங்கள் மற்றும் வங்கித்தொழில் துறையினால் வழங்கப்பட்ட 2016இல் முறையே ஐ.அ. டொலர்கள் 64 மில்லியன் மற்றும் ஐ.அ. டொலர்கள் 3 மில்லியன் அளவிலான வர்த்தக கொடுகடனின் வீழ்ச்சியை உள்ளடக்கியது. மேலும், மத்திய வங்கியினால் முகாமைத்துவம் செய்யப்படும் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்துடனான பொறுப்புக்களை பிரதானமாகக் கொண்ட கொடுபடத்தக்க ஏனைய கணக்குகள் ஐ.அ.டொலர் 55 மில்லியன் தேறிய அதிகரிப்பினை பதிவுசெய்தவேளையில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் பெறத்தக்க ஏனைய கணக்குகள் ஐ.அ.டொலர் 379 மில்லியன் தேறிய அதிகரிப்பினை 2016இல் பதிவுசெய்தன.

### 5.7.4 ஒதுக்குச் சொத்துக்கள்

**ஆண்டுப்பகுதியில் ஒதுக்குச் சொத்துக்களின் இருப்பின் வீழ்ச்சிக்கேற்ப ஒதுக்குச் சொத்துக்கள் மீதான கொடுக்கல்வாங்கல்கள் 2016 ஆண்டுப்பகுதியில் ஓர் வீழ்ச்சியை பதிவுசெய்தன.** தேறிய அடிப்படையில் 2015 இல் ஒதுக்கு கொடுக்கல்வாங்கல்கள் ஐ.அ.டொலர் 354 மில்லியன் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2016 இல் ஐ.அ.டொலர் 472 மில்லியனால் வீழ்ச்சியடைந்தது. இத்துடன், ஆண்டுப்பகுதியில் நாணயம் மற்றும் வைப்புக்களின் ஐ.அ.டொலர் 1,267 மில்லியனினாலான வீழ்ச்சி, சிறப்பு எடுப்பனவு உரிமைகளில் ஐ.அ.டொலர் 5 மில்லியனினாலான வீழ்ச்சி மற்றும் ஐ.அ.டொலர் 800 மில்லியனினாலான படுகடன் பிணையங்களின் அதிகரிப்பு என்பவை ஒதுக்கு நடவடிக்கைகளில் உள்ளடக்கப்பட்டன.

## 5.8 திரண்ட நிலுவை

**மீளாய்வுசெய்யப்படும் காலப்பகுதியில் தேறிய பன்னாட்டு ஒதுக்குகளின் மாற்றத்தை பிரதிபலிக்கும் வகையில் சென்மதி நிலுவையின் திரண்ட மீதி 2016இல் பற்றாக்குறையை பதிவுசெய்தது.** 2015 இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,489 மில்லியன் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2016இல் ஐ.அ.டொலர் 500 மில்லியன் பற்றாக்குறையை திரண்ட நிலுவை பதிவுசெய்தது. ஆகையால், ஆண்டுப்பகுதியில் ஒதுக்குச் சொத்து நிலைமை மற்றும் ஒதுக்கு தொடர்பான பொறுப்பு நிலைமையும் வீழ்ச்சியடைந்ததுடன், 2015 இறுதியில் ஐ.அ.டொலர் 5,029 மில்லியனிலிருந்து 2016 இறுதியில் ஐ.அ.டொலர் 4,529 மில்லியனுக்கு தேறிய பன்னாட்டு ஒதுக்குகளும் வீழ்ச்சியடைந்தன. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் குறைவடைவு தொடர்பான தொடர்ந்த அழுத்தத்தை திரண்ட நிலுவையிலுள்ள பற்றாக்குறை பிரதிபலித்ததுடன், இதற்கு விரிவடைந்து செல்லும் நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை, வெளிநாட்டுச் செலாவணிப் படுகடன் கொடுப்பனவுகள் மற்றும் 2016 இல் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் கணிசமான தலையீடு என்பவை பங்களித்தன.

## 5.9 பன்னாட்டு முதலீட்டு நிலைமை

**நாட்டின் பன்னாட்டு முதலீட்டு நிலைமையை கருத்திற்கொள்ளும்போது, 2016 இறுதியில் வெளிநாட்டு பொறுப்பு நிலைமை அதிகரித்த வேளையில் வெளிநாட்டுச் சொத்து நிலைமை வீழ்ச்சியடைந்தது.** நேரடி முதலீட்டு நிலைமை மற்றும் பெறத்தக்க ஏனைய கணக்குகளின் நிலைமை அதிகரித்தபோதிலும், ஒதுக்குச் சொத்து நிலைமையின் வீழ்ச்சியினால் மொத்த வெளிநாட்டுச் சொத்து நிலைமை ஐ.அ.டொலர் 10,086 மில்லியனாக வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 5.10
**பன்னாட்டு முதலீட்டு நிலைமை**

ஐ.அ.டொ.மில்லியன்
(கால முடிவிலான நிலைமை)

| வகை | 2015 (அ) | | 2016 (ஆ) | |
|---|---|---|---|---|
| | சொத்துக்கள் | பொறுப்புக்கள் | சொத்துக்கள் | பொறுப்புக்கள் |
| **நேரடி முதலீடு (இ)** | **817** | **10,022** | **1,136** | **9,745** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதிப் பங்குகள் | 814 | 7,408 | 1,131 | 6,943 |
| படுகடன் கருவிகள் | 3 | 2,613 | 5 | 2,802 |
| **சொத்துப்பட்டியல் முதலீடுகள்** | **0.1** | **12,331** | **0.1** | **13,772** |
| மூலதனம் மற்றும் முதலீட்டு நிதிப் பங்குகள் | | 1,492 | | 1,507 |
| ஏனைய துறைகள் | | 1,492 | | 1,507 |
| படுகடன் பிணையங்கள் (ஈ) | 0.1 | 10,839 | 0.1 | 12,265 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 0.1 | 2,140 | 0.1 | 2,190 |
| நீண்ட காலம் | 0.1 | 2,140 | 0.1 | 2,190 |
| அரசாங்கம் | | 8,534 | | 9,903 |
| குறுங்காலம் | | 33 | | 80 |
| நீண்ட காலம் | | 8,501 | | 9,823 |
| ஏனைய துறைகள் | | 164 | | 172 |
| நீண்ட காலம் | | 164 | | 172 |
| **நிதியியல் பெறுதிகள்** | - | - | - | - |
| **ஏனைய முதலீடு** | **2,614** | **31,387** | **2,931** | **31,519** |
| **நாணயமும் வைப்புக்களும்** | **701** | **3,051** | **706** | **2,442** |
| மத்திய வங்கி | | 1,105 | | 403 |
| குறுங்காலம் | | 5 | | 3 |
| நீண்ட காலம் | | 1,100 | | 400 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 701 | 1,946 | 706 | 2,039 |
| குறுங்காலம் | 539 | 1,946 | 535 | 2,039 |
| நீண்ட காலம் | 162 | | 171 | |
| **கடன்கள்** | | 25,936 | | 26,530 |
| மத்திய வங்கி | | 692 | | 554 |
| ப.நா.நி. உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | | 692 | | 554 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | | 5,070 | | 4,562 |
| குறுங்காலம் | | 3,816 | | 3,209 |
| நீண்ட காலம் | | 1,253 | | 1,354 |
| அரசாங்கம் | | 16,147 | | 17,295 |
| நீண்ட காலம் | | 16,147 | | 17,295 |
| ஏனைய துறைகள் (உ) | | 4,028 | | 4,119 |
| நீண்ட காலம் | | 4,028 | | 4,119 |
| **வர்த்தக கொடுகடன்கள் மற்றும் முற்பணங்கள்** | **677** | **1,375** | **610** | **1,483** |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 96 | | 93 | |
| குறுங்காலம் | 96 | | 93 | |
| ஏனைய துறைகள் (ஊ) | 581 | 1,375 | 517 | 1,483 |
| குறுங்காலம் | 581 | 1,375 | 517 | 1,483 |
| **பெறவேண்டிய/செலுத்தவேண்டிய ஏனைய கணக்குகள்** | **1,236** | **478** | **1,615** | **533** |
| மத்திய வங்கி (எ) | | 478 | | 533 |
| குறுங்காலம் | | 478 | | 533 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 1,236 | | 1,615 | |
| குறுங்காலம் | 1,236 | | 1,615 | |
| **சிறப்பு எடுப்பனவு உரிமைகள்** | | **548** | | **532** |
| **ஒதுக்குச் சொத்துக்கள்** | **7,304** | | **6,019** | |
| நாணய தங்கம் | 760 | | 830 | |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 7 | | 2 | |
| ப.நா.நி. இல் ஒதுக்கு நிலைமை | 66 | | 64 | |
| ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள் | 6,470 | | 5,122 | |
| நாணயமும் வைப்புக்களும் | 3,911 | | 2,644 | |
| நாணய அதிகார சபைகள் மீதான பெறுகைகள் | 2,167 | | 802 | |
| ஏனைய நிறுவனங்கள் மீதான பெறுகைகள் | 1,745 | | 1,842 | |
| பிணையங்கள் | 2,559 | | 2,478 | |
| படுகடன் பிணையங்கள் | 2,559 | | 2,478 | |
| **மொத்த சொத்துக்கள்/பொறுப்புக்கள்** | **10,734** | **53,740** | **10,086** | **55,036** |
| **தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமை** | | **-43,006** | | **-44,949** |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | | | |
| பமுறி-முதிர்ச்சி அடிப்படையிலான பகுப்பாய்வு | 10,734 | 53,740 | 10,086 | 55,036 |
| குறுங்காலம் | 7,190 | 9,146 | 6,299 | 8,853 |
| நீண்ட காலம் | 3,544 | 44,595 | 3,788 | 46,182 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) முதலீட்டு சபை, கொழும்புப் பங்கு பரிவர்த்தனை மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளின் நேரடி முதலீட்டு நிலைமைகளினை உள்ளடக்குகின்றது.
(ஈ) உள்நாட்டு நாணய வெளியீடுகள் புத்தகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்ட அதேவேளை வெளிநாட்டு நாணய படுகடன் வெளியீடுகள் சந்தைப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டுள்ளன.
(உ) அரசிற்கு சொந்தமான வியாபார நிறுவனங்களால் பெறப்பட்ட செயற்திட்ட கடன்களின் வெளிநின்ற நிலைகளை உள்ளடக்குகின்றது.
(ஊ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை கம்பனிகள் என்பவற்றின் வெளிநின்ற வர்த்தக கொடுகடன் நிலைமையை உள்ளடக்குகின்றது.
(எ) மத்திய வங்கியினால் முகாமைத்துவம் செய்யப்படும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் வெளிநின்ற நிலமை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

இதேவேளையில், 2016 இறுதியில் மொத்த பொறுப்பு நிலைமை ஐ.அ.டொலர் 55,036 மில்லியனாக அதிகரித்து, 2015 இறுதியிலான மொத்த பொறுப்பு நிலைமையிலிருந்து ஐ.அ.டொலர் 1,295 மில்லியன் அதிகரிப்பைக் காட்டியது. அரசாங்கத்தினாலான நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் புதிய வழங்கல்கள், அரசாங்கத்திற்கான வெளிநாட்டுக் கடன்களின் உட்பாய்ச்சல்கள், வதிவுள்ளோரினால் பெறப்பட்ட அதிகரித்த வர்த்தக கொடுகடன்கள் மற்றும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்துடனான மத்திய வங்கியின் பொறுப்புக்களின் மிதமான அதிகரிப்பு ஆகியவை வெளிநின்ற பொறுப்பு நிலைமை அதிகரித்ததற்கான முக்கிய காரணிகளாகும். இதேவேளையில், நேரடி முதலீடுகளின் வெளிநின்ற பொறுப்பு நிலைமை, மத்திய வங்கியின் நாணயம் மற்றும் வைப்புக்கள், ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் மற்றும் மத்திய வங்கியின் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்கள் ஆண்டுக்காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. வெளிநாட்டுச் சொத்து நிலைமையில் வீழ்ச்சியையும் வெளிநாட்டு பொறுக்களின் நிலைமையில் அதிகரிப்பையும் பிரதிபலிக்கும் வகையில் பன்னாட்டு முதலீட்டு நிலைமையின் தேறிய பொறுப்புக்களின் நிலைமை 2015 இறுதியில் ஐ.அ.டொலர் 43,006 மில்லியனிலிருந்து 2016 இறுதியில் ஐ.அ.டொலர் 44,949 மில்லியனுக்கு அதிகரித்தது. நிதியியல் கணக்கிற்கு நேரடி முதலீடுகள் மற்றம் ஏனைய கடனை ஏற்படுத்தாத உட்பாய்ச்சல்களாக ஒப்பீட்டளவாக குறைந்த உட்பாய்ச்சல்களின் பின்னணியில் நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையை நிதியிடுவதற்கு தொடர்ச்சியாக வெளிநாட்டு நிதியிடல் மீது தங்கியருந்தமையை பிரதிபலிக்கும் வகையில் இலங்கையின் தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமை தொடர்ச்சியாக மோசமடைந்தது.

5

## 5.9.1 நேரடி முதலீட்டு நிலைமை

**நேரடி முதலீட்டு பொறுப்புக்கள் நிலைமை 2016இல் வீழ்ச்சியடைந்த வேளையில் நேரடி முதலீட்டு சொத்து நிலைமை அதிகரித்தது.** வெளிநாட்டிலுள்ள இலங்கை கம்பனிகளினால் மூலதன மற்றும் முதலீட்டு நிதி பங்குகளிலாளான முதலீடுகளின் அதிகரிப்பை பிரதிபலிக்கும் வகையில், நேரடி முதலீட்டு சொத்து நிலைமை 2015 இறுதியில் ஐ.அ.டொலர் 817 மில்லியனிலிருந்து 2016 இறுதியில் ஐ.அ.டொலர் 1136 மில்லியனாக அதிகரித்தது. அதேவேளையில், 2016இல் சென்மதி நிலுவை நேரடி முதலீடுகளின் தேறிய உட்பாய்ச்சினை பதிவுசெய்தபோதிலும் நேரடி முதலீட்டு பொறுப்பு நிலைமை 2016 இறுதியில் ஐ.அ.டொலர் 9,745 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. 2016இல் பெருமளவான பகிரங்கமாக பட்டியலிடப்பட்ட கம்பனிகளால் உறப்பட்ட ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.2 பில்லியன் அளவான சந்தை விலை வீழ்ச்சியின் விளைவாக நேரடி முதலீட்டு மூலதன நிலைமையில் வீழ்ச்சி இதற்கு முக்கிய காரணமாகக் காணப்பட்டது. இந்த இழப்பு இலங்கையின் மொத்த நேரடி முதலீட்டு நிலையின் 10 சதவீதமானதுடன், அனைத்துப் பங்குச் சந்தைச் சுட்டெண்ணின் ஏறத்தாழ ஒரே அளவான சதவீத வீழ்ச்சியுடன் ஒத்துக்காணப்பட்டது. 2016 இறுதியில் நேரடி முதலீட்டுப் பொறுப்பு இருப்பு நிலைமையின் அடிப்படையில் முதல் ஐந்து மூலங்களாகக் காணப்பட்டது நெதர்லாந்து, இந்தியா, மலேசியா, சீனா மற்றும் சுவித்தர்லாந்து ஆகும். இருப்பினும், கடன் கருவிகளின் பொறுப்பு நிலைமை அதிகரித்து, நேரடி முதலீட்டாளர்களின் முற்பணங்களின் அதிகரிப்பை பிரதிபலித்தது.

## 5.9.2 சொத்துப்பட்டியல் முதலீட்டு நிலைமை

**இரு தொகுதி பன்னாட்டு நாட்டிற்கான முறியி வழங்கலிலிருந்து பெறப்பட்ட நிதிகளுடன் சொத்துப்பட்டியல் முதலீட்டு பொறுப்பு நிலைமை அதிகரித்தவேளயையில், பங்குரிமை உட்பாய்ச்சல்கள் 2016இல் தொடர்ந்து தணிந்து காணப்பட்டது.** வெளிநின்ற பங்குரிமை மற்றும் கடன் பிணையங்கள் உள்ளடக்கிய சொத்துப்பட்டியல் முதலீட்டு நிலைமையானது 2015 இறுதியிலிருந்த ஐ.அ.டொலர் 12,331 மில்லியனிலிருந்து 2016 இறுதியில் ஐ.அ.டொலர் 13,772 மில்லியனாகக் காணப்பட்டது. ஆண்டிறுதியில் சொத்துப்பட்டியில் முதலீட்டு பங்குரிமை நிலைமை ஐ.அ.டொலர் 1,507 மில்லியனுக்கு அதிகரித்தவேளையில் கடன் பிணையங்கள் நிலைமை ஐ.அ.டொலர் 12,265 மில்லியனுக்கு அதிகரித்தது. ஓர் நாட்டிற்கான பன்னாட்டு முறி வழங்கலினால் அரசின் வெளிநின்ற கடன் பிணையங்கள் அதிகரித்தது. எனினும், ஐக்கிய அமெரிக்காவில் வட்டி வீதங்கள் அதிகரிக்குமென்ற எதிர்பார்ப்பும், தொடர்ந்த அதிகரிப்பினால், வதிவற்றோரின் ரூபாவில் குறிப்பிடப்பட்ட அரச பிணையங்கள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளிலிருந்து கணிசமான வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல்கள் காணப்பட்டன. இதன் விளைவாக, 2016 இறுதியில் வதிவற்றோர் வசமுள்ள வெளிநின்ற அரச கடன் பிணையங்களின் அதிகரிப்பு மெதுவடைந்தது. இதே வேளையில், இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கியினால் வழங்கப்பட்ட பன்னாட்டு முறிகளின் சந்தை விலைகளிலுள்ள மாற்றங்களினால் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் கடன் பிணைய பொறுப்பு நிலைமை ஆண்டிறுதியில் ஓர் சிறிதளவான அதிகரிப்பினை பதிவுசெய்தது.

## 5.9.3 ஏனைய முதலீட்டு நிலைமை

### நாணயம் மற்றும் வைப்புக்கள்

**நாணயம் மற்றும் வைப்புச் சொத்து நிலைமை 2016 இறுதியிலுள்ளவாறு சிறிதளவால் அதிகரித்தவேளையில் பொறுப்பு நிலைமை ஓர் வீழ்ச்சியை பதிவுசெய்தது.** ஆண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 700 மில்லியன் பன்னாட்டு பரஸ்பர பரிமாற்ற வசதியின் தீர்ப்பனவினாலேயே முக்கியமாக மத்திய வங்கியின் நாணய மற்றும் வைப்பு பொறுப்பு நிலைமை 2015 இறுதியில் ஐ.அ.டொலர் 1,105 மில்லியனிலிருந்து 2016 இறுதியிலுள்ளவாறு ஐ.அ.டொலர் 403 மில்லியனாக வீழ்ச்சியடைந்தது. வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் நாணய மற்றும் வைப்பு பொறுப்பு நிலைமை 2015 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,946 மில்லியினலிந்து ஐ.அ.டொலர் 2,039 மில்லியனுக்கு அதிகரித்தது. வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் சொத்து நிலைமையை உள்ளடக்கிய நாணய மற்றும் வைப்புக்கள் சொத்து நிலைமை 2016 இறுதியில் ஐ.அ.டொலர் 706 மில்லியனுக்கு சிறிதளவால் அதிகரித்தது.

### கடன்கள்

**முக்கியமாக அரசின் வெளிநாட்டுக் கடன் பொறுப்பு நிலைமையின் அதிகரிப்பினால் 2016 இறுதியிலுள்ளவாறு பன்னாட்டு முதலீட்டு நிலைமையிலுள்ள வெளிநாட்டுக் கடன் பொறுப்பு நிலைமை அதிகரித்தது.** 2015 இறுதியிலுள்ளவாறு பன்னாட்டுக் கடன் பொறுப்பு நிலைமை ஐ.அ.டொலர் 25,936 மில்லியனிலிருந்து 2016 இறுதியில் ஐ.அ.டொலர் 26,530 மில்லியனுக்கு அதிகரித்தது. ஐ.அ.டொலர் 17,295 மில்லியனுக்கு அரசின் வெளிநாட்டுக் கடன் பொறுப்பு நிலைமையின் அதிகரிப்பானது அரசினால் பெறப்பட்ட புது செயற்றிட்டக் கடன்கள், புதிய இரண்டு வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகள் மற்றும் இரண்டு புது நிகழ்ச்சித்திட்ட கடன்களின் விளைவாகும். தொடர்ச்சியான கடன் மீள்செலுத்தல்களுக்கு மத்தியில் வங்கித்தொழில் துறைக்கான மெதுவடைந்த கடன் உட்பாய்ச்சல்களின் விளைவாக, கடந்த ஐந்து ஆண்டுகளில் முதன் முறையாக வைப்புக்களை பெற்றுக்கொள்ளும் கூட்டுத்தாபனங்களின் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்கள் வீழ்ச்சியடைந்தன. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் முதல் இரண்டு தொகுதிகளினால் ஏற்பட்ட பொறுப்புக்கள் அதிகரித்தபோதிலும், பன்னாட்டு நாணய நிதியத்தின் துணைநில் ஒழுங்கு வசதி தொடர்பான பொறுப்புக்களின் வீழ்ச்சியின் தேறிய விளைவினால் மத்திய வங்கியின் வெளிநின்ற பொறுப்பு நிலைமை வீழ்ச்சியடைந்தது. ஆண்டுப்பகுதியில் கொடுக்கல்கள் மற்றும் மீள்செலுத்தல்கள் இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்பினால், தனியார் துறை மற்றும் அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளை உள்ளடக்கிய ஏனைய துறையின் வெளிநாட்டுக் கடன் பொறுப்பு இருப்பு நிலைமை சிறிதளவால் அதிகரித்தது.

### வர்த்தக கொடுகடன் மற்றம் முற்பணங்கள்

**வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் சொத்து நிலைமை வீழ்ச்சியடைந்த வேளையில் பொறுப்பு நிலைமை 2016இல் அதிகரித்தது.** தனியார் துறையின் வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்களை உள்ளடக்கிய வெளிநின்ற வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் பொறுப்பு நிலைமையானது 2015 இறுதியிலுள்ளவாறு ஐ.அ.டொலர் 1,375 மில்லியனிலிருந்து 2016 இறுதியிலுள்ளவாறு ஐ.அ.டொலர் 1,483 மில்லியனுக்கு அதிகரித்தது. வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார் துறையினால் கொடுக்கப்பட்ட வர்த்தக கொடுகடன்கள் மற்றம் முற்பணங்களை பிரதிபலிக்கும் வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்களின் வெளிநின்ற சொத்து நிலைமையானது 2015இறுதியிலுள்ளவாறான ஐ.அ.டொலர் 677 மில்லியனிலிருந்து 2016 இறுதியிலுள்ளவாறு ஐ.அ.டொலர் 610 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

### பெறத்தக்க/கொடுபடத்தக்க ஏனைய கணக்குகள் மற்றும் சிறப்பு எடுப்பனவு உரிமைகள்

**ஏனைய கொடுபடத்தக்க கணக்குகள் மற்றும் ஏனைய பெறத்தக்க கணக்குகளின் வெளிநின்ற நிலை 2016இல் அதிகரித்தது.** வைப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் ஏனைய பெறத்தக்க கணக்குகளின் வெளிநின்ற நிலைமை 2015

5

வரைபடம் 5.11
காலாண்டுக்கான மொத்த அலுவல்சார் ஒதுக்குகளும் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களும்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 5.11
மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் திரண்ட நிலுவை

(கால இறுதியிலான நிலை)

| | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா.மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 (அ) | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 (அ) |
| 1. அரசின் வெளிநாட்டு சொத்துக்கள் | 631 | 465 | 635 | 470 | 289 | 80,209 | 60,857 | 83,262 | 67,690 | 43,303 |
| 2. மத்திய வங்கியின் வெளிநாட்டு சொத்துக்கள் | 6,475 | 7,030 | 7,573 | 6,834 | 5,730 | 823,375 | 919,171 | 992,438 | 984,489 | 858,352 |
| 3. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (1+2) | 7,106 | 7,495 | 8,208 | 7,304 | 6,019 | 903,584 | 980,028 | 1,075,700 | 1,052,178 | 901,655 |
| 4. வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் வெளிநாட்டு சொத்து | 1,481 | 1,078 | 1,676 | 2,033 | 2,414 | 188,195 | 141,008 | 219,641 | 292,916 | 361,601 |
| 5. மொத்த வெளிநாட்டு சொத்துக்கள் (3+4) (ஆ) | 8,587 | 8,573 | 9,884 | 9,337 | 8,433 | 1,091,779 | 1,121,036 | 1,295,342 | 1,345,095 | 1,263,252 |
| 6. ஒதுக்குடன் தொடர்புடைய பொறுப்புக்கள் (இ) | 2,943 | 2,347 | 1,691 | 2,275 | 1,490 | 373,984 | 306,825 | 221,593 | 327,725 | 223,214 |
| 7. தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் (3-6) | 4,163 | 5,148 | 6,517 | 5,029 | 4,529 | 529,600 | 673,203 | 854,107 | 724,453 | 678,437 |
| 8. திரண்ட நிலுவை (ஈ) | 151 | 985 | 1,369 | -1,489 | -500 | 72,619 | 143,603 | 180,904 | -129,654 | -46,017 |
| 9. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மாதங்களின்படி | | | | | | | | | | |
| 9.1 பொருட்களின் இறக்குமதிகள் | 4.4 | 5.0 | 5.1 | 4.6 | 3.7 | | | | | |
| 9.2 பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் | 3.9 | 4.2 | 4.3 | 3.8 | 3.1 | | | | | |
| 10. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மாதங்களின்படி | | | | | | | | | | |
| 10.1 பொருட்களின் இறக்குமதிகள் | 5.4 | 5.7 | 6.1 | 5.9 | 5.2 | | | | | |
| 10.2 பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் | 4.7 | 4.8 | 5.1 | 4.9 | 4.3 | | | | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) 'வெளிநாட்டில் நேரடி முதலீடு' மற்றும் 'வழங்கப்பட்ட வர்த்தக்கடன் மற்றும் முற்பணங்கள்' வடிவிலுள்ள வெளிநாட்டுச் சொத்துக்கள் நீங்கலாக
(இ) வெளிநின்ற சிறப்பு எடுப்பனவு உரிமைகள் நீங்கலாக மத்திய வங்கியின் மொத்த வெளிநின்ற படுகடன்
(ஈ) ஆண்டுக்காலப்பகுதியில் தேறிய பன்னாட்டு ஒதுக்கு நிலமையின் மாற்றம்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

இறுதியிலுள்ளவாறான ஐ.அ.டொலர் 1,236 மில்லியனிலிருந்து 2016 இறுதியிலுள்ளவாறான ஐ.அ.டொலர் 1,615 மில்லியனிற்கு அதிகரித்தது. இதே வேளை, மத்திய வங்கியின் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் அதிகரித்தலுடன் கொடுபடத்தக்க ஏனைய கணக்குகளின் வெளிநின்ற நிலைமை 2016இல் ஐ.அ.டொலர் 533 மில்லியனுக்கு அதிகரித்தது. மேலும், சிறப்பு எடுப்பனவு உரிமை பொறுப்பு நிலைமை 2016 இறுதியிலுள்ள ஐ.அ.டொலர் 532 மில்லியனுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

5

### 5.9.4 ஒதுக்குச் சொத்து நிலைமை

**இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குச் சொத்துக்களின் நிலைமை 2015 இறுதியிலுள்ளவாறு ஐ.அ.டொலர் 7.3 பில்லியனிலிருந்து 2016 இறுதியிலுள்ளவாறு ஐ.அ.டொலர் 6.0 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தது.** 2016 இறுதியிலுள்ளவாறு மொத்த அலுவல்சார் ஒதுக்குச் சொத்துக்கள் பொருட்களின் 3.7 மாத இறக்குமதி மற்றும் பொருட்கள் மற்றும் பணிகளின் 3.1 மாத இறக்குமதிகளுக்கு சமமானதாக இருந்தது. வெளிநாட்டு நாணய படுகடன் பணி கொடுப்பனவுகள், வெளிநாட்டு நாணய பரஸ்பர பரிமாற்ற ஒழுங்கின் ஓர் பகுதியின் தீர்த்தல், பன்னாட்டு நாணய நிதியத்தின் துணைநில் ஒழுங்கின் மீளச்செலுத்தல்கள் மற்றும் மத்திய வங்கியின் தலையீடு மூலமாக உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு திரவத்தன்மையை வழங்குதல், ஆகியவற்றினால் முக்கியமாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் வீழ்ச்சியடைந்தன. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2015 இறுதியிலுள்ளவாறு ஐ.அ.டொலர் 9.3 பில்லியனிலிருந்து 2016 இறுதியிலுள்ளவாறு ஐ.அ.டொலர் 8.4 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. ஆண்டுப்பகுதியில் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பினால், மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகளவிலான வீழ்ச்சியை ஓரளவிற்கு தணியச்செய்தது. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் என்பன பொருட்களின் 5.2 மாத இறக்குமதிகளுக்கும் பொருட்கள் மற்றும் பணிகளின் 4.3 மாத இறக்குமதிகளுக்கும் சமமாகக் காணப்பட்டன.

## 5.10 வெளிநாட்டுப் படுகடன் மற்றும் படுகடன் தீர்ப்பனவு

### 5.10.1 வெளிநாட்டுப் படுகடன்

**நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் ஐ.அ.டொலர் 1.7 பில்லியனால் 2016 இல் அதிகரித்தது.** இதன் விளைவாக, மொத்த வெளிநாட்டுப் படுகடனின் இருப்பானது 2015 இறுதியிலுள்ளவாறான ஐ.அ.டொலர் 44.8 பில்லியனிலிருந்து 2016 இறுதியிலுள்ளவாறான ஐ.அ.டொலர் 46.6 பில்லியனிற்கு அதிகரித்தது. அரச வெளிநாட்டுப் படுகடன் 2016 இல் ஐ.அ.டொலர் 2.5 பில்லியனினால் அதிகரித்தனாலேயே முக்கியமாக வெளிநாட்டுப் படுகடன் அதிகரித்தது. அரச பிணையச் சந்தையிலிருந்து வெளிநாட்டு முதலீடாளர்களின் முதலீடுகளின் வெளியேற்றல் இருப்பினும் ஓர் நாட்டிற்கான பன்னாட்டு முறி வழங்கல், இரு வெளிநாட்டுச் செலாவணி கால நிதியிடல் வசதிகள், செயற்றிட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்ட

அட்டவணை 5.12
**வெளிநின்ற வெளிநாட்டு படுகடனின் நிலை**

ஐ.அ.டொ.மில்லியன்
(கால இறுதியிலான நிலைமை)

| வகை | 2015 (அ) | 2016 (ஆ) |
|---|---|---|
| **அரசாங்கம்** | **24,681** | **27,197** |
| குறுங்காலம் | 33 | 80 |
| படுகடன் பிணையங்கள் | 33 | 80 |
| திறைசேரி உண்டியல்கள் (இ) | 33 | 80 |
| **நீண்ட காலம்** | **24,647** | **27,118** |
| படுகடன் பிணையங்கள் | 8,501 | 9,823 |
| திறைசேரி முறிகள் (இ) | 1,811 | 1,440 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் (ஈ) | 265 | 58 |
| நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் (உ) | 6,425 | 8,325 |
| கடன்கள் | 16,147 | 17,295 |
| **மத்திய வங்கி** | **2,823** | **2,022** |
| **குறுங்காலம்** | **483** | **536** |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் | 5 | 3 |
| செலுத்த வேண்டிய ஏனைய கணக்குகள் | 478 | 533 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்கள் | 478 | 533 |
| **நீண்ட காலம்** | **2,340** | **1,486** |
| சிறப்பு எடுப்பனவு உரிமை ஒதுக்குகள் | 548 | 532 |
| நாணய மற்றும் வைப்புகள் | 1,100 | 400 |
| கடன்கள் | 692 | 554 |
| ப.நா.நி உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | 692 | 554 |
| துணைநில் ஒழுங்குகள் (ப.நா.நி- து.நில் வசதி) | 692 | 232 |
| விரிவாக்கப்பட்ட நிதிய வசதி | - | 322 |
| **வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்** | **9,156** | **8,790** |
| குறுங்காலம் | 5,762 | 5,247 |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் (ஊ) | 1,946 | 2,039 |
| வர்த்தக வங்கிகள் | 1,946 | 2,039 |
| கடன்கள் | 3,816 | 3,209 |
| வர்த்தக வங்கிகள் | 3,816 | 3,209 |
| **நீண்ட காலம்** | **3,393** | **3,543** |
| படுகடன் பிணையங்கள் (உ) | 2,140 | 2,190 |
| வர்த்தக வங்கிகள் | 1,112 | 1,128 |
| வைப்புக்களை ஏற்கும் ஏனைய கூட்டுத்தாபனங்கள் | 1,028 | 1,062 |
| கடன்கள் | 1,253 | 1,354 |
| வர்த்தக வங்கிகள் | 1,240 | 1,339 |
| வைப்புக்களை ஏற்கும் ஏனைய கூட்டுத்தாபனங்கள் | 13 | 14 |
| **ஏனைய துறைகள் (எ)** | **5,567** | **5,774** |
| குறுங்காலம் | 1,375 | 1,483 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் (ஏ) | 1,375 | 1,483 |
| **நீண்ட காலம்** | **4,192** | **4,291** |
| படுகடன் பிணையங்கள் (உ) | 164 | 172 |
| கடன்கள் | 4,028 | 4,119 |
| தனியார் துறை கூட்டுத்தாபனங்கள் | 1,604 | 1,876 |
| அரசிற்கு சொந்தமான நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | 2,423 | 2,242 |
| **நேரடி முதலீடு : கம்பனிகளுக்கிடையிலான கடன் வழங்கல் (ஐ)** | **2,613** | **2,802** |
| **மொத்த வெளிநாட்டு படுகடன் நிலைமை** | **44,839** | **46,586** |
| மொ.உ.உ. சதவீதமாக | | |
| மொத்த வெளிநாட்டு படுகடன் | 55.7 | 57.3 |
| குறுங்கால படுகடன் | 9.5 | 9.0 |
| நீண்டகால படுகடன் | 46.2 | 48.3 |
| மொத்த வெளிநாட்டு படுகடனின் சதவீதமாக | | |
| குறுங்கால படுகடன் | 17.1 | 15.8 |
| நீண்டகால படுகடன் | 82.9 | 84.2 |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | |
| **படுகடன் பிணையங்கள்-முகப்பெறுமதியில் துறைவாரியான பகுப்பாய்வு** | **11,299** | **12,219** |
| அரசாங்கம் | 9,024 | 9,944 |
| திறைசேரி உண்டியல்கள் | 35 | 86 |
| திறைசேரி முறிகள் | 2,074 | 1,650 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 265 | 58 |
| நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் | 6,650 | 8,150 |
| மத்திய வங்கி தவிர்ந்த, வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனம் | 2,100 | 2,100 |
| வர்த்தக வங்கிகள் | 1,100 | 1,100 |
| உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 1,000 | 1,000 |
| ஏனைய துறைகள் | 175 | 175 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) புத்தகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது
(ஈ) முகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது
(உ) சந்தை விலையை அடிப்படையாகக் கொண்டது
(ஊ) வெளிநாட்டு நாணயங்களை வைத்திருக்கும் வதிவற்றோரின் வைப்புக்களை உள்ளடக்கியுள்ளது
(எ) தனியார் துறை மற்றும் அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளை உள்ளடக்கியுள்ளது
(ஏ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை கம்பனிகளின் வெளிநின்ற வர்த்தக கொடுகடனை உள்ளடக்கியுள்ளது
(ஐ) முதலீட்டுச்சபையில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் மீது கம்பனிகளுக்கிடையிலான கடன் பெறுகைகள் மற்றும் பங்குதாரர் முற்பணங்கள் உள்ளடங்கலாக

மூலம் : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.12
**வெளிநாட்டுப் படுகடன்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

கடன்களினால் அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன்பாடுகள் 2016இல் அதிகரித்தன. இதேவேளையில், வெளிநாட்டு நாணய பரஸ்பர பரிமாற்ற பொறுப்பின் மீளச்செலுத்தல் மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் துணை நில் ஒழுங்கு வசதியின் மீளச்செலுத்தலினால், மத்திய வங்கியின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் ஐ.அ.டொலர் 801 மில்லியனால் குறைந்தது. மேலும், வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள், தனியார் கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளின் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன் மற்றும் நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் கம்பனிகளுக்கிடையிலான கடன் என்பவை 2016இல் முறையே ஐ.அ.டொலர் 8,790 மில்லியன், ஐ.அ.டொலர் 5,774 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 2,802 மில்லியனாகும்.

முக்கியமாக அரச வெளிநாட்டுக் கடனின் அதிகரிப்பினால் **மொத்த வெளிநின்ற வெளிநாட்டுக் கடனானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2015 இறுதியிலிருந்த 55.7 சதவீதத்திலிருந்து 2016 இறுதியில் 57.3 சதவீதமாகக் காணப்பட்டது.** அரசின் வெளிநாட்டுக் கடனின் வெளிநின்ற நிலைமையானது, மொத்த வெளிநாட்டுக் கடனின் 2015 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 55.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016 இறுதியில் 58.4 சதவீதமாகக் காணப்பட்டது. மேலும், மொத்த வெளிநாட்டுக் கடனின் சதவீதமாக நீண்டகால கடனானது 2015 இறுதியில் காணப்பட்ட 82.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016 இறுதியில் 84.2 சதவீதமாக அதிகரித்து, நீண்ட கால முதிர்ச்சிகளை நோக்கி நகரும் ஓர் மெதுவான போக்கை குறித்தது. உலகளாவிய வட்டி வீதங்களின் அதிகரிப்பின் சாத்தியத்தினால் கடன்பாடுகள் மீதான செலவினத்தில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பை கருத்திற்கொண்டு, இலங்கையின் வெளிநாட்டுக் கடனின் தொடர்ச்சியான அதிகரிப்பானது வெளிநாட்டுத் துறையில் தொடர்ந்தும் ஓர் கருசனையாகவுள்ளது.

5

அட்டவணை 5.13
வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் (அ)

| வகை | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா.மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 | 2014 | 2015 (அ) | 2016 (ஆ) | 2012 | 2013 | 2014 | 2015 (அ) | 2016 (ஆ) |
| **1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள்** | **2,675** | **4,040** | **3,479** | **4,626** | **4,366** | **341,382** | **521,626** | **454,248** | **628,641** | **585,628** |
| **1.1 கடன் தீர்த்தல்** | **1,795** | **2,982** | **2,323** | **3,435** | **3,157** | **229,049** | **384,942** | **303,347** | **467,546** | **410,937** |
| அரசாங்கம் | 1,490 | 1,555 | 1,296 | 1,976 | 1,040 | 190,088 | 200,705 | 169,150 | 265,662 | 151,236 |
| செயற்றிட்டக் கடன்கள் | 862 | 836 | 793 | 798 | 876 | 109,975 | 107,906 | 103,540 | 107,536 | 127,396 |
| படுகடன் பிணையங்கள் | 628 | 719 | 503 | 1,178 | 164 | 80,114 | 92,799 | 65,610 | 158,126 | 23,840 |
| மத்திய வங்கி | 57 | 653 | 719 | 907 | 1,555 | 7,268 | 84,285 | 93,917 | 125,686 | 177,396 |
| பன்னாட்டு நாணய நிதியம் | 57 | 453 | 719 | 507 | 455 | 7,268 | 58,463 | 93,917 | 68,775 | 17,234 |
| சுவப் மற்றும் ஏனைய பொறுப்புகள் | - | 200 | - | 400 | 1,100 | - | 25,822 | - | 56,911 | 160,162 |
| தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 248 | 774 | 309 | 553 | 562 | 31,692 | 99,952 | 40,280 | 76,199 | 82,304 |
| வெளிநாட்டு கடன்கள் | 248 | 774 | 309 | 553 | 562 | 31,692 | 99,952 | 40,280 | 76,199 | 82,304 |
| **1.2 வட்டிக்கொடுப்பனவுகள்** | **880** | **1,059** | **1,156** | **1,190** | **1,209** | **112,333** | **136,685** | **150,901** | **161,095** | **174,690** |
| அரசாங்கம் | 702 | 832 | 876 | 870 | 862 | 89,547 | 107,357 | 114,368 | 117,496 | 124,042 |
| செயற்றிட்ட கடன்கள் | 294 | 255 | 260 | 266 | 264 | 37,464 | 32,982 | 33,883 | 36,024 | 38,440 |
| படுகடன் பிணையங்கள் | 408 | 576 | 616 | 604 | 597 | 52,083 | 74,376 | 80,485 | 81,472 | 85,602 |
| மத்திய வங்கி | 43 | 35 | 20 | 13 | 10 | 5,512 | 4,507 | 2,546 | 1,693 | 1,436 |
| பன்னாட்டு நாணய நிதியம் | 36 | 33 | 20 | 10 | 8 | 4,593 | 4,313 | 2,546 | 1,395 | 1,179 |
| சுவப் மற்றும் ஏனைய பொறுப்புகள் | 7 | 2 | - | 2 | 2 | 919 | 194 | - | 298 | 257 |
| தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 135 | 192 | 260 | 307 | 338 | 17,274 | 24,820 | 33,986 | 41,907 | 49,212 |
| வெளிநாட்டு கடன்கள் | 135 | 145 | 118 | 148 | 179 | 17,274 | 18,663 | 15,470 | 20,128 | 26,026 |
| படுகடன் பிணையங்கள் | - | 48 | 142 | 159 | 159 | - | 6,157 | 18,517 | 21,779 | 23,186 |
| **2. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள்** | **13,573** | **15,079** | **16,735** | **16,943** | **17,448** | | | | | |
| **3. பொருட்களின் ஏற்றுமதிகள், பணிகள், வருமானம் மற்றும் நடைமுறை மாற்றல்களிலிருந்தான பெறுகைகள்** | **19,754** | **21,639** | **23,936** | **24,078** | **24,829** | | | | | |
| **4. படுகடன் பணி விகிதம்** | | | | | | | | | | |
| 4.1 மேலுள்ள 2இன் சதவீதமாக | | | | | | | | | | |
| ஒட்டு மொத்த விகிதம் | 19.7 | 26.8 | 20.8 | 27.3 | 25.0 | | | | | |
| ப.நா.நி. கொடுக்கல் வாங்கல்கள் நீங்கலாக | 19.0 | 23.6 | 16.4 | 24.2 | 22.4 | | | | | |
| 4.2 மேலுள்ள 3இன் சதவீதமாக | | | | | | | | | | |
| ஒட்டு மொத்த விகிதம் | 13.5 | 18.7 | 14.5 | 19.2 | 17.6 | | | | | |
| ப.நா.நி. கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக | 13.1 | 16.4 | 11.4 | 17.1 | 15.7 | | | | | |
| **5. அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள்** | | | | | | | | | | |
| 5.1 அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (இ) | 2,191 | 2,386 | 2,172 | 2,846 | 1,901 | | | | | |
| 5.2 மேலுள்ள 1இன் சதவீதமாக | 81.9 | 59.1 | 62.4 | 61.5 | 43.5 | | | | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பன்னாட்டு நாணய நிதியத்துடனான கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி

5

### 5.10.2 வெளிநாட்டுக் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

**இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் கடப்பாடுகள் மீதான மூலதன கொடுப்பனவுகள் 2016இல் மெதுவடைந்த அதேவேளை, வட்டிக் கொடுப்பனவுகள் அதிகரித்தன.** வெளிநாட்டுக் கடன் மீதான மூலதன மீள்செலுத்தல்கள் 2015 இல் ஐ.அ.டொலர் 3,435 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இல் ஐ.அ.டொலர் 3,157 மில்லியனாகவுள்ளது. 2015 இல் அரச பிணையங்களின் மீளச்செலுத்தலானது நாட்டிற்கான பன்னாட்டு முறி 2015இல் ஐ.அ.டொலர் 500 மில்லியனை உள்ளடக்கியதால், சென்றாண்டுடன் ஒப்பிடுகையில் அரச பிணையங்களின் மூலதன மீள்செலுத்தல்கள் கணிசமாக வீழ்ச்சியடைந்தன. எனினும், வெளிநாட்டு நாணய பரஸ்பர பரிமாற்றங்களின் தீர்ப்பனவுடன் 2016இல் பன்னாட்டு நாணய நிதியத்தின் துணைநில் ஒழுங்கின் மீள்செலுத்தல்களினால் மத்திய வங்கியின் மீள்செலுத்தல்கள் அதிகரித்தன. வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் கடப்பாடுகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2015 இல் ஐ.அ.டொலர் 1,190 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இல் ஐ.அ.டொலர் 1,209 மில்லியனுக்கு அதிகரித்தது. தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் மேற்கொண்ட வட்டிக் கொடுப்பனவுகளின் விரிவாக்கமே வட்டிக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாகும்.

**பண்டங்கள் மற்றும் பணி ஏற்றுமதிகளின் சதவீதமாக மொத்த வெளிநாட்டுப் படுகடன் கடன்பாடுகள் 2016இல் வீழ்ச்சியடைந்தன.** மொத்த படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளின் வீழ்ச்சி மற்றும் பண்டங்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியின் அதிகரிப்பினால், பண்டங்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதிகளின் சதவீதமாக படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள் 2015இன் 27.3

வரைபடம் 5.13
செலாவணி வீத அசைவுகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி




(அ)கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் (2013=100) மீள்தளப்படுத்தலுடன் உ.தா.செ.வீ ஆனது மீள்கணிப்பிடப்பட்டது

சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016இல் 25.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதே வேளையில், அமெரிக்காவின் பெடரல் ரிசர்வின் வட்டி வீதங்களின் அதிகரிப்புடன் உலகளாவிய வட்டி வீதங்கள் மெதுவாக உயரும் என எதிர்பார்க்கப்படுவதுடன், இது வருங்காலங்களில் உயர்ந்த கடன்பெறல் செலவுகளை விளைவிக்கும்.

## 5.11 செலாவணி வீத அசைவுகள்

**இலங்கை ரூபாயின் வெளிநாட்டுப் பெறுமதி 2016இல் தொடர்ந்தும் தேய்மானமடைந்தது.** ஆண்டின் முதலரையாண்டில் இலங்கை ரூபாய் 0.82 சதவீதத்தால் தேய்மானமடைந்தாலும், இரண்டாமரையாண்டுப் பகுதியில் கூடிய வீதமான 3.04 சதவீதத்தால் தேய்மானமடைந்தது. மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 1,093 மில்லியன் கொண்ட, தேறிய அடிப்படையிலான வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையின் வழங்கல் ஒப்பீட்டு ரீதியில் முதலரையாண்டின் ரூபாவின் குறைந்த தேய்மானத்திற்கு ஆதரவளித்தது. எனினும், மத்திய வங்கியின் தலையீட்டின் கட்டுப்படுத்தலினால் ஆண்டின் இரண்டாவதரையாண்டில் ஐ.அ.டொலர் 325 மில்லியன் தேறிய உள்ளீர்த்தலுடன் ரூபாவானது அதிக வீதத்தினால் தேய்மானமடைந்தது. இரண்டாமரையாண்டில் வழங்கப்பட்ட கணிசமான அளவு வெளிநாட்டுச் செலாவணியானது குறிப்பாக ஆண்டின் இறுதிக் காலாண்டில் அரச பிணையச்சந்தையிலிருந்து வதிவற்ற முதலீட்டாளர்களின் முதலீடுகளின் வெளியேற்றத்தினால் எழுந்த அழுத்தத்தை பகுதியிளவாக தளர்த்துவதற்கானதாகும். பெடரல் ரிசர்வ் வங்கியினால் தொடர்ந்து வட்டி வீதங்கள் அதிகரிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு மற்றும் தொடக்க வட்டி வீத அதிகரிப்பு போன்வற்றினாலேயே இந்த அரச பிணையச் சந்தைகளிலிருந்து வெளிப்பாய்ச்சல்கள் ஏற்பட்டன. இந்த அபிவிருத்திகளுடன், ஆண்டு முழுவதுமே, 2015 இறுதியிலுள்ளவாறான ஐ.அ.டொலரொன்றிற்கு ரூ. 144.06இலிருந்து 2016 இறுதியிலுள்ளவாறு ரூ. 149.80ற்கு ரூபாய் 3.83 சதவீதத்தால் தேய்மானமடைந்தது. மேலும், ஆண்டுச் சராசரி செலாவணி வீதம் 2016இல் ரூ. 145.60 ஆக டொலருக்கெதிராக 6.64 சதவீதத்தால் தேய்மானமடைந்தது. உயர்ந்த இறக்குமதிகள் மற்றும் வெளிநாட்டு படுகடன் கடன்பாடு கொடுப்பனவுகளிலிருந்து எழும் கேள்வியை பூர்த்திசெய்வதற்கு ஏற்றமதிகளின் வீழ்ச்சி மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களின் மெதுவடைந்த வளர்ச்சியினால் குறைந்த மட்டத்திலான உட்பாய்ச்சல்கள் போதாமலிருந்ததினால் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்த கேள்வி மற்றும் நிரம்பல் நிலைமைகளுடன் இந்த தேய்மானப் போக்கு ஓரளவிற்கு ஒத்திருந்தது. அதனால், இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணியை வழங்கியமை ஒதுக்குகளின் குறைப்படுத்தலை விளைவித்தது. ஆகையால், வெளிநாட்டு அதிர்வுகளுக்கான நாட்டின் பாதிப்படையக்கூடியதை குறைப்பதற்கு பன்னாட்டு ஒதுக்கு நிலைமை மட்டத்தை மீள்நிரப்புவது அவசியமாகும்.

2016 யூன் 23இல் பிரித்தானியாவின் வெளியேற்றத்திற்கான (பிறெக்சிட்) **வாக்கெடுப்பைத் தொடர்ந்து கணிசமானளவால் தேய்மானமடைந்த பவுண்ட் ஸ்டேர்லிங் தவிர்ந்த எல்லா முக்கிய நாணயங்களுக்கெதிராகவும் ரூபாவானது 2016இல் தேய்மானமடைந்தது.** இதற்கேற்ப, பன்னாட்டுச் சந்தைகளில் ஐ.அ. டொலருக்கெதிரான நாணயங்களுக்கிடையிலான செலாவணி வீதங்களின் அசைவுகளை பிரதிபலிக்கும் வகையில், யூரோக்கு எதிராக 0.32 சதவீதத்தினாலும், இந்தியன் ரூபாவிற்கு எதிராக 1.72 சதவீதத்தினாலும், யப்பானிய யென்னிற்கு எதிராக 7.05 சதவீதத்தினாலும் ரூபாய் தேய்மானடைந்த வேளையில், பவுண்ட் ஸ்ரேர்லிங்க்கு எதிராக 16.04 சதவீதத்தால் பெறுமானம் உயர்ந்தது. இதன் விளைவாக, ஆண்டுப்பகுதியில் சிறப்பு எடுப்பனவு உரிமைகளுக்கெதிராகவும் ரூபாய் 0.87 சதவீதத்தால் தேய்மானமடைந்தது.

5

அட்டவணை 5.14
**செலாவணி வீத அசைவுகள்**

| நாணயம் | வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கான ரூபா | | | | | | முன்னைய ஆண்டுடனான சதவீத மாற்றம் (அ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டிறுதி வீதம் | | | ஆண்டுச் சராசரி வீதம் | | | ஆண்டிறுதி | | ஆண்டுச் சராசரி | |
| | 2014 | 2015 | 2016 | 2014 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 |
| யூரோ | 159.42 | 157.37 | 157.87 | 173.47 | 150.84 | 161.16 | 1.30 | -0.32 | 15.00 | -6.40 |
| இந்திய ரூபா | 2.07 | 2.17 | 2.21 | 2.14 | 2.12 | 2.17 | -4.62 | -1.72 | 1.12 | -2.25 |
| யப்பானிய யென் | 1.10 | 1.20 | 1.29 | 1.24 | 1.12 | 1.34 | -8.20 | -7.05 | 10.08 | -16.48 |
| ஸ்டேர்லிங் பவுண் | 204.04 | 213.57 | 184.04 | 215.16 | 207.99 | 197.15 | -4.46 | 16.04 | 3.45 | 5.50 |
| ஐ.அ.டொலர் | 131.05 | 144.06 | 149.80 | 130.56 | 135.94 | 145.60 | -9.03 | -3.83 | -3.96 | -6.64 |
| சி.எ.உ. | 189.86 | 199.63 | 201.38 | 198.35 | 190.16 | 202.39 | -4.89 | -0.87 | 4.31 | -6.04 |
| தாக்கமுள்ள நாணயமாற்று வீதச் சுட்டெண்கள் (ஆ) (இ) (2010=100) | ஆண்டிறுதி சுட்டெண் | | | ஆண்டுச் சராசரி சுட்டெண் | | | முன்னைய ஆண்டை விட சதவீத மாற்றம் | | | |
| | | | | | | | ஆண்டிறுதி சுட்டெண் | | ஆண்டுச் சராசரி சுட்டெண் | |
| | 2014 | 2015 | 2016 | 2014 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 |
| பெ.தா.செ.வீ 24 - பெ.தா.செ.வீ.நாணயங்கள் | 96.44 | 93.53 | 92.64 | 91.99 | 96.61 | 92.46 | -3.02 | -0.95 | 5.02 | -4.29 |
| உ.தா.செ.வீ 24 - உ.தா.செ.வீ.நாணயங்கள் | 107.87 | 107.28 | 110.18 | 103.77 | 109.50 | 106.94 | -0.55 | 2.70 | 5.52 | -2.34 |

(அ) இலங்கை ரூபாவிற்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன. (-) அடையாளம் என்பது ஒவ்வொரு நாணயத்துக்கும் எதிரான இலங்கை ரூபாவின் தேய்மானத்தை குறிப்பிடுகின்றது.
(ஆ) பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதமென்பது (பெ.தா.செ.வீ) 24 வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டி நாடுகளின் பெயரளவுச் நாணயமாற்று வீதத்தின் நிறையேற்றப்பட்ட சராசரியாகும். ஒவ்வொரு நாணய கூடைகளிலுள்ள ஒவ்வொரு நாணயத்தினதும் ஒப்பீட்டு ரீதியான முக்கியத்துவத்தினை பிரதிபலிக்கும் வர்த்தகப் பங்குகளின் அடிப்படையில் நிறையிடப்பட்டது. நாணயக் கூடையிலுள்ள ஒவ்வொரு நாணயத்துடனும் தொடர்புடைய பணவீக்க வேறுபாடுகளுக்காக பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதங்களை சீராக்குவதன் மூலமாக உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் (உ.தா.செ.வீ) கணிக்கப்படுகின்றது. கழித்தல் அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் உண்மை தாக்கமுள்ள நாணயமாற்று வீதத்தை கணிப்பிட பயன்படுத்தப்பட்டது.
(இ) நாணயமாற்று வீதமானது சுட்டெண்களின் அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டதனால் ஏனைய நாணயங்களுடன் ஒப்பிடும்போது ரூபாவின் பெறுமதி உயர்வு/பெறுமதி தேய்வு என்பது பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதங்களின் சுட்டெண்களின் பெறுமதிகளின் உயர்ச்சி/வீழ்ச்சியால் நேரடியாக பிரதிபலித்தது.
(ஈ) கொ.நு.வி.சு. (2013 = 100) இன் மீள் அடியாண்டுடன் உண்மைத்தாக்கமுள்ள நாணயமாற்று வீதம் மீள் கணிக்கப்பட்டது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## 5.11.1 பெயரளவு மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதங்கள்

**ஆண்டுப் பகுதியில் 5-நாணய மற்றும் 24-நாணய உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் (2010 = 100) சுட்டெண்கள் உயர்வடைந்து நாட்டின் வெளிநாட்டு போட்டித்தன்மையின் தேய்மானத்தை பிரதிபலித்தது.** கூடையிலுள்ள பெயரளவு செலாவணி வீதங்களின் மாற்றங்களையும், நாட்களுக்கிடையான பணவீக்க வேறுபாடுகளையும் கருத்திற்கொள்ளும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் புதிதாக மீள்தளப்படுத்தப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை (2013 = 100) பயன்படுத்தி மீள கணிப்பிடப்பட்டது. இதற்கேற்ப, ஆண்டிறுதியில் 5-நாணய மற்றும் 24-நாணய உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச்சுட்டெண்கள் முறையே 2.83 சதவீத மற்றும் 2.70 சதவீத உயர்வை பதிவுசெய்தன. அதன் வியாபார பங்குதாரர்கள் மற்றும் போட்டியாலர்களின் பணவீக்க மட்டத்தினுடன் ஒப்பிடுகையில், உயர்வான இலங்கையின் உள்நாட்டுப் பணவீக்கம் 2016இல் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்களின் உயர்விற்கு பெரிதளவும் பங்களித்தது. இதேவேளை, 5-நாணய கூடையிற்கான பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டொண் 0.23 சதவீதத்தால் குறைந்தளவால் உயர்வடைந்தவேளையில், ஆண்டுப்பகுதியில் 24-நாணயக் கூடை 0.95 சதவீதங்கொண்ட குறைந்தளவு தேய்மானத்தை பதிவுசெய்தது.

## 5.11.2 உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்திகள்

**உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் நடவடிக்கைகளின் அளவு 2016இல் வளர்ச்சியடைந்தது.** இதற்கேற்ப வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கைகளின் அளவு 2015 இல் ஐ.அ.டொலர் 13,600 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இல் ஐ.அ.டொலர் 14,780 மில்லியனாக அதிகரித்தது. உடன் கொடுக்கல்வாங்கள்களின் மொத்த அளவு 2015இல் ஐ.அ.டொலர் 6,867 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இல் ஐ.அ.டொலர் 6,072 மில்லியனாக (மொத்த நடவடிக்கைகளின் 41.1 சதவீதம்) வீழ்ச்சியடைந்திருந்தாலும், முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு

வரைபாம் 5.14
காலாண்டுக்கான வங்கிகளுக்கிடையிலான முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல் அளவுகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## சிறப்புக்குறிப்பு 08
## வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களில் இலங்கையின் அனுபவம் - செலாவணிக் கட்டுப்பாடுகளின் பரிணாம வளர்ச்சி, தளர்த்தல்கள் மற்றும் முன்னோக்கிய பார்வையில்

### 1. அறிமுகம்

உலகளாவிய பொருளாதாரத்திற்கு நாடு திறந்துவிடப்பட்டிருக்கின்றமையானது, அதாவது வெளிநாட்டுச் செலாவணி கட்டுப்பாடின்றி பாய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் அளவானது குறித்துரைக்கப்பட்ட பேரண்டப் பொருளாதாரக் கொள்கையாக இருக்கிறது. ஏனெனில் சுயநிறைவுடன் இருக்க வேண்டிய பெரும்பாலான நாடுகளுக்கு இது ஒன்றில் சாத்தியமானதாகவோ, நடைமுறை சார்ந்ததாகவோ இருக்காது. இதற்கமைய, வதிவோரினால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு நாணயங்களின் கொள்வனவு/ விற்பனை அல்லது வதிவற்றோரின் உள்நாட்டு நாணயங்களின் கொள்வனவு/ விற்பனையின் அளவு நாட்டின் நாணயம் மற்றும் அதன் வெளிநாட்டு ஒதுக்குகள் என்பனவற்றைப் பாதுகாக்கும் நோக்குடன் அரசின் கொள்கைகளின் மூலம் தீர்மானிக்கப்படுகிறது. இது ஒன்றில் செலாவணிக் கட்டுப்பாடுகளை அல்லது தளர்த்தல்களைத் தோற்றுவிக்கிறது.

### 2. இலங்கையின் அனுபவம்

இலங்கை 1944இல் செலாவணிக் கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தியது. செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் IIஆம் உலகப் போரின் போது ஏற்படுத்தப்பட்டது. அத்தகைய நேரத்தில் வேறுபடும் தேவைகளுக்கேற்ப பல்வேறு மாற்றங்களுக்கும் உட்பட்டன. இதன் தொழிற்பாடுகள் இரண்டு சந்தர்ப்பங்களின் போது இறக்குமதி மற்றும் ஏற்றுமதித் திணைக்களத்துடன் இணைக்கப்பட்டதுடன் இரண்டு திணைக்களங்களினதும் பொறுப்புக்களும் ஒரு அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டன. செலாவணிக் கட்டுப்பாடு பொதுமக்களின் தனிப்பட்ட சுதந்திரத்தினை நேரடியாகப் பாதித்து முழுமையான தாக்கமொன்றினை ஏற்படுத்துமாகையால் மத்திய வங்கியை ஏற்படுத்திய நேரத்தில் செலாவணிக் கட்டுப்பாட்டினை அரசாங்கத்தின் முழுமையான பொறுப்பில் வைத்திருப்பது புத்திசாலித்தனமானது எனக் கருதப்பட்டது. எனவே அரசாங்கத்தின் முகவரென்ற அடிப்படையில் அப்போதைய அமைச்சின் தொழிற்பாடாக இருந்த செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினை மத்திய வங்கியிடம் ஒப்படைப்பது பற்றி நிதி அமைச்சிற்கு விதந்துரைக்கப்பட்டது. இதன்படி, 1950இல் மத்திய வங்கி ஏற்படுத்தப்பட்ட போது செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் கீழ் வந்தது. செலாவணிக் கட்டுப்பாட்டிற்கான நடைமுறைச் சட்டமான 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் 1953 ஓகத்து 15ஆம் நாள் இயற்றப்பட்டது. இதற்கமைய, அத்திகதியிலிருந்து செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகள் வெளிநாட்டுச் செலாவணியுடன் தொடர்பான விடயங்களை நிருவகித்தன.

அ. நிதி அமைச்சினால் விடுக்கப்படும் பணிப்புரைகளின் கீழ் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளைக் கொண்டு நடத்துவது அரசாங்கத்தின் முகவரான இலங்கை மத்திய வங்கியின் பொறுப்பாகும்.

ஆ. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளைக் கொண்டு நடத்தும் நோக்கத்திற்காக செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் உருவாக்கப்பட்டது. இதற்கமைய, செலாவணிக் கட்டுப்பாட்டாளர் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் தலைவராக அல்லது அவரின் சார்பாக மற்றொரு குறித்துரைக்கப்பட்ட அலுவலருக்கு ஆளுநரின் பணிப்புரை மற்றும் கட்டுப்பாடுகளுக்குட்பட்டு செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடுகளின்படி இலங்கை மத்திய வங்கியினால் நிறைவேற்றும்படி அல்லது ஆற்றும்படி அதிகாரமளிக்கப்பட்ட அல்லது கேட்டுக் கொள்ளப்பட்ட அதிகாரங்களை, கடமைகளை அல்லது தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான அதிகாரம் ஒப்படைக்கப்படுகிறது.

இ. இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, செலாவணிக் கட்டுப்பாட்டாளர் பணிப்புரைகளை விடுப்பதன் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருக்கு செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் அனுமதிகளை வழங்கமுடியும். எந்தவொரு வர்த்தக வங்கியும் நிதி அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்ட வணிகராக தொழிற்படுவதற்கு அதிகாரமளிக்கப்படலாம்.

ஈ. இலங்கையிலுள்ள வதிவோருக்கும் இலங்கைக்கு வெளியேயுள்ள வதிவோருக்குமிடையிலான கொடுக்கல்வாங்கல்களுக்கும் இலங்கைக்கு வெளியே செய்யப்படும் வெளிநாட்டுச் செலாவணியுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களுக்கும் அனுமதி பெறப்பட வேண்டும். அத்தகைய அனுமதிகள் தங்கம், நாணயம், பிணையங்கள், படுகடன், கொடுப்பனவுகள், சொத்து மற்றும் இறக்குமதி/ ஏற்றுமதி மாற்றல்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

உ. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அத்தகைய அனுமதிகள் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படுகின்ற அதேவேளையில் ஒரு சில சந்தர்ப்பங்களில் நிதி அமைச்சரினால் வழங்கப்படுகின்றன.

ஊ. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான ஏதேனும் ஒப்புதல்கள், இசைவுகள் அல்லது அதிகாரமளிப்பு பொதுவாக, அல்லது சிறப்பாக, முழுமையாக அல்லது நிபந்தனைகளுடன் அது புதுப்பிக்கப்பட்டு மற்றும் மாற்றப்பட்டு அல்லது இரத்துச் செய்யப்பட்டாலொழிய, அது செல்லுபடியாகும் காலம் வரை நடைமுறையிலிருக்கும்.

எ. எந்தவொரு வெளிநாட்டுச் சொத்துக்களினையும் உடமையில் வைத்திருத்தல்/ கையேற்றல்/ விற்றுவிடுதல் பற்றி மத்திய வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்.

ஏ. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அதிகாரவரம்பிற்குள் வரும் விடயங்கள் தொடர்பில் செலாவணிக் கட்டுப்பாட்டாளர் தகவல்களைக் கோருவதுடன் பணிமனைகளையும் பரிசோதிக்கலாம்.

ஐ. இலங்கை மத்திய வங்கி செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினை மீறியமை தொடர்பான குற்றச்சாட்டுக்களைப் புலனாய்வு செய்யலாம் என்பதுடன் ஒன்றில் குற்றப் பணத்தினை விதிக்கலாம் அல்லது அவ்வாறு குற்றமிழைத்தவருக்கெதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்கலாம்.

ஒ. தேவையானவிடத்து சட்டத்தின் கோட்பாடுகளையும் ஏற்பாடுகளையும் மேற்கொள்வதற்கு நிதி அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

ஓ. மத்திய வங்கியின் தீர்மானம் பற்றி திருப்திப்படாத எவரேனும் ஆள் அமைச்சருக்கு முறையீடு செய்யமுடியும்.

5

5

**3. இலங்கையில் செலாவணிக் கட்டுப்பாடுகளை தாராளமயப்படுத்துகின்றமையின் முக்கிய மைல்கற்கள்**

3.1 சென்மதி நிலுவையுடன் தொடர்புபட்டதாகக் காணப்பட்ட பிரச்சனைகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் 1961இல் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கு உத்வேகமளிக்கும் முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன்படி, இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரினால் செலாவணி அனுமதிப்பத்திரமொன்றாக விளங்கக்கூடிய உரிமங்கள் வழங்கப்பட்டன. அனைத்து இறக்குமதிகளும் ஏற்றுமதிகளும் குறிப்பிட்ட ஒழுங்குவிதிகளுக்குட்பட்டிருந்தன. இன்றியமையாதவை என வகைப்படுத்தப்பட்ட பொருட்கள் மட்டுமே இறக்குமதி செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டன.

3.2 1970 - 1977 காலப்பகுதியில் செலாவணி மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளுக்குப் புறம்பாக இரட்டைச் செலாவணி வீத முறைமையும் நிலவியது. இம்முறைமையின் கீழ் இன்றியமையாத இறக்குமதிகள் அலுவல்சார் வீதத்தில் அனுமதிக்கப்பட்டதுடன் மற்றைய இறக்குமதிகளை உயர்ந்ததொரு வீதத்தில் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

3.3 1977 நவெம்பரில், செலாவணி வீத முறைமை திறந்த பொருளாதாரக் கொள்கைகளின் கீழ் புதிய அரசாங்கத்தின் பொருளாதாரச் சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக தாராளமயப்படுத்தப்பட்டது. இச்செயன்முறையானது நடைமுறைக் கணக்கினைத் தாராளமயப்படுத்துகின்ற நடைமுறைக் கட்டத்தின் ஆரம்பமொன்றாகக் கருதப்பட்டது.

3.4 நடைமுறைக் கணக்கின் தாராளமயப்படுத்தல் 1993 இலிருந்து விரைவுபடுத்தப்பட்டதுடன் 1994இல் ப.நா. நிதியத்தின் உடன்படிக்கை உறுப்புரை ஏற்றுக்கொள்ளப்பட்டதன் விளைவாக 1994இல் அனைத்து நடைமுறைக் கணக்குக் கொடுக்கல்வாங்கல்களும் தாராளமயப்படுத்தப்பட்டன. இதற்கமைய, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் (அதாவது வெளிநாட்டுச் செலாவணியில் அதிகாரம்பெற்ற வணிகர்கள்) எந்தவொரு செலாவணிக் கட்டுப்பாடுகளுமின்றி அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் மீது வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிக்க அனுமதிக்கப்பட்டனர்.

3.5 நடைமுறைக் கணக்கு தாராளமயமாக்கப்பட்டதனைத் தொடர்ந்து இலங்கை மத்திய வங்கி பன்னாட்டு நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதில் பெருமளவு வினைத்திறனை எய்தும் நோக்குடன் மூலதனக் கணக்கு கொடுக்கல்வாங்கல்கள் படிப்படியாகத் தளர்த்தப்பட்டன.

**4. இன்றைய திகதியிலுள்ளவாறு செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான தளர்த்தல்கள்**[1]

4.1 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், அதாவது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், கோரிக்கையின் நம்பகத்தன்மை பற்றி அவர்களாகவே திருப்தியடைந்த பின்னர் எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி அனைத்து நடைமுறை (மூலதனமல்லா) கொடுக்கல்வாங்கல்களுக்காகவும் வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிப்பதற்கு அனுதிக்கப்பட்டனர். நடைமுறைக் கணக்குக் கொடுக்கல்வாங்கல்கள் வணிகப்பொருட்களின் இறக்குமதி மற்றும் பொருட்களின் ஏற்றுமதிக்கான கொடுப்பனவுகள், கல்வி, மருத்துவச் சிகிச்சை என்பன உள்ளிட்ட ஏதேனும் நோக்கங்களுக்காக வெளிநாட்டுப் பயணங்கள் போன்ற பணிகளுக்கான கொடுப்பனவுகள், வெளிநாட்டில் வதியும் தங்கியிருப்போருக்கான பணவனுப்பல்கள், இலாபங்கள், பங்கிலாபங்கள், வட்டி, வாடகை வருமானம் போன்றவற்றின் பணவனுப்பல்கள், கப்பற்படுத்தல், எயார்லையின் மற்றும் சரக்கு அனுப்புதல் என்பனவற்றுடன் தொடர்பான கொடுப்பனவுகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

4.2 ஐ.அ.டொலர் 10,000 வரையிலான வெளிநாட்டுச் செலாவணியினை பிடித்துவைத்திருத்தல் அல்லது உடமையில் வைத்திருத்தல். அத்தகைய பணம் பயண நோக்கத்திற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்டு பயன்படுத்தப்படாமல் மீண்டும் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டிருக்குமிடத்து இலங்கைக்கு வெளியேயுள்ள ஆளொருவருக்கு வழங்கப்பட்ட பணிகளுக்காக இலங்கைக்கு வெளியிலிருந்து பெறப்பட்ட பணமாக அல்லது வதிவற்ற வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகளின் உடமையாளர்களினால் தத்தமது கணக்குகளிலிருந்து உடமையாளர்களினால் மீறல் பெறப்பட்ட பணமாக இருக்குமிடத்து அவற்றை உடமையில் வைத்திருக்கலாம்.

4.3 இலங்கையில் வதிபவர்கள் பொருட்கள் மற்றும் பணிகளுக்கெதிராக வதிவற்றோரிடமிருந்து கொடுப்பனவாக வெளிநாட்டு நாணயத்தினை ஏற்றுக்கொள்ளலாம். அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட பணத்தினை விற்பனைத் திகதியிலிருந்து 7 நாட்கள் வரை தமது உடமையில் வைத்திருக்கலாம். அதன் பின்னர் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கில் வரவு வைக்கப்படல் வேண்டும் அல்லது அதிகாரம்பெற்ற வணிகருக்கு விற்றுவிடல் வேண்டும்.

4.4 வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகளைப் பேணும் ஆட்கள் மற்றும் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைப் பேணும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் எந்தவொரு நோக்கத்திற்காகவும் வெளிநாட்டு நாணயங்களில் கடன்பட உரித்துடையவராவர். இரட்டைப் பிரசாவுரிமை உடையவர்கள் மற்றும் இன்னொரு நாட்டில் நிரந்தர வதிவிட விசாவை வைத்திருப்பவர்கள் வீடமைப்பு நோக்கங்களுக்காக வெளிநாட்டு நாணயங்களில் கடனைப் பெறமுடியும். வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைப் பேணும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களும் எந்தவொரு நோக்கத்திற்காகவும் இலங்கை ரூபாவில் கடன்படுவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

4.5 எந்தவொரு ஆளும் ஐ.அ.டொலர் 15,000 மொத்தத் தொகையினை விஞ்சுமிடத்து அதனைச் சுங்கத்திற்குப் பிரகடனப்படுத்துவதன் மூலம் எந்தவொரு தொகையினையும் இலங்கைக்கு எடுத்துவர அல்லது அத்தகைய ஐ.அ.டொலர் 5,000இனை விஞ்சாத

1 அத்தகைய தளர்த்தல்களின் விபரங்கள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளைக் கண்டறிந்து கொள்வதற்குத் தொடர்பான அறிவுறுத்தல்கள்/ பணிப்புரைகள்/ சுற்றறிக்கைகளைப் பார்த்தல் வேண்டும்.

நாணயத் தாள்களை மீண்டும் வெளிநாட்டிற்கு எடுத்துச் செல்லவும் அனுமதிக்கப்படுகின்றார்.

4.6 இலங்கையில் வதியுமொருவர் ஐ.அ.டொலர் 10,000 பெறுமதியினை விஞ்சுமிடத்து அல்லது நாணயத் தாள்களை ஐ.அ.டொலர் 5,000 விஞ்சுமிடத்து அதனைச் சுங்கத்திற்குப் பிரகடனம் செய்வதன் மூலம் எந்தவொரு தொகையினையும் வெளியே எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கப்படுகின்றார்.

4.7 இலங்கையில் வதியுமொருவர் ஒரு நபருக்கு ரூ.20,000/- வரையான இலங்கை நாணயத்தினை இறக்குமதி செய்யவோ ஏற்றுமதி செய்யவோ முடியும்.

4.8 பின்வரும் ஆட்கள் இலங்கைக்கு வெளியே கணக்குகளைத் திறக்கவும் தொழிற்படுத்தவும் பேணவும் முடியும்:

அ. வியாபாரம், கல்வி அல்லது மருத்துவ நோக்கங்களுக்காக தற்காலிகமாக இலங்கையை விட்டுச்சென்ற இலங்கையில் வதியும் ஆள்

ஆ. இலங்கைக்கு வெளியே தொழில்சார் நிபுணத்துவ அல்லது தொழில்சார் பணிகளை வழங்குகின்ற இலங்கையிலுள்ள ஆளொருவர் அல்லது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கம்பனி/ நிறுவகம்

இ. இலங்கைக்கு வெளியே முதலீடு செய்வதற்கு அமைச்சரினால் அனுமதிக்கப்பட்ட தனிப்பட்ட ஆள் அல்லது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கம்பனி/ நிறுவகம்

ஈ. வணிகப்பொருட்களின் ஏற்றுமதியாளரொருவர்.

உ. இன்னொரு நாட்டிலிருந்து செல்லுபடியாகக்கூடிய நிரந்தர வதிவிட அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொண்டுள்ள ஆளொருவர்.

ஊ. இரட்டைப் பிரசா உரிமையைக் கொண்டுள்ள ஆள்.

எ. வெளிநாடொன்றில் கல்விக்காக இலங்கைக்கு வெளியே செல்லும் நோக்கத்தினையுடைய இலங்கையில் வதியும் ஆளொருவர் அந்நாட்டில் விசா வழங்கும் அதிகாரியினால் மாணவர் விசாவினைப் பெறும் நோக்கத்திற்காக அத்தகைய நாட்டில் கணக்கொன்றினைத் திறந்து பேணுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்ற அத்தகைய ஆள்.

4.9 இலங்கையில் வதியுமொருவர் வதிவற்ற ஒருவருடன் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளுதல்.

அ. பங்குகளை வழங்குதல் மற்றும் மாற்றல் செய்தல் தொடர்பில் வதிவற்றவருக்குக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்/ அல்லது அவரிடமிருந்து கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுதல்.

ஆ. அனுமதிக்கப்பட்ட ஆட்களினால் இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட முறிகள் தொடர்பான கொள்வனவுகள், மாற்றல்கள் மற்றும் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு.

இ. ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் தொடர்பில் வெளிநாடுகளிலுள்ள, இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிச் சபைகள் மற்றும் வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்களுக்குக் கொடுப்பனவுகளைச் செய்யவும் அத்துடன் வரவு வைக்கவும்.

ஈ. இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் தொடர்பில் அனுமதிக்கப்பட்ட ஆட்களினால் கொள்வனவு செய்வதற்கு, மாற்றல் செய்ய அல்லது கொடுப்பனவுகளைச் செய்வதற்கு.

உ. அரச வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட ஆட்களுக்கு இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட உரிமத்துடன் தொழிற்படும் கூறுநம்பிக்கைகளிலுள்ள கூறுகள் தொடர்பில் வழங்குதல், மாற்றல் செய்தல் மற்றும் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு.

ஊ. வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு, இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்கீட்டு நியமச் சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வியாபார தொழில்முயற்சிகள் என வகைப்படுத்தப்பட்ட கம்பனியொன்றிலுள்ள இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகளை வழங்குவதற்கு மற்றும் மாற்றல் செய்வதற்கு.

எ. இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றிலுள்ள இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத தொகுதிக் கடன்களை வதிவற்ற முதலீட்டாளருக்கு வழங்குவதற்கு மற்றும் மாற்றல் செய்வதற்கு.

ஏ. அசையாச் சொத்துக்கள் தொடர்பில் வதிவற்றவர்களுக்கு ரூபாவில் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு.

ஐ. எந்தவொரு நோக்கத்திற்காகவும் அதாவது பிணையங்களைக் கையேற்பதற்கு மற்றும் ஏதேனும் மற்றைய மூலதன அல்லது நடைமுறை மாற்றல்களுக்கான இலங்கைக்கு வெளியே கொடுப்பனவுகளைச் செய்வதற்காக வதியாதோர் வெளிநாட்டு நாணயம் கணக்கு, வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு உடமையாளர்கள் அவர்களது கணக்குகளிலுள்ள நிதியங்களைப் பயன்படுத்துவதற்கு.

4.10 இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவருக்கு இலங்கையில் வதியும் ஆளொருவர் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக கொடுகடன் அட்டை/ பற்று அட்டைகளைப் பயன்படுத்தி வெளிநாட்டுச் செலாவணியில் கொடுப்பனவுகளைச் செய்தல்.

4.11 வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கு மற்றும் வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு ஆகியவற்றின் உடமையாளர்கள் பங்குகளை அல்லது

5

சொத்துக்களைக் கொள்வனவு செய்வது உட்பட ஏதேனும் நோக்கங்களுக்குத் தமது கணக்குகளிலுள்ள நிதிகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கு.

4.12 இலங்கைக்கு வெளியேயுள்ள வதிவோரிடமிருந்து கடன்களைப் பெற்றுக்கொள்வதற்காக உள்நாட்டு ரீதியாக கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்.

4.13 விபரிக்கப்பட்டவாறான வரையறைகள் மற்றும் அனுமதிக்கப்பட்ட முதலீடுகளுக்குட்பட்டு இலங்கைக்கு வெளியே முதலீடு செய்யும் வதிவோர்.

4.14 வெளிநாட்டு அலுவலகங்களை ஏற்படுத்திப் பேணும் நோக்கத்திற்காக நிதியங்களை மாற்றல் செய்வதற்காக இலங்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ள கம்பனிகள் மற்றும் பங்குடமைகள்

4.15 தடுத்துவைக்கப்பட்டுள்ள கணக்குகளிலுள்ள நிதிகளைத் தாய்நாட்டிற்கு அனுப்புதல்:

அ. மற்றொரு நாட்டில் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டுள்ள இலங்கையரொருவர்:

- ஆரம்ப புலம்பெயர்வுப் படியான ஐ.அ.டொலர் 150,000 மற்றும் அதனைத் தொடர்ந்து ஆண்டிற்கு ஐ.அ.டொலர் 20,000 கொண்ட படி.
- ஊ.சே. நிதியம், ஊ.ந. நிதியம், ஓய்வூதியம், பணிக்கொடை மற்றும் ஏனைய பல ஓய்வுகால நன்மைகளைக் குறித்துரைக்கப்பட்ட கணக்கினூடாகக் கட்டுப்பாடெதுவுமின்றி மாற்றல் செய்யமுடியும்.

ஆ. இலங்கையரல்லாதோர் ஆண்டுதோறும் ஐ.அ.டொலர் 20,000 இனை அனுப்புவதற்கு

4.16 இலங்கையிலுள்ள எந்தவொரு ஆளும் இறக்குமதி செய்யப்பட்ட அத்துடன்/ அல்லது ஏற்றுமதி செய்யப்பட்ட அத்தகைய தங்கத்தின் அளவு, பெறுமதி மற்றும் நோக்கம் என்பனவற்றைச் சுங்கத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு பிரகடனப்படுத்துவதற்குட்பட்டு வாங்குவதற்கு, விற்பதற்கு இலங்கைக்குள் இறக்குமதி செய்ய மற்றும் இலங்கையிலிருந்து ஏற்றுமதிசெய்ய அனுமதிக்கப்பட்டனர்.

4.17 கல்வி நோக்கங்களுக்காக இலங்கைக்கு வெளியே செல்லும் இலங்கையர்கள் வெளிநாடுகளிலுள்ள வங்கிகள், நிதியியல் நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் அல்லது கல்வி நிறுவனங்களிலிருந்து கடன் பெறவும் அதிகாரம்பெற்ற வணிகரொருவரூடாக இலங்கையிலிருந்து அனுப்பப்பட்ட நிதியத்தினூடாக அத்தகைய கடன்களை மீளச் செலுத்தவும்.

4.18 இலங்கையில் பணிபுரியும் இலங்கையரல்லாதவர்கள் அவர்களது சம்பளங்கள், கூலிகள் மற்றும் ஏனைய நன்மைகள் உட்பட கொடுப்பனவுகளை அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் வரவு வைக்க அனுமதிக்கப்பட்டனர்.

## 5. முன்னோக்கிச் செல்லுதல்

1970 களிலிருந்து பொருளாதாரம் மற்றும் வர்த்தகக் கொள்கைகள் தாராளமயப்படுத்தப்பட்டதன் விளைவாக, இலங்கை மேலே விபரிக்கப்பட்டவாறு எல்லைகடந்த மூலதனப் பாய்ச்சல்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களைப் படிப்படியாகப் பெற்றிருக்கிறது. அதிகரித்த மூலதன உட்பாய்ச்சல்கள் குறிப்பாக, உள்நாட்டு முதலீடுகளுக்கான, துணைநிரப்பு நிதியிடலாகக் காணப்பட்ட வேளையில் பன்னாட்டு மூலதனச் சந்தைகளுடன் ஒருங்கிணைக்கப்படுவதற்கான வாய்ப்புக்களையும் வழங்குகின்றது. மற்றைய பல விடயங்களுடன் வெளிநாட்டு முதலீடுகளுக்கான முன்னுரிமை வாய்ந்த நாடொன்றாக நாடு கவர்ந்திழுக்கும் தன்மையை இது கொண்டிருப்பது நாட்டின் மூலதனக் கணக்கின் கட்டுப்பாடற்ற தன்மையின் அளவினைப் பொறுத்திருக்கும். எனவே, முன்னொப்புதல்கள், அதிகளவு நேரத்தினை வீணடிக்காத நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் இல்லாமல் நிதிகளை உள்ளேயோ அல்லது வெளியேயோ அனுப்பமுடிவது வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதிலும் கவர்வதிலும் முக்கியமானதொரு காரணியாக விளங்குகிறது.

மேலே சுருக்கமாகத் தரப்பட்டவாறு, மூலதனக் கணக்குகள் தொடர்பான வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள், பன்னாட்டு நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதில் பெருமளவு வினைத்திறனை எய்துவதனையும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு மேலும் வசதியளிப்பதற்குமான குறிக்கோளுடன் படிப்படியாகத் தளர்த்தப்பட்டன. எனினும், நாட்டிற்கான மூலதன உட்பாய்ச்சல்களும் நாட்டிலிருந்தான வெளிப்பாய்ச்சல்களும் இன்னமும் போதுமான கட்டுப்பாடுகளுக்குட்பட்டே இருக்கின்றன என்ற பொதுவான உணர்வொன்று காணப்படுகிறது. இப்பிரச்சனைகளை வெளிப்படையான விதத்தில் கட்டுப்படுத்தும் பொருட்டு அரசாங்கம் அதன் அண்மைய வரவு செலவுத்திட்டத்தில் புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளமை பற்றிய அறிவித்தல்களை வெளியிட்டது. இதற்கமைய, புதிய வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவக் கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்துவதற்கான பூர்வாங்க வேலைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றதுடன் புதிய வெளிநாட்டுச் செலாவணி மசோதா பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் அரச வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டிருக்கிறது.

உசாத்துணைகள்:

1. இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்

2. இலங்கை மத்திய வங்கி (1953). 1953அம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம், கொழும்பு, இலங்கை மத்திய வங்கி.

3. Kumari Jayawardena & Jennifer Moragoda (2008). N.U. Jayawardena The First Five Decades.

4. சமரசிறி. பி. (2008), செலாவணிக் கட்டுப்பாடு மற்றும் பொருளாதாரத்தின் மீது அவற்றின் பொருளாதாரத் தாக்கம்.

5. Sessional Paper XIV - 1949, November 1949 Report on the Establishment of a Central Bank for Ceylon.

5

2015 இல் ஐ.அ.டொலர் 6,732 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இல் ஐ.அ.டொலர் 8,709 மில்லியனுக்கு கணிசமான அளவால் அதிகரித்தது. இதேவேளையில், வெளிநாட்டுச் செலாவணியின் வழங்கல் மற்றும் கேள்வியிற்கிடையிலேயான கணிசமான வேறுபாட்டிற்கு மத்தியில், செலாவணி வீதத்தின் கணிசமான தேய்மானமடைதலை தணிப்பதற்காக 2016இல் தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 768 மில்லியனை வழங்கி உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கி தலையிட்டது. இது 2016இல் ஐ.அ.டொலர் 1,132 மில்லியன் உள்ளீர்த்தல் மற்றும் ஐ.அ.டொலர் 1,900 மில்லியன் வழங்கலையும் உள்ளடக்கியது. எனினும், சென்றாண்டில் மத்திய வங்கியின் ஐ.அ.டொலர் 3,429 மில்லியனின் விற்பனை மற்றும் ஐ.அ.டொலர் 179 மில்லியன் கொள்வனவுடன் ஒப்பிடுகையில், 2016இல் மத்திய வங்கியின் தலையீடு குறைவாகக் காணப்பட்டது. அரச பிணையச் சந்தைகளில் வதிவற்ற வெளிநாட்டு முதலீட்டாளர்களிலிருந்து எழும் கேள்வியினால் பெருமளவில் மத்திய வங்கி தனது தலையீட்டை மட்டுப்படுத்தியமையால் 2016இன் இரண்டாமரையாண்டுப் பகுதியில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் காரணமாக தேறிய வழங்கல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

**வர்த்தக வங்கிகளின் தேறிய திறந்த நிலைமை மற்றும் முன்னோக்கிய கட்டணங்களின் அசைவுகளை பிரதிபலிக்கும்வகையில், 2016இல் குறுங்காலத்தில் தேய்மானமடைதல் எதிர்பார்ப்புகளேயே உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் பங்கேற்பாளர்கள் குறிப்பிட்டார்கள்.** இதற்கேற்ப, 2016 இல் செலாவணி வீதத்தின் தேய்மானமடைதல் சந்தை எதிர்பார்ப்புக்களை பிரதிபலிக்கும் வகையில், ஒரு-மாத உடன்படிக்கைகளுக்கான முன்னோக்கிய கட்டணங்கள் சராசரி வட்டி வீத வேறுபாடுகளுக்கு மேலாகவே காணப்பட்டன. எனினும், ஆண்டுப்பகுதியில் மூன்று-மாதங்கள் மற்றும் ஆறு-மாதங்கள் முன்னோக்கிய கட்டணங்கள் வட்டி வீத வேறுபாடுகளுக்கு கீழே காணப்பட்டு செலாவணி வீத வருவாய்கள் முன்னேற்றமடையுமென்ற எதிர்பார்ப்புக்களை சுட்டிக்காட்டியது. இதேவேளையில், ஆண்டுப்பகுதியில் சந்தையின் குறுங்கால தேய்மான எதிர்பார்ப்புக்களை சுட்டிக்காட்டும் வகையில் வர்த்தக வங்கிகளின் ஆரம்ப திறந்த நிலைமை தொடர்ந்தும் நேர்கணியமான மட்டத்தில் காணப்பட்டது.

5